தமிழ் பேசும் மக்களின் தேசிய சஞ்சிகை

# இருக்கிறம்

ඉරුක්කිරම්

வார இதழ்

ஒரு பொல்லாப்புமில்லை

காத்திருப்பு 01 இருக்கை 01



உண்மையின் பதிவு

## இரவுநேர ரயில் பயணங்களில் நடப்பது என்ன?

30/-

04.04.2011

...MENTARY COPY



## விடுதலையின் பின்னரும் தொடரும் அச்சுறுத்தல்



## முல்லைத்தீவில் மாறும் பெயர்களால் மாற்றம்பெறுமா தமிழர் மனங்கள்?

## காணாமல் போனவர்களும் வெள்ளைவான் மர்மங்களும்!

# செயலிழக்கிறது கொழும்பு மாநகரசபை புதிதாக பெருநகரக் கூட்டுத்தாபனம்

கொழும்பு மாநகரசபை உள்ளிட்ட ஐந்து உள்ளூராட்சி சபைகளை ஒன்றிணைத்து பெருநகர கூட்டுத்தாபனமாக (Metropolitan City Corporation) மாற்றுவதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இது தொடர்பான தீர்மானமொன்று அண்மையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகரசபை தெகிவளை-கல்கிசை மாநகரசபை, ஸ்ரீ ஜயவர்த்தனபுர-கோட்டே மாநகரசபை, கொலன்னாவ நகரசபை, கொட்டிகாவத்த - முல்லேரியா பிரதேசபை ஆகியவற்றை ஒருங்கிணைத்தே இந்த பெருநகரக் கூட்டுத்தாபனம் உருவாக்கப்படவுள்ளது.

இந்த ஐந்து உள்ளூராட்சி சபைகளினதும் நிர்வாகங்கள் இதன்மூலம் பெருநகர கூட்டுத்தாபனத்தினூடாகவே மேற்கொள்ளப்படும். இதற்குத் தலைமை தாங்கும் நகர ஆளுனர் (City Governor) ஒருவரை ஜனாதிபதியே நியமிப்பார்.

இந்த ஐந்து உள்ளூராட்சி சபைகளினதும் தலைவர்கள், துணைத் தலைவர்களையும் எதிர்கட்சியில் இருந்து தலா ஒருவர் வீதம் உள்ளடக்கியதாக இந்த பெருநகரக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாக அமைப்பு உருவாக்கப்படும்.

அத்துடன் நிர்வாகத்துக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐந்து உள்ளூராட்சி சபைகளில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்களைக்கொண்ட 12 ஆலோசனை சபைகள் நியமிக்கப்படவுள்ளன.

கொழும்பு மாநகரசபையைச் செயலிழக்கச் செய்வதற்கு அரசாங்கம் திட்டமிடுவதாக வெளியான செய்திகளை அரசாங்கம் முற்றாக நிராகரித்திருந்தது. எதிரணியின் செல்வாக்குமிக்க கொழும்பு மாநகர சபை உள்ளிட்ட பகுதிகளின் நிர்வாகத்தை ஜனாதிபதியின் கைக்குள் கொண்டுவரும் வகையிலேயே பெருநகர கூட்டுத்தாபனம் உருவாக்கப்படவுள்ளது.

## யாழ். நிர்வாகம் விரைவில் அதிரடிப் படையினர் வசம்

தற்போது இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள யாழ்ப்பாண நிர்வாகம் எதிர்வரும் காலங்களில் விசேட அதிரடிப்படையினரிடம் வழங்கப்படலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மீண்டும் ஓர் யுத்தம் வரலாம் என்ற அச்சத்தினாலேயே இவ்வாறான நடைமுறை கொண்டுவரப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அண்மைக்காலமாக யாழில் அதிகரித்துக் காணப்படும் கொலை, கொள்ளைச் சம்பவங்களால் பீதியடைந்துள்ள மக்கள் விசேட அதிரடிப்படையினர் வசமாகும் யாழ்ப்பாணம் எவ்வாறு எதிர்காலத்தில் இருக்குமோ என எண்ணத் தொடங்கியுள்ளனர்.

மீண்டும் இறுக்கமானதோர் சூழ்நிலை தோன்றலாம் எனவும் தெரிவிக்கின்றனர். அண்மையில் இங்கு புதிய பல விசேட அதிரடிப்படை முகாம்கள் அமைக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

## படையிலிருந்து தப்பியோடியோருக்கு ஆபத்து ஆசிய மனித உரிமை மையம் தெரிவிப்பு

இலங்கை இராணுவத்திலிருந்து தப்பியோடியோடிய ஒருவரை அவரது வீட்டிற்குள் அத்துமீறி மிரட்டிய நிலையில் பொலிஸாரினால் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டத்துக்கு எதிராக பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை ஆசிய மனித உரிமை மையத்துக்கு பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்த நிலையில் தற்போது மிகவும் மிரட்டப்பட்டு அச்சுறுத்தப்பட்ட நிலையில் இவர்களது வாழ்வுநிலை இருப்பதாக இலங்கை அரசாங்கத்தின்மீது இந்த அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

## யாழில் இளைஞன் கடத்தப்பட்டு சித்திரவதையின் பின் விடுதலை

மீசாலை மேற்கைச் சேர்ந்த கதிரவேலு அஜந்தன் (வயது 29) என்ற இளைஞன் தபாற்கந்தோர் வீதியூடாக ஸ்டான்லி வீதிக்குச் செல்லும்போது வெள்ளைவானில் வந்த இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டார்.

லண்டனிலிருந்து வந்த மேற்படி இளைஞன் கடத்தப்பட்டு 27 மணித்தியாலங்களின் பின்னர் வயல் வெளியில் வீசப்பட்டு காயங்களுக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். "கடத்தியவர்கள் எனது கண்களையும் கைகளையும் கட்டிவிட்டு முட்கம்பிகளாலும் மரச்சட்டங்களாலும் பலமாகத் தாக்கினர். பல இடங்களில் காயம் ஏற்படுமளவுக்கு சிகரெற்றினால் சுட்டனர்" எனத் தெரிவித்தார்.

மேலும் ஒருவர் சிங்கள மொழியில் கேள்விகள் சொல்ல இன்னொருவர் அதனை தமிழில் மொழிப்பெயர்த்துக் கேட்டவாறு லண்டனுக்கு சென்றதற்கான காரணம், அதற்கான பணம் எவ்வாறு கிடைத்தது, திரும்பி வந்ததற்கான காரணம் என்பவற்றை விசாரித்ததோடு வங்கி அட்டைகள், பர்ஸ் என்பவற்றையும் எடுத்து வங்கியில் எவ்வளவு பணம் உள்ளது என்றும் விசாரித்ததாகத் தெரிவித்த இளைஞன், குறித்த விசாரணைகள் மற்றும் தாக்குதல்கள் வீடொன்றில் வைத்தே இடம்பெற்றதாகவும் தெரிவித்தார்.

குறித்த இளைஞன் கடந்த டிசம்பர் மாதம் மாணவர் விசாவில் லண்டன் சென்றிருந்தார். தற்போது விடுமுறையில் தனது சொந்த இடத்துக்கு வந்திருந்த அவர் நண்பரைச் சந்திப்பதற்காக யாழ்நகருக்குச் சென்றபோதே இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டார்.

## கூட்டமைப்புக்குள் ஒற்றுமை குறைகின்றது

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அண்மையில் இலங்கைக்கான ஜப்பான் தூதரகத்திற்கு இரண்டு பிரிவாகச் சென்று ஜப்பான் பிரதித் தூதுவரை சந்தித்து சுனாமி அனர்த்ததின் இழப்புக்களுக்காக தங்களது அனுதாபங்களைத் தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சி. சிறிதரன் மற்றும் சீனித்தம்பி யோகேஸ்வரன் ஆகியோரே துதரகத்துக்குச் சென்று தங்களின் அனுதாபங்களைத் தெரிவித்துள்ளனர்.

இம்மூவரும் தூதரகத்துக்குச் சென்றிருந்தாலும் இவர்கள் இரண்டு பிரிவாகவே சென்று அனுதாபங்களை பகிர்ந்து கொண்டுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கல நாதன், சீ. யோகேஸ்வரன் ஆகியோர் காலை 10.30 மணிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறிதரன் அதன் பின்னருமே துதரகத்துக்குச் சென்றுள்ளனர்.

ஒரு நாட்டின் தூதரகத்துக்கு தமிழ் மக்கள் சார்பாக அனுதாபம் தெரிவிக்கச்சென்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் ஏன் இவ்வாறு தனித்தனியாகச் சென்று அனுதாபம் தெரிவித்தார்கள்? ஒற்றுமையின் அடிப்படையில் செயற்படுகின்றார்களா அல்லது தனிப்பட்ட அரசியல் நலனின் அடிப்படையில் செயற்படுகிறார்களா என மக்கள் மத்தியில் கேள்வி எழுகின்றது.

இதேவேளை ஜப்பான் தூதரகத்துக்கு தனியாகச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினரின் புகைப்படம் மட்டுமே ஊடகங்களில் வெளிவந்துள்ளன. மற்ற இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் தூதரகத்துக்குச் சென்ற புகைப்படங்களைப் பெறும் வகையில் செல்வம் அடைக்கலநாதனிடம் கேட்டபோது அவர் இவ்வாறு கூறினார்.

"ஜப்பானில் இன்று ஏற்பட்டுள்ள சுனாமி அனர்த்தம் உண்மையில் பாரிய இழப்பாகும். கடந்த காலங்களில் 2004 ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின்போது ஜப்பான் நாட்டு மக்கள் எமக்கு செய்த உதவிகளை மறக்கமுடியாது.

கட்டாயம் அவர்களின் அனுதாபத்தில் நாமும் பங்கெடுக்க வேண்டும். இந்நிலையில் நாங்கள் அனுதாபம் தெரிவிக்கவே சென்றோம். அதனைப் புகைப்படம் எடுத்து விளம்பரம் செய்யும் நோக்கில் செல்லவில்லை" என்றார். இக்கருத்தை வரவேற்கலாம். ஆனால் மரண வீட்டிலும் கமராவுடன் அலையும் அரசியல்வாதிகளும் இருக்கத்தான் செய்கிறார்கள்!

## வடபகுதியிலுள்ள போராளிகளை ஒதுக்கும் தமிழர்கள்; அச்சுறுத்தல் நிலைக்குள் வாழ்வு

இலங்கையில் போர் முடிவுக்கு வந்து இரண்டு வருடங்களாகிவிட்ட நிலையில் வடபகுதியிலிருக்கும் முன்னாள் விடுதலைப்புலிகள் அமைப்பு உறுப்பினர்கள் தாம் சமூகத்தால் புறக்கணிக்கப்படுவதாக கவலை தெரிவித்துள்ளனர்.

தேசிய மட்டத்திலான நல்லிணக்க நடவடிக்கைகளில் அவர்களை உட்படுத்த வேண்டிய அவசியம் குறித்து பேசப்படுகின்ற நிலையில் தொழில், பாதுகாப்பு, திருமணம், வீட்டுவசதி போன்ற பல வகைகளிலும் தாம் புறக்கணிக்கப்படுவதாக அவர்களில் பலர் கூறியுள்ளனர்.

பல முன்னாள் போராளிகளுக்கு திருமணம்செய்ய தமது குழந்தைகளை அனுமதிக்க பல பெற்றோர் தயக்கம் காட்டுவதாகவும் அவர்கள் கூறுகின்றனர். தமது சொந்த ஊரிலேயே தமக்கு வாடகைக்குகூட இடம்தர மறுக்கப்படுவதாக முன்னாள் பெண் போராளி ஒருவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் ஆட்சிக் காலத்தின்போது கலப்புத் திருமணம் செய்த போராளித் தம்பதிகளில், ஆண் காணாமல்போன நிலையில் அவரது குடும்பத்தால் சாதியை காரணம்காட்டி அவரது மனைவி புறக்கணிக்கப்படுவதான நிலைமையும் யாழ்ப்பாணத்தில் காணப்படுவதாக யாழ். அரசசார்பற்ற ஒன்றியங்களின் தலைவரான கேசவன் தெரிவித்துள்ளார்.

## தமிழ்ப் பெண் ஊழியர்கள் பொட்டு வைக்கக்கூடாது

### ரூபவாஹினி அறிவிப்பு

இலங்கை அரச தொலைக்கட்சியான ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஐ (நேத்ரா) அலைவரிசையில் ஒளிபரப்பாகும் தமிழ்ச் செய்திகளை வாசிக்கும் தமிழ்ப் பெண்கள் நெற்றியில் பொட்டு வைக்கக் கூடாதென நிர்வாகம் கடுமையான உத்தரவு பிறப்பித்துள்ளதாக அதன் தமிழ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த உத்தரவை மீறிச்செயற்பட முயற்சிக்கும் பெண்களைச் செய்தி வாசிப்பிலிருந்து உடனடியாக நிறுத்துமாறு கண்டிப்பான உத்தரவை நிர்வாகம் விடுத்துள்ளது. சில நாட்களுக்கு முன்னர் ஒரு தமிழ்ப் பெண் நெற்றியில் பொட்டு வைத்து குங்குமமும் பூசியிருந்ததைக் கண்ட ரூபவாஹினியின் உயர்மட்டம் பொட்டு வைக்கக்கூடாது, குங்குமமும் பூசக்கூடாது என்ற கட்டுப்பாட்டைக் கொண்டுவந்துள்ளது. தமிழ் மக்களின் மத, காலாசாரப் பண்பாடுகளுக்குத் தடைவிதிக்கும் வகையில் நிர்வாகம் இவ்வாறு நடந்துகொண்டுள்ளமை தொடர்பில் அங்கு கடமையாற்றும் தமிழ் ஊழியர்கள் மத்தியில் அதிருப்தியும் வேதனையும் ஏற்பட்டுள்ளதாக தமிழ்ப் பெண் ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயத்தில் இங்கு கடமையாற்றும் தமிழ் உயரதிகாரிகள்கூட எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்காத நிலையில் நிர்வாகத்தின் உத்தரவினை அப்படியே கடைப்பிடிக்குமாறு தமிழ்ச் செய்தி வாசிக்கும் பெண் அறிவிப்பாளர்களுக்குத் தெரிவித்துள்ளமை குறித்து தமிழ் ஊழியர்கள் மத்தியில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முகமாலையில் மீண்டும் சோதனைச் சாவடி

யாழ்ப்பாணத்திற்கு வருவோர், வெளியேறுவோரை சோதனைகளுக்கு உட்படுத்துவதற்காக முகமாலையில் இராணுவத்தால் மீண்டும் சோதனை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

போர் நிறுத்த காலப்பகுதியில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வெளியேறுவோரும் உள்வருவோரும் முகமாலைப் பகுதியில் இராணுவத்தினரின் சோதனைக்கெடுபிடிகளுக்கு உட்படுத்தப்பட்டு வந்தனர்.

போர் நிறைவடைந்ததாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் முகமாலைப் பகுதியில் சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை. இந்நிலையில் தற்போது மீண்டும் முகமாலைப் பகுதியில் சோதனை நடவடிக்கைகளுக்கான அனைத்து நடவடிக்கைகளும் நிறைவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆண்கள் ஒரு புறமாகவும் பெண்கள் ஒருபுறமாகவும் சோதனைகளுக்கு உட்படுத்துவதற்கான அறிவிப்புக்கள் எழுதித் தொங்கவிடப்பட்டுள்ளதாக ஏ-9 வீதியால் பயணித்த பெண்மணி ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

# முல்லைத்தீவில் மாறும் பெயர்களால் மாற்றம்பெறுமா தமிழர் மனங்கள்?

இதிகாச காலம் தொட்டு தமிழருக்கான வரலாற்று அடையாளத்தைக் கொண்ட இடங்களில் வன்னியும் வன்னியைச் சார்ந்த முல்லைத்தீவுப் பிரதேசமும் பிரதானமானதாகும்.

குறிப்பாக முல்லைத்தீவுப் பிரதேசம் வடகிழக்கு இணைப்பின் தொடுவாயாகும். வடகிழக்கு இணைப்பால் ஈழத்தமிழரின் பாரம்பரியம், புராதன கால ஆட்சி அதிகாரம் பற்றிய ஆவணங்கள் வெளிப்பட்டு விடலாம் என்ற அச்சம் சிங்களத்திற்கு ஏற்பட்டது இன்று நேற்றல்ல. தமிழ்ப் பிரதேசங்களில் வாழும் தமிழரின் பண்பாட்டுத் தொடர்புகள் துண்டிக்கப்படுவதால் தமிழர் அடையாளங்களைச் சிதைக்கலாம் என்றும், அதனால் சிங்களத்தின் மேலாதிக்கக் கொடியின் கீழ் ஈழத்தில் தமிழர்களை சதாகாலமும் ஏதிலிகளாகவும் கொத்தடிமைகளாகவும் வைத்திருக்கலாம் என்ற கட்டமைப்பு சரிவரவேண்டும் என்பதற்காகவும் பல முனைப்புகள் நடந்தேறி வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

முல்லைத்தீவு பகுதியில் அமைந்த குமுழமுனை, தண்ணீரூற்று, தண்ணீர்முறிப்பு, தண்ணீர் முறிப்புக் குளம், குறுந்தூர மலை, வெள்ளை மலை, ஒட்டுசுட்டான் போன்றவை வன்னியன் ஆட்சியில் குறித்தறியப்பட்ட பகுதிகளாகும். இதற்கான காரணம் என்னவென்றால் நன்னீர் கொண்ட வளமிக்க பகுதியாகையால் மேட்டுப் பயிர்ச்செய்கையும் அதேபோல் கிழக்குப் பக்கமாக கடல்வளமும் நிறையவே உண்டு. தமிழர் தாயகத்தில் வளம்மிக்க பகுதிகளை அரசு இனம் கண்டு சிங்களவர்களைக் குடியேற்றி வளங்களைச் சுரண்டுவதோடு தமிழர் குடியிருப்புக்களை ஐதாக்கவும் திட்டங்களை மேற்கொண்டு வருகிறார்கள்.

குறுந்தூர மலைப் பகுதியில் மிகப்பிரபல்யமான அருள்மிகு அய்யன் கோயில் இருந்து வந்ததை எளிதில் மறந்துவிட முடியாது. சிறப்புமிக்க அவ்வாலயத்திற்குக் கிழக்கின் முடிவுறும் பகுதிகளான திருகோணமலை மாவட்டத்தின் திரியாய், தென்னமரவாடி, குச்சவெளி போன்ற இடங்களிலிருந்து தமிழ் பக்தர்கள் குடும்பம் குடும்பமாக மாட்டு வண்டிகளிலும் கால்நடையாக்வும் ஒரு காலத்தில் சென்று வந்தது சிங்களத்தின் கண்களுக்கு உறுத்தலாக இருந்திருக்கும்.

இது எதிர்காலத்தில் வடகிழக்கு இணைப்பிற்கு அடிகோலாக அமையுமென்பதன் வெளிப்பாடுதான் இன்று நடைபெறும் குடியேற்றங்களாகும். அருள்மிகு அய்யன் கோயில் தற்பொழுது அருள்மிகு புத்த கோயிலாக மாறியது தமிழ்மக்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. மேலும் இறுதியாக நடந்த வன்னி யுத்தத்தின் போது தமிழ் மக்கள் ஏராளமானோர் கொன்று குவிக்கப்பட்ட இடங்களில் தண்ணீர் முறிப்புப் பகுதியும் ஒன்றாகும். சர்வதேச அமைப்புகளின் விசாரணையிலிருந்து இலங்கை அரசு தப்புவதற்காக 'தண்ணீர் முறிப்பு' என்ற நாமத்தை மழுங்கடிக்கச் செய்வதால் அவ்வாறான ஒரு அனர்த்தம் நடைபெறவில்லை என்று கூறுவதற்கு வசதியாக இருக்கும். இதன் காரணமாக தண்ணீர் ஊற்று என்ற பெயருக்குப் பதிலாக 'குறுந்தூர்' என்ற பெயரை இலங்கை அரசு முன்னிலைப்படுத்தி வருகிறது. 'தண்ணீர் முறிப்புக் குளம்' என்ற பழம்பெரும் பெயர் 'குறுந்தூர வாவி' என்று பெயர்மாற்றம் பெற்றிருக்கிறது.

குமுழமுனையிலிருந்து 5 அடி தூரத்தில் அமைந்துள்ள தண்ணீர் முறிப்பு என்ற பழைய கிராமத்தில் ஏறத்தாழ 100 தமிழ்க்குடும்பங்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்திருந்தனர். புலிகள் அரசு இறுதி யுத்தத்தின் பின் இடம்பெயர்ந்து வாழ்ந்துகொண்டிருக்கின்ற இக்குடும்பங்களை மீள்குடியேற விடாது தடுக்கின்றனர். தமிழருக்கெதிரான இன அழிப்பை சாதகமாகக் கொண்ட சிங்களத்தின் மற்றுமோர் யுத்தமாக அப்பகுதியில் சிங்கள மீனவ மக்களை இலங்கை அரசு குடியேற்றி வருகிறது. தொடர்ச்சியாக நடைபெற்று வரும் இன ஒழிப்பின் ஒரு பகுதியான சிங்களக் குடியேற்றங்களை எவ்வாறு தடுப்பது? தமிழரின் பாரம்பரிய வாழ்விடங்களில் ஏற்படுத்தப்படும் கலாச்சாரச் சிதைவுகளை எப்படித் தடுப்பது?

இலங்கை இராணுவத்தின் பிடியில் அகப்பட்ட தமிழ்ப் பகுதிகளில் வாழும் பெண்களை வல்லுறவுகளிலிருந்து எப்படி மீட்பது? வறுமையினால் கையேந்தும் எமது தமிழ் உறவுகளை எப்படி மீட்பது? இதுபோன்ற பல பணிகள் தமிழ்மக்களின் தலைகளில் சுமத்தப்பட்டிருந்த போதிலும் இவை பற்றி சிந்தியாது எதுவும் நடக்காததுபோல் எம் மத்தியில் பலர் இருந்து வருகின்றனர். அதோடு குழுச்சண்டைகளும் களியாட்டங்களும் தொடர்ந்து அதிகரித்து வருவதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. தற்காலிகமாக இவற்றையெல்லாம் தள்ளிவைத்துவிட்டு ஒட்டுமொத்த புலம்பெயர் தமிழரும் ஒரு குடையின் கீழ் ஒன்றுபட்டு இன அழிப்பிற்கெதிராக கிளர்ந்து எழவேண்டும். பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் ஈழம் வாழ் தமிழ்மக்களுக்கும் ஒரு பாரிய கடமை உண்டு. அதாவது பாதிக்கப்படும் தமிழ்மக்கள் ஆதாரபூர்வமாகவும் எச்சரிக்கையாகவும் செய்திகளை உலக நாடுகளுக்கும், சர்வதேச ஊடகங்களுக்கும், புலம்பெயர் வாழ் தமிழ் ஊடகங்களுக்கும் தெரியப்படுத்தல் வேண்டும்.






◄ மலையூர் பண்ணாகத்தான் ►

# யாழிலிருந்து ஒரு மொட்டைக் கடிதம்

யாழில் நடைபெறும் பல கலாசார சீரழிவுகள் பற்றி யாழில் இருந்து இருக்கிறமிற்கு வந்த ஓர் பகிரங்க மடல்.. (தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டது)

தமிழர்களின் மனங்களில் ஏற்படுகின்ற சுதந்திர உணர்வை திசை திருப்பி இயல்பாகவே இருக்கும் பாலியல் உணர்வை பெற்றோல் ஊற்றி எரிய விடுவதுபோல் பாலியல் சம்பந்தப்பட்ட சீடிக்கள் வடக்கில் தாராள-மாகவே விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இன்று யாழ்ப்பாணத்தில் மாணவ சமுதாயத்தின் மத்தியில் பாலியல் கல்வியை பல்கிப்பெருக வைப்பதில் 'இராணுவ ஏஜண்டுகள்' முன்னின்று செயற்பட்டு வருகின்றன. வடக்கில் பெற்றோர் தங்கள் பிள்ளைகளை நினைத்து பல்வேறுபட்ட நிர்ப்பந்தங்களால் பயத்தை வெளிக்காட்ட முடியாமல் வயிற்றில் நெருப்பைக் கட்டிய நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள்.

இளந்தலைமுறையினரின் சுதந்திரப் போக்கும் அவர்களுக்கு ஏற்படும் பணத்தேவைகளுக்காக தவறான வழிகளில் பணம்சேர்க்க முயற்சிக்கும் ஒரு சிலந்திவலையாக இந்த பாலியல் தொழில் குடாநாட்டு மாணவர்களையே அதிகம் சிக்கவைக்கின்றது. இதற்கு புலம்பெயர் நாடுகளில் இருந்து எம்மவர்களுக்கு தாராள மாகக் கிடைக்கும் பணமும் ஓர் காரணமாகும். குறிப்பாக மாணவிகளே இதில் அதிகமாக பாதிக்கப்படுகின்றார்கள்.

வடக்கில் தமிழர் சமூகத்தின் கலாசார பாரம்பரியங்களைத் திட்டமிட்டு சிதைக்கச்செய்யும் நடவடிக்கைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது. தாராளமாகவும் சற்றே வெளிப்படையாகவும் நடைபெறும் இந்தப் பாலியல் தொழிலை அதிகாரத்தரப்பு கண்டும் காணாமல் இருந்து வருகின்ற நிலைமையை இன்று யாழில் நன்கு அவதானிக்க முடிகிறது.

அண்மையில் வெறும் கண்துடைபுக்காகவே யாழ்ப்பாணத்திலும் அதன் சுற்றுப்புறத்திலும் சிலர் கைதுசெய்யப் பட்டிருந்தனர்.

இவை அரசிற்கோ பொலிஸ் அதிகாரிகளுக்கோ தெரியாமல் நடைபெறவில்லை. இதுவரையில் எந்த விசாரணைகளும் முற்றுப்பெற்று எவருக்கும் தண்டனை வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு நல்ல புத்திமதி கூறி வளர்த்தெடுக்க வேண்டிய பொறுப்புள்ளவர்கள். பிள்ளைகளின் ஒவ்வொரு நடவடிக்கை குறித்தும் அதிக கவனம் செலுத்தவேண்டும். பாடசாலை நேரங்களில், ரியூசன் நேரங்களில் பிள்ளைகள் வேறு எங்காவது செல்கின்றனரா என அவதானிக்கவேண்டும். பிள்ளையுடன் கூடத்திரியும் நண்பர்கள் குறித்தும் பெற்றோர்கள் அறிந்திருக்க வேண்டும்.

பாடசாலை ரியூசன் தவிர்ந்த நேரங்களில் வெளியிலும் உறவினர் வீடுகளுக்கும் செல்வதாகவும் சுற்றுலா செல்வதாகவும் கூறிவிட்டு தவறான செயல்களில் இளம் வயதினர் ஈடுபடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. எனவே, பெற்றோர்கள் கண்டிப்புடன் கூடிய கண்காணிப்பைத் தம் பிள்ளைகளின்மீது கொண்டிருப்பதன் மூலமே இவ்வாறான சம்பவங்களைத் தடுக்க அல்லது குறைக்கமுடியும்.

நீண்ட காலமாகவே பல சட்டவிரோதச் செயற்பாடுகளற்ற பிரதேசங்களாக விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் யாழ்ப்பாணம் உட்பட்ட பல பிரதேசங்கள் இருந்தன. இதற்கு அவர்களினால் வழங்கப்பட்ட கடுமையான தண்டனைகளும் கட்டுப்பாடுகளுமே காரணங்களாகும். ஆனாலும், இன்று அனைவருமே வெட்கித் தலை குனியுமளவிற்கு நிலைமைவர என்ன காரணம்?

இவ்வாறான பல சட்டவிரோதச் செயற்பாடுகளைக் கண்டும் காணாமலிருக்கும்போக்கையாழ்ப்பாணத்திலுள்ள அரசியல்வாதிகளும் அதிகாரத்திலுள்ளவர்களும் கடைப் பிடிப்பது ஏன்? குறிப்பாக ஊடகங்கள் இதுகுறித்து மௌனித்திருப்பது இவ்வாறான சம்பவங்கள் மேலும் அதிகரித்துச்செல்ல வழிவகுக்கும். இவற்றைத் தடுத்து நிறுத்த நீங்கள் ஒரு பொறுப்பான ஊடகம் என்ற வகையில் என்ன செய்யப்போகின்றீர்கள்...?

**- ஒரு மாணவியின் பெற்றோர்**

வாசகர்களே...!

**'இருக்கிறம்' பற்றிய உங்கள் காத்திரமான விமர்சனங்களையும் ஆலோசனைகளையும் எதிர்பார்க்கின்றோம். வேறெதிலும் பிரசுரமாகாத உங்களுடைய சொந்தப் படைப்புக்களை எங்களுக்கு எழுதி அனுப்பலாம். அனுப்பவேண்டிய முகவரி,**

The Editor
'IRUKKIRAM'
# 03, Torington Avenue,
Colombo - 07

E-mail : irukiram@gmail.com
Skype : irukkiram
Tel : 94 113150836
Fax : 94 112585190
Website: www.irukkiram.tk

04.04.2011

காத்திருப்பு 01 இருக்கை 01

# இருக்கிறம்

ஒரு பொல்லாப்புமில்லை

வார இதழ்

எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் வெளியிடப்படுகிறது.



3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு - 07.
தொலைபேசி : +94 11 3150836
தொலைநகல் : +94 11 2585190
மின்னஞ்சல் : irukiram@gmail.com
இணையம் : www.irukkiram.tk



| | |
|---|---|
| ஆசிரியர் | : அருளானந்தம் சஞ்ஜீத் |
| நிர்வாக ஆசிரியர் | : சாந்தி சச்சிதானந்தம் |
| செய்தி ஆசிரியர்கள் | : வர்ஷ்னி கனகரட்ணம் |
| | தவநாதன் இரவிவர்மன் |
| நிருபர் குழு | : த. சிந்துஜா |
| | க. மாலா |
| | த. சிறீகாந்த் |
| கார்ட்டூன் | : சஞ்ஜீத் |
| பக்க வடிவமைப்பு | : ஏ.ஜே.எம். பிறவ்ஸ் |

கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளிவரும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நாம் பொறுப்பல்ல.


## "மீண்டெழுதல்"

**வணக்கம் உறவுகளே!**

வலிகளைச் சுமக்கும் மனிதப் பிண்டங்கள் மீண்டும் புனித பூமியில் மரணங்களை முத்தமிடத் தொடங்கியிருக்கின்றன. கொலை, கொள்ளை, கற்பழிப்பு, ஆட்கடத்தல் என அதிகாரத்தின் நகங்கள் எம் சமூகத்தின் குரல்வளையை நெரிக்கத் தொடங்கியிருக்கின்றன. மீண்டெழவே முடியாதபடி அழுத்தங்களும் முட்கம்பி வேலிகளும் எம்மீது இறுக்கமாகச் சுற்றியிருக்கின்றன. 'எப்ப வீட்ட போவம்' என்று தன் பிஞ்சுப் பற்களால் முட்கம்பியைக் கடித்தபடி கேட்கும் பிஞ்சுவுக்கு, தான் என்றோ ஒருநாள் நாகங்களின் நச்சுப்பற்களால் கடியுண்டு மரணிக்கப்போவது தெரியாததுதான்.

தினம்தினம் யாழில் அரங்கேறிவரும் சிசுக்கொலைகளும், இளவயதுக் கர்ப்பங்களும் யாழ்ப்பாண கலாச்சாரப் பண்பாட்டு மையத்தையே இன்று சிதைத்திருக்கின்றது. இதில் எவரையுமே குற்றம் சொல்லமுடியவில்லை. ஏனெனில் யாழில் அதிகமான சனத்தொகை விகிதத்தை பெண்களே கொண்டிருப்பதால் வேறு எதை எதிர்பார்க்க முடியும்? சுற்றிவர அறுபதாயிரம் பாதுகாப்புத் தரப்பினர் வேறு. இது போதாதென்று செல்போன், பேஸ்புக், ஸ்கைப், ஆபாசப்படங்கள், மதுபாவனை, போதைவஸ்து என இத்தியாதி கருமாந்திரங்கள் வேறு. இவை எல்லாவற்றையும் விட தென்னிலங்கையிலிருந்து பேசிப் பழக வரும் இனக்கலப்பாளிகள் மீதான எம் இனப்பெண்களின் கவர்ச்சி. இவையே இன்று ஒட்டுமொத்தமாய் எம் சமூகத்தை மாற்றிப்போட்டிருக்கின்றது.

மீட்சி என்ற ஒற்றை வார்த்தை இன்று எம் சமூகத்தினரிடையே பெருவிருட்சமாக வளர்ந்து வருகின்றது. மாற்றத்திற்கான அந்த வேர்கள் மீட்சியிலேயே நிறைவடைகின்றன. மீளுதல் மூலம் எமது அனைத்துக்குமான கதவுகளையும் திறக்கமுடியும் என்ற நம்பிக்கை இன்று எம்மிடையே வலுப்பெற்று வருகின்றது. எனவேதான் மீண்டெழுதல் அவசியமானதாகின்றது. மீளக்குடியேற்றப்பட்ட பகுதிகளில் தினம் தினம் மாறிவரும் ஊர்ப்பெயர்கள் மீண்டெழுதலுக்கான தேவையை எம்மிடையே உருவாக்கிவருகின்றன.

அபிவிருத்தி இன்று உடைந்து தகர்ந்துபோயுள்ள குடியிருப்புக்களுக்கு மட்டுமல்ல. இழந்துபோன எங்கள் சமுதாய பண்பாட்டுக் கோலங்களை மீளப்புதுப்பிக்கவும் தேவையான தொன்றாகியிருக்கிறது. இழந்தவைகளை எண்ணிக் குமையாமல் மீள முயலுதல் சரியானதேயாயினும் கடந்தகால பாதையில்நிகழ்ந்தபிழைகளைகவனத்தில் கொள்ளவேண்டியது கட்டாயமானதே.

'இருக்கிறமும்' இதேபோல்தான் சாம்பலிலிருந்து மீண்டெழத் தொடங்கியிருக்கின்றது. எமது மக்களுக்கான இருப்பிற்காக பயணிக்கும் 'இருக்கிறம்' என்றும் எப்பொழுதும் எல்லோருக்காகவும் இருக்கவேண்டியது காலத்தின் தேவையாகியிருக்கும்.

மீட்சியை விரும்பும் எம்சமூகம் மீண்டெழுமாயின் அது மிகப்பலமானதொரு உயர்ச்சியை உண்டாக்கும். மீள எழுவதற்காக தன்னம்பிக்கையுடன் காத்திருக்கும் உங்களுடன் அடுத்த இதழில் சந்திக்கின்றேன்.

அன்புடன்...

அருள் - சஞ்ஜீத்

**ஆசிரியர்**

## சிலோன் சின்னத்தம்பி

வணக்கம் பாருங்கோ... எப்பிடி சுகமா இருக்கிறியளே..!

வர வர நாட்டில நீதி, நியாயம் எல்லாம் செத்துப் போச்சுது பாருங்கோ. ஆண்டாண்டு காலமா வீரப் பரம்பரையில வந்த மன்னர்கள் ஆண்ட மண் இண்டைக்கு மானங்கெட்டு மண்டியிட்டுக்கிடக்குது. வீரக்கதைகளையும் வெற்றிச் சம்பவங்களையும் சொல்லிச் சொல்லி வளர்ந்த இனம் எங்கட இனம். இண்டைக்கு அகதியாய் அலைஞ்ச கதை களையும் மாற்றானிடம் மண்டியிட்டு மடிப்பிச்சை கேட்ட கதைகளையும் எங்கட பிஞ்சுகள் கேட்கிற காலம் பாருங்கோ. சரி அது போகட்டும். நான் விசயத்துக்கு வாறன்...

நாட்டில இருக்கிற எல்லாச் சாமானும் தனியாரிட்ட போகுது பாருங்கோ. நான் சொல்லுறது உங்களுக்குப் விளங்குமெண்டு நினைக்கிறன். அரசாங்கம், நாட்டிலயிருக்கிற அரச சொத்துக்களையெல்லாம் தனியாரிட்ட தாரைவார்த்து காசாக்கத் தொடங்கியிருக்குது.

இப்பிடித்தான் யாழ்ப்பாணத்தில மாநகரசபைக்குக் கிடைச்சிருக்க வேண்டிய பலகோடி ரூபாய் காசு, சபையைக் கைக்குள்ள வச்சிருக்கிற ஆளும் தரப்பின்ர அதிகாரத் துஷ்பிரயோகத்தால தனியார் வியாபாரி ஒருத்தருக்கு கைமாறிட்டுது பாருங்கோ. யாழ் நகரிண்ட நடுப்பகுதியில ஐஞ்சு மாடிக்கட்டிடம் ஒண்ட யாழ் மாநகர சபை அமைச்சு வருகுது. இதை அமைக்கிறத்துக்கு ஒப்பந்தம் தனியார் வியா பாரி ஒருத்தருக்குத் தாரை வார்க்கப்பட்டுள்ளதாம் பாருங்கோ. இந்தக் கடைத்தொகுதியில் 75க்கும் மேற்பட்ட கடைகளை அமைக்கப்போகினமாம். இதை அமைக்கிறத்துக்கு மாநகர சபையால காசு குடுக்காமல் கட்டடத்தை கட்டுறவரே 'கடை களை வித்து எடுக்குற உரிமையை வழங்கியிருக்கினமாம் பாருங்கோ. அந்த நிறு வனமும் கெதி கெதியா கடைகளை இப்பவே விக்கத் தொடங்கியிருக்குது. யாழ்ப்பாணத்தில கடை வைச்சிருக்கிற ஒருத்தர் மூலமா விற்பனை நடக்குதாம். ஒரு கடை 2 கோடிக்கு கிட்டவாக விக்கினமாம் எண்டு நம்பகமான தகவலொண்டு அடிச்சுச் சொல்லுது பாருங்கோ.

கடைகளை வித்துவாற பணத்தில சில கோடிகள் கட்டடத்தை அமைக்கச் செலவாகிறது போக மிச்சம் அந்த நிறுவனத்துக்கே சேரப்போகுதாம். இந்தக் கட்டடத்தை அமைக்குறதுக்கான கேள்வி கோரல் உள்ளூர் பேப்பர் எதிலையும் வெளியிடேல பாருங்கோ.

கொழும்பில அரச பேப்பரில வந்த விளம்பரத்தைப் பாத்து ஒரேயொரு நிறுவனமே விண்ணப்பிச்சிருக்குதாம். அந்த நிறுவனத்தோட, உடன சபை ஒப்பந்தம் செய்திருக்குது. உள்ளூராட்சி சபை விதிகளின்படி எந்த ஒரு கேள்வி கோரலுக்கும் ஒரேயொரு விண்ணப்பம் கிடைச்சால் திரும்ப கேள்வி கோரணும் எண்ட ரூல்ஸ் இந்த ஒப்பந்தத்தில மீறப்பட்டிருக்குதெண்டு சனங்கள் கதைக்குதுகள் பாருங்கோ. விசாரிச்சு பாத்ததில ஆளுங்கட்சியைச் சேர்ந்த அங்கஜமானவர் இதில சம்பந்தப்பட்டிருக்குறதா தெரியவருகுது. எது எப்பிடியோ நாங்கள் அப்பாவிகள் மோனை. அப்ப நான் போட்டு வரட்டே...

## நக்கல் நையாண்டிப் போடியார்

மட்டக்களப்பு மாவட்டத்துல முஸ்லிம் சனங்க ஜனாதிபதியிலயும் அரசாங்கத்திலயும் நம்பிக்க வச்சிருக்கிறாங்க என்பத இந்த எலக்சன் முடிவுகள் காட்டுது. முஸ்லிம் மக்கள்ட கட்சி முஸ்லிம் காங்கிரஸ் மட்டும்தான் என்பத சனங்க மாத்திக் காட்டிட்டாங்க.

முஸ்லிம் காங்கிரஸ உருவாக்கின காத்தாங்குடியிலயும் கட்சிய சனங்க ஒதுக்கியிருப்பத போராளிங்க யோசிக்கணும்.

போன எலக்சன்ல முன்னாள் அமைச்சர் அமீரலிய திட்டம்போட்டு தோக்கடிச்ச முஸ்லிம் காங்கிரஸ, கோரளப்பத்து எலக்சன்ல பழிக்குப்பழி தீர்த்துள்ளாரு என்பது தெட்டத்தெளிவாகுது.


ஓட்டமாவடியில் காங்கிரஸ் அடஞ்ச தோல்வி பெரிய சரித்திரம். ஏறாவூர் மக்களும் சிந்திச்சி வோட் போட்டிருக்காங்க. ஊழலுக்கும் துரோகத் துக்கும் நல்ல பாடம் படிச்சிக் கொடுத்திருக்காங்க.

யார் ஆண்டாலும் நமக்கென்னப்பா நாம உழச்சாத்தான் சோறு. இவங்கள நம்பி.. நம்பி... ஏமாந்ததுதான் மிச்சம்.. வெள்ளம் வந்து கன நாளாச்சி. மறுகா, ஆக்களயே இங்க காணல. அது, இது தாரண்டாங்க. ஆனா, உடஞ்ச றோடக்கூட இன்னும் திருத்தல. ஆரு வந்தாலும் செய்வம் எண்டுதான் சொல்றாங்க, செஞ்ச பாடாக் காணல. நாம இப்படியே கத்திக்கிட்டு கிடக்க வேண்டியதுதான்.

அவங்களா மனசி வெச்சி, எதும் நல்லது செஞ்சா கண்டுக்க வேண்டியதுதான். அதுவரைக்கும் ஏன்கா, இந்த சங்க ஊதுவான்...?



## கொஞ்ச நேரம்...






# சந்தர்ப்பவாத ஐ.நா. சபையும் சுயநலமான அமெரிக்காவும்

அமெரிக்கா தலைமையிலான லிபியா மீதான மேற்கு நாடுகளின் தாக்குதல் மனித வரலாற்றின் ஒரு மைல்கல் என்றால் மிகையல்ல. பாதுகாப்பதற்கான பொறுப்பு அல்லது ஆங்கிலத்தில் கூறினால் Responsibility to Protect (R2P) என்று சுருக்கமாகக் குறிப்பிடுவார்கள் என்னும் கோட்பாட்டினை முதல்முதலாக சர்வதேச சமூகம் பிரயோகித்த நிகழ்வு இது.

அது மட்டுமல்ல. இக்கோட்பாட்டினை அடிகோலி ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பாதுகாப்புச் சபை, லிபிய மக்களைப் பாதுகாப்பதற்காக இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனக்கோரி முன்னெப்போதும் கண்டிராத வகையில் ஏகோபித்த முறையில் (10 நாடுகள் ஆதரவாகவும் 5 நாடுகள் வாக்களிக்காமலும் நிறைவேற்றப்பட்டது) பிரேரணை 1973இல் நிறைவேற்றியதும் குறிப்பிடத்தக்கதாகும். அது மட்டுமா, ஐரோப்பாவின் சகல நாடுகளும் துருக்கி நீங்கலாக, லிபியா மீதான இராணுவ நடவடிக்கைகளைத் தமது பாராளுமன்றம் மூலமாக அங்கீகரித்திருக்கின்றன. ஆபிரிக்க நாடுகளின் சபையும் இதனை ஆதரித்திருக்கின்றது. இப்படி உலகின் பல துருவங்களான நாடுகள் அனைத்தும் ஒருமித்து குரல்கொடுத்த இந்நிகழ்வினை வரலாற்றுப் பூர்வமானது என்று சொல்லாமல் எப்படிச் சொல்ல?

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர் அத்தகையதான இனப்படுகொலைகளும் ஆயுத வன்முறைகளும் நிகழாமல் எப்படித் தடுக்கலாம் என்று உலகம் சிந்தித்ததன் பயனாக உருவாகியதே அடிப்படை மனித உரிமைகள் சாசனமும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமுமாகும். காலனித்துவ மற்றும் ஏகாதிபத்திய சக்திகளிடமிருந்து அரசுகளைக் காப்பாற்றுவதற்காக சர்வதேச சட்டத்தின் அடிப்படைச்சட்டமாக இறைமை என்னும் கோட்பாடு உருவாக்கப்பட்டது. ஒரு பூகோள எல்லைக்குட்பட்டு (அதாவது நாடு என்று வாசித்துக் கொள்ளுங்கள்) வாழும் மக்கள் ஒருவிதத் தலையீடுமின்றி தங்கள் தலைவிதியைத் தாமே நிர்ணயித்துக்கொள்ளும் உரிமையே இந்த இறைமை ஆகும். ஆனால், இறைமை என்னும் கோட்பாட்டில் இயங்கிய உலகத்தில் பல அநீதிகள் நிகழத்தலைப்பட்டன. நவீன தேசிய அரசுகளின் உருவாக்கத்தின் பயனாக ஒவ்வொரு அரசிற்கும் கீழும் வசிக்கக்கூடிய சிறுபான்மை இனத்தவர்கள் மற்றும் வேறு வேறு சமூகங்கள், குழுக்கள் ஆகியன ஒடுக்கப்படும் அரசியல் நிலைமைகள் உருவாகின.

ஒருபுறம் இராணுவ பலத்துடன் கூடிய தேசிய அரசுகள், மறுபுறம் நிராதரவாக விடப்பட்ட மக்கள் குழுவினர். 1990களின்போது உலகில் நிகழ்ந்த ஆயுத முரண்பாடுகளில் 90 வீதமானவை அரசுக்கும் அதன் பிரஜைகளுக்கும் இடையே நிகழ்ந்த உள்நாட்டு யுத்தங்களாகக் கணிக்கப்பட்டன. இவையே அதிகோரமான வன்முறைகள் நிறைந்த முரண்பாடுகளாகவுமிருந்தன. கற்பனை பண்ணிப்பாருங்கள். தனது பிரஜைகளை எதுவும் பண்ணக்கூடிய அதீத அதிகாரம் படைத்த அரசுகள், அவை இறைமை என்னும் கோட்பாட்டினால் பாதுகாக்கவும் பட்டிருக்கின்றன. நாங்கள் எங்கள் ஊர்களில் கண்ட விஷயங்கள்தானே, இதற்கு வேறு விளக்கங்கள் தேவையில்லை.





1990களில், உலகத்தில் சமாதானத்தை நிறுவுவதற்கு அரசுகளின் பாதுகாப்பு மட்டும் போதாது, மக்களினதும் சமூகங்களினதும் பாதுகாப்பும் தேவை என்னும் உண்மை எல்லோருக்கும் புரியலாயிற்று. எந்தக் குற்றச் செயலையும் செய்துவிட்டு இறை மை என்னும் கொள்கைக்குப் பின்னால் ஒளிந்துகொள்ளும் அரசுகள் கருதி பிரான்ஸிஸ் டெங் என்னும் சட்ட அறிஞர் "இறைமை என்பது ஒரு பொறுப்பு" என்னும் கோட்பாட்டினை முதன்முதலில் வெளிவிட்டார். அதாவது, இறைமை கொண்டிருப்பவர்கள் தமது கைகளில் அது குறித்த ஒரு சமூகப்பொறுப்பினையும் கொண்டிருக்கிறார்கள் என்பதே அது. 2001ஆம் ஆண்டு, ஐ.நா செயலாளர் நாயகம் கோபி அனானின் வேண்டுகோளின் பெயரில் "தலையீடுக்கும் அரசு இறைமைக்குமான சர்வதேச ஆணைக்குழு"வானது பிரான்ஸிஸ் டெங்கின் கோட்பாட்டை விரித்து இனப்படுகொலைகள், யுத்தக்குற்றங்கள் எதிராக மக்களைப் பாதுகாப்பதற்கு ஏதுவாக சர்வதேச சட்டம் இருக்கவேண்டும் என்கின்ற முடிவைத் தெரிவித்தது.

2001 ஆம் ஆண்டு பயங்கரவாதத்திற்கெதிரான யுத்தத்தினை உலகம் கட்டவிழ்த்துவிட்ட காலம். இந்த ஆணைக்குழுவின் சிபாரிசுகள் அவ்வளவு செல்லுபடியாக வில்லை. ஆனாலும், உலகெங்கும் மனிதர்களுக்கு நடந்த அவலங்கள், குறிப்பாக ஆபிரிக்காவின் டார்பூர் மக்களின் போராட்டங்கள் நசுக்கப்பட்ட முறைமைகள் இதைக் கிடப்பினுள் போடவிடவில்லை. 2003 ஆம் ஆண்டு திரும்ப கோபி அனானின் தலைமையின்கீழ் ஒரு சர்வதேச ஐ.நா. குழுவினர், சமாதானம் "எமது பொதுப் பொறுப்பு" (Our Shared Responsibility) என்று கூறி உலக சமாதானத்தைப் பாதுகாப்பதற்கான 101 சிபாரிசுகளை முன்வைத்தது. தமது மக்களைப் பாதுகாக்கும் கடமை முதலில் அரசுகளுக்குத்தான் இருக்கின்றது என்றாலும் அவ்வாறு அரசுகள் பாதுகாக்கத் தவறும்பட்சத்தில் அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு சர்வதேச சமூகத்துக்கே இருக்கின்றது என்று இது தெளிவாகக்கூறியது.

முதன்முதலில் R2P என்னும் கொள்கை இங்குதான் வெளிவிடப்பட்டது என்றும் சொல்லலாம். பிறகென்ன, மெல்ல சிவில் சமூக அமைப்புக்களும் சில நாடுகளுமாக இதனை முன்தள்ள ஆரம்பித்தன. ஆபிரிக்க நாடுகளின் ஒன்றியமானது குற்றச் செயல்களைச் செய்துவிட்டு தண்டனைக்குத் தப்பி வாழ்வதை வன்மையாகக் கண்டிப்பதனை (Impunity என்று ஆங்கிலத்தில் சொல்லுவர்) தனது அடிப்படை விழுமியமாக ஏற்றுக்கொண்டது. 2009 ஆம் ஆண்டு ஜுலை மாதம் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் பொதுச்சபை இரண்டு முழு நாட்கள் விவாதித்து R2P கோட்பாட்டை ஒரு பிரேரணையாக அங்கீகரித்தது.

ஆயிரக்கணக்கான உயிர்ச்சேதங்களுடன் ஈழப்போராட்டம் முடிவடைந்திருந்த காலமிது.

இப்பொழுது அடுத்துவந்த செயலாளர் நாயகமான பான்கீமூன், பிரான்ஸிஸ் டெங்கை இனப்படுகொலைகளைத் தடுக்கும் ஆலோசகராகவும்; திரு. எட்வர்ட் லக் என்பவரை R2P என்பதற்கான விசேட ஆலோசகராகவும் நியமித்திருக்கின்றார். இப்படி அதியுயர் மட்டங்களில் இது ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் இதைப் பற்றிய சர்ச்சைகள் இன்னும் ஓயவில்லை. எதைத் தலையீடு என்பது? எதனை R2P (ஆர்டுபி) என்பது? இதுதான் சர்ச்சையாகும். இப்பொழுதுகூட லிபியாவின் மீது இராணுவ நடவடிக்கை எடுப்பதனை ஆதரித்த நாடுகள்கூட அமெரிக்காவின் தாக்குதலை ஓரவஞ்சகமான தலையீடு என்று வர்ணிக்கத் தவறவில்லை. உண்மையில் மேற்கு நாடுகள் ஒரு இக்கட்டான சூழ்நிலையில்தான் அகப்பட்டுத் தவிக்கின்றன. லிபியாவில் அதன் மக்களுக்கு ஆதரவாகத் தலையிட்டால் அதே மாதிரி மக்கள் கிளர்ந்தெழும் பஹ்ரெயினிலும் சவூதி அரேபியாவிலுமல்லவா செய்யவேண்டும்? ஆனால், அந்த அரசுகள் மேற்கு நாட்டு ஆதரவாளர்கள் அல்லவா, எப்படி அவற்றைக் கவிழ்ப்பது?

இதே போலத்தான் 2007ஆம் ஆண்டும் ரஷ்யாவும் சீனாவும் பர்மாவின் நிலைமையில் அந்த மக்களைப் பாதுகாக்க எடுக்கும் முயற்சிகள் தலையீடாகும் எனச்சொல்லி அதனைத் தடுத்துவிட்டன.

நாடுகளும் தனிமனிதர்கள் போலத்தான். தமது சொந்த நலன்களும் ஆசாபாசங்களும் கொண்டவை என்பதனால் இப்படியான சர்ச்சைகள் தொடர்ந்து கொண்டேயிருக்கும். எப்படியிருந்தாலும் ஆர்டுபி கோட்பாடும் இப்பொழுது லிபியா மீதான தாக்குதலும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மிக முக்கியமானவையாகும். லிபியாவில் இறந்தவர்கள் என்னவோ ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள்தான். லிபிய அரசு கிளர்ச்சியாளர்கள்மீது வான் குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டபடியினாலேயே ஐ.நா. பாதுகாப்புச் சபை, லிபிய வான்வெளியில் பறக்கும் தடையையும் விதித்தது. இத்தடையை அவ்வரசு மீறியதாலேயே அதன் வான்படையைச் சேதமாக்குவதற்காக அமெரிக்கத் தாக்குதல்கள் ஆரம்பமாயின. அப்படியானால், வான் தாக்குதல்களினாலும் பல்குழல் தாங்கித் தாக்குதல்களினாலும் இரசாயன யுத்த முறைமைகளினாலும் முப்பதாயிரத்துக்கும் அதிகமான உயிர்ச்சேதங்கள் ஏற்பட்ட நிலைமைக்கு என்ன செய்திருக்கவேண்டும்?

இனிவருங்காலங்களில் சர்வதேச அரங்குகளில் இலங்கையின் நிலைமை என்னவாகப் போகின்றது என்பது சுவாரசியமாகத்தான் இருக்கப்போகின்றது. நாங்கள் நம்பிக்கை இழக்கத் தேவையில்லை.

# ஒரு தோட்டத் தொழிலாளியின் அவலக்குரல்

◄ யாத்ரா ►

மலையகம் என்றவுடன் நமது மனக்கண் முன் தோன்றுவது தேயிலைத் தோட்டமும் அங்கு வேலை செய்யும் பெண்களுமே. தோட்டப்புற மக்களின் அடிமட்ட வாழ்க்கை நிலை பற்றியும் அவர்களது பொருளாதார நிலை பற்றியும் அன்றாடம் ஊடகங்கள் வாயிலாக நாம் அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது. கொட்டும் மழையில் அட்டைக் கடிக்கு ஆளாகியும், காயும் வெயிலில் பாம்புக் கடிக்கும் குளவிக் கொட்டுக்கும் ஆளாகி தேயிலைத் தோட்டத்திலேயே தங்கள் வாழ்க்கையை கடைசிவரை கழிக்கும் ஓர் அவல நிலை இன்னும் தொடரத்தான் செய்கின்றது.

மலையகத்தில் தற்போது கல்வியில் சிறிது வளர்ச்சி நிலை காணப்பட்டாலும் பொருளாதாரம் என்பது இவர்களுக்கு முட்டுக்கட்டையாகவே இருக்கின்றது. இன்று நன்கு திறமையுள்ள மாணவர்கள் கூட பொருளாதார பின்னடைவாலும் குடும்ப வறுமை காரணமாகவும் கல்வியைத் தொடர முடியாது தேயிலைத் தோட்டங்களுக்கு அடிமட்ட சம்பளத்துக்காக சாதாரண கூலி வேலைக்குச் செல்லும் நிலை காணப்படுகின்றது. தோட்ட தொழிலாளர்களின் ஊதிய உயர்வுக்காக எமக்கு விபரம் தெரிந்த நாட்களிலிருந்து போராட்டங்கள் நடைபெற்ற வண்ணமே இருக்கின்றன. இவை வெறும் தீர்வில்லாத போராட்டங்களாகவே அமைந்துவிடுகின்றன. வேலைக்காலம் முடிந்து ஓய்வூதியம் எடுத்தவர்கள் தமது வாழ்க்கையை கொண்டு நடத்த பெரும்பாடு படுகின்றனர். தள்ளாத வயதில் இவர்கள் மீண்டும் தேயிலைத் தோட்டத்துக்குச் சென்று சில்லறைக் கொழுந்து எனப்படும் ஒரு முறையின் கீழ் வேலை செய்கின்றனர்.

தோட்டத் தொழிலாளர்களின் இந்நிலையைக் கண்டுவர அண்மையில் நாம் மலையகத்தை நோக்கி பயணித்தோம். ஒரு மதிய நேரத்தில் ஹட்டன் கொட்டகலைப் பிரதேசத்திலுள்ள பொரஸ்கிரித் தோட்டத்திற்குச் சென்றிருந்தோம். நடுங்கும் குளிரில் கை கால் விறைக்க தேயிலைக் கூடையை தலையில் சுமந்தவாறு வரிசையாக சென்று கொண்டிருந்தவர்களை நோக்கிச் சென்றோம். எம்மைக் கண்டதும் நடையை சற்றுத் தளர்த்திய அவர்களிடம் நாம் யார் என்பதை விபரித்து அவர்களுடன் உரையாடினோம்.

“அங்க நாங்க எடுக்கிற கொழுந்துட அளவுக்குத்தான் காசு தருவாங்க. நான் ஒரு நாளைக்கு 15 கிலோவில இருந்து 20 கிலோ வரை கொழுந்து எடுப்பன். சில நேரம் கொழுந்து இல்லாட்டி 10 கிலோவரை தான் கிடைக்கும். ஒரு கிலோவுக்கு எங்களுக்கு 12 ரூபா தாராங்க. எப்பிடி பாத்தாலும் கிடைக்கிற காசு காணாது.”



தேயிலை தோட்டத்தில் பல வருட காலமாக ஓயாது வேலை செய்துவரும் ஒரு வயதான பெண்மணி எம்முடன் உரையாடினார்.

“என் பேர் ராமாயி. எனது கணவர் மாரடைப்பால் இறந்துட்டாரு. நாங்க 35 வருசமா இந்த தோட்டத்தில தான் வசிக்கிறம். எனக்கு நாலு பிள்ளைங்க இருக்காங்க. அதுல 3 பேர் கலியாணம் கட்டிட்டாங்க. ஒரு பையன் மட்டும் என்கூட இருக்கான். எனக்கு அறுபது வயசாகிட்டு. அதால தோட்டத்துல வேலை செஞ்சு பென்சனும் எடுத்துட்டன். இப்ப நாள் கூலிக்குத் தான் எஸ்டேட்டில வேலைக்குப் போறன். அங்க நாங்க எடுக்கிற கொழுந்துட அளவுக்குத்தான் காசு தருவாங்க. நான் ஒரு நாளைக்கு 15 கிலோவில இருந்து 20 கிலோ வரை கொழுந்து எடுப்பன். சில நேரம் கொழுந்து இல்லாட்டி 10 கிலோவரை தான் கிடைக்கும். ஒரு கிலோவுக்கு எங்களுக்கு 12 ரூபா தாராங்க. எப்பிடி பாத்தாலும் கிடைக்கிற காசு காணாது. நாங்க ஒரு கிலோவுக்கு 15 ரூபா கூட்டித்தர சொல்லிக் கேட்டும் தரல்ல. என்ன செய்யிறது. வீட்டில இருந்தா நமக்கு யாருங்க சாப்பாடு தருவாங்க? வயசு போனாலும் பரவால்ல எண்டுதான் வேலைக்குப் போறம். அரசாங்கத்தாலயோ கம்பனியாலயோ எந்த சலுகையையும் நாங்க எதிர்பாக்க முடியாது. அவங்க தரவும் மாட்டாங்க. நாங்க தொரமாரைச் சந்திச்சுப் பேசவும் ஏலாது. பிரச்சின எண்டா கணக்குப்பிள்ளைட்ட தான் சொல்லணும். அவரு போய்த்தான் தொரமார் கிட்ட பேசுவாரு. இங்க எல்லாருக்கும் இப்பிடித்தான். எண்ட மூண்டு பொம்பிள பிள்ளைகளும் தோட்டத்துலதான் வேலை பாக்கிறாங்க. படிப்ப பாதியிலே நிற்பாட்டினதால அதுகளும் எங்களப் போலவே கஷ்டப்படுதுகள்”

என்று வாழ்க்கையே வெறுத்துப்போன ஒரு நிலையில் கதைத்தார்.

இவரைப் போலவே இங்கு வசிக்கும் பலபேர் வயதாகியும் தங்கள் வாழ் நாளை தேயிலைத் தோட்டத்திலேயே ஓட்டுகின்றனர். 63 வயதான வள்ளியம்மை என்ற பெண்மணிகூட 15 வயதிலிருந்து தோட்டத்தில் வேலை பார்ப்பதாகவும் இப்போதும் ராமாயியைப் போலவே நாட் கூலிக்கு வேலை செய்து வருவதாகவும் தெரிவித்தார். “என்னதான் நாங்க கஷ்டப்பட்டாலும் எங்களுக்காக பேச யாருமே இல்ல. யார் யாரோ வாறாங்க. அத செய்றம். இத செய்றம்ணு சொல்லிட்டு போறாங்க. எதுவுமே நடக்கல” என்றார் தள்ளாத வயதில் மனதிலும் தலையிலும் பாரத்தை சுமந்தபடி.

மலையகத்தில் வேலை செய்யும் எல்லா மக்களினது வாழ்க்கையும் இப்படித்தான். வேலை நிறுத்தங்களும் போராட்டங்களும் அம் மக்களால் தொடர்ந்த வண்ணமே உள்ளன. அரசியல் தலைமைத்துவங்கள் தேர்தல் காலங்களில் மட்டும் தமது வாக்குறுதிகளை அள்ளிவீசத் தவறுவதில்லை. ஆரம்பத்தில் அடிமைகளாக கொண்டு வரப்பட்டு தோட்டப் புறங்களில் வேலைக்கமர்த்தப்பட்ட மக்கள் இன்றுவரை அடிமை வாழ்க்கையையே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். ஏதாவது அவர்களிடம் எதிர்த்துக் கேட்டால் வேலை கொடுக்காமல் 2, 3 நாட்கள் வீட்டில் இருத்திவிடுவார்கள். அதற்குப் பயந்தே இவர்கள் யாரும் எதிர்த்துப் பேசுவதில்லை.

மலையைப் போல உயர்ந்து செல்லும் பொருட்களின் விலையேற்றத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் இம்மக்கள் அல்லல்படுகின்றனர். தன் ஒரு சாண் வயிற்றுக்காக ஒரு நாளைக்கு 285 என்ற அடிமட்ட சம்பளத்தைப் பெறவே இந்தப் போராட்டம். 405 ரூபாய் என்ற சம்பளத்தை அரசு நடைமுறைப் படுத்தியிருந்தாலும் இது நூற்றுக்கு 75 வீதம் வேலை செய்பவர்களுக்கே கிடைக்கின்றது. உடல்நிலை மற்றும் அங்கு நிலவும் சீரற்ற காலநிலையால் யாரும் அவ்வாறு வேலைசெய்வதில்லை என்பது தெரியவருகின்றது.

ஆகவே பெயரளவில் மட்டுமே இந்த 405 ரூபாய் இருக்கின்றது. இந்த ஒரு பிரச்சினையானது போஷாக்கு குறைபாடு, கல்வியில் பின்னடைவு, பாடசாலை இடைவிலகல், இளவயது திருமணம் போன்ற பல பிரச்சினைகளுக்கு காரணமாக அமைந்துவிடுகின்றது. ஆகவே காலம் காலமாக வெறுமனே கோஷம் எழுப்புவதை நிறுத்திவிட்டு இம்மக்களின் முன்னேற்றத்துக்கு வழிசமைத்துக் கொடுக்க வேண்டும். தோட்ட நிர்வாகமும் அதனை கொண்டு நடத்தும் கம்பனிகளுமே இது பற்றிச் சிந்திக்க வேண்டும்.



## கண்டுபிடி

சமீபத்தில் திருமணமான ஒரு தம்பதிக்கு கடிதமொன்று வந்தது. அதில் புதிய திரைப்படம் ஒன்றிற்கு ஊரின் சிறந்த திரை அரங்கில் உயர்ந்த வகுப்புக்கான இரண்டு டிக்கெட்டுகள் இணைக்கப்பட்டிருந்தன. மேலும் “இதை அனுப்பியவர் யார் என்று கண்டு பிடியுங்கள் பார்க்கலாம்” என்றொரு குறிப்பும் இருந்தது. இருவரும் எவ்வளவோ சிந்தித்துப் பார்த்தும் அவர்களால் யார் என்று கண்டுபிடிக்க முடியவில்லை.

இருந்தாலும் அந்தத் திரைப்படத்தை குறிப்பிட்ட நாளில் பார்த்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினர். வீட்டிலிருந்த விலை உயர்ந்த பொருட்கள் எல்லாம் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன. வீட்டில் ஒரு கடிதமும் கிடந்தது. அதில் “இப்போது உங்களுக்கு டிக்கெட் யார் அனுப்பியிருப்பார்கள் என்று கண்டுபிடித்திருப்பீர்களே!” என்றிருந்தது.



கவர் ஸ்டோரி

# வடமாகாண முஸ்லிம்களின் மீள்குடியேற்ற சவால்கள்

- அஹமட் உசாமா
- சிந்துஜா தர்மராசா


“வீடுகட்டித் தந்து, அங்க போயிருங்க எண்டு சொன்னால் நம்ம நாளைக்கும் போகத் தயாராக இருக்கிறம். இல்லாட்டால் நாம தொழில் ரீதியாக மிகவும் பாதிக்கப்படுகிறம். 19 வருடங்களாக இங்க தொழில் செஞ்சு பழகின எங்களுக்கு அங்கபோயி தொழில் செய்வது சாத்தியமில்ல. அங்கபோயி தொழில ஆரம்பிக்கிறதெண்டா முதலயிருந்தே ஆரம்பிக்கணும்”

இது கொழும்பு மட்டக்குளிப் பகுதியில் இடம்பெயர்ந்தோர் முகாமில் வசித்துவருகின்ற என்.எம். ஹனீபாவின் மனவேதனை. அண்மையில் அவருடன் உரையாடியபொழுது அவர் தெரிவித்த கருத்து இது. “வடக்கில தொழிற்சாலைங்க இருக்குமெண்டா நாம அங்க போயி தொழில செய்யலாம். அப்டி எதுவும் அங்கில்ல. இடம்பெயர்ந்து நாம கூலித் தொழில்தான் செஞ்சு வாறம். ஆனா எங்களுக்கு சொந்த வீடுவாசல் கட்டித் தருவாங்க எண்டால் நாம அங்க எமது பிள்ளைகளுடன் போயிடுவம்” என அவர் மேலும் எங்களிடம் தெரிவித்தார்.

நமது நாட்டை அழிவுப்பாதைக்கு இட்டுச் சென்ற யுத்தத்தின் முடிவு, வடக்கில் வாழ்ந்து வந்த முஸ்லிம்களுக்கு புதிய எதிர்காலத்திற்கான வாசலைத் திறந்துள்ளது. நீண்ட காலமாக அனைவராலும் மறக்கடிக்கப்பட்டிருந்த இந்த சமுதாயம் மீண்டும் தமது சொந்தக் கிராமங்களுக்குத் திரும்ப வாய்ப்புக் கிடைத்துள்ளது. கடந்த காலங்களில் இடம்பெற்ற கடுமையான யுத்தம் இம்மக்களின் வாழ்வியல் போக்கை மிக மோசமாக சீர்குலைத்திருந்ததுடன் அவர்களது பொருளாதாரத்தையும் பாதித்திருந்தது.


என்.எம். ஹனீபா


அப்துல் கையும்


பர்ஷானா

1990 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதம் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் வாழ்ந்த முஸ்லிம்களது இருண்ட யுகத்திற்கு அடித்தளமிட்ட ஒரு மாதமாக இன்றும் முஸ்லிம்களால் நினைவு கூறப்படுகின்றது. 75 ஆயிரம் முஸ்லிம்கள் துப்பாக்கி முனையில் தமது கிராமங்களில் இருந்து இம்மாதத்திலேயே பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர். ஆபத்துக்களுக்கு மத்தியில் துன்பங்களை அனுபவித்து, யுத்த பிரதேசங்களின் ஊடாக, அடர்ந்த காடுகளை கடந்தும், கடல் வழியாகவும் நிச்சயமற்ற எதிர்காலத்தை நோக்கி இவர்கள் பயணித்தனர்.

20 வருடங்களின் பின் இன்றும் வடக்கில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கு இவை கசப்பான நினைவுகளாகவே இருக்கின்றன. இந்தக் கோரமான சம்பவம் முஸ்லிம் சமூகத்தின் சமூக, பொருளாதார, கலாசார துறைகளில் மிக ஆழமான பாதிப்பைச் செலுத்தியிருந்தது. முன்னர் இப்பிரதேசங்களில் வாழ்ந்த முஸ்லிம்கள் விவசாயம், வியா-பாரம், மீன்பிடி மற்றும் கால்நடை போன்ற ஜீவனோபாயத்தினூடாக தமது வாழ்வை வளமாக கட்டியெழுப்பியிருந்த காலகட்டத்தில் இடம்பெற்ற இந்தப் பலவந்த வெளியேற்றம், அரச கொடுப்பனவில் தமது வாழ்வை முடக்க வேண்டிய நிலைக்குத் தள்ளிவிட்டது.

இந்நிலையில் தமது சொந்தக் கிராமங்களில் நிரந்தரமாக வாழ அனுமதிக்குமாறு நீண்ட காலமாகவே இம்மக்கள் குரல் கொடுத்து வந்தனர். எனினும் அதற்கான உத்தரவாதத்தைப் பெற 20 வருடங்கள் இம் மக்கள் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

அண்மையில் மன்னார் மாவட்டத்தின் முசலிப் பிரதேசத்திற்குச் சென்றிருந்தோம். முசலிப் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட சுமார் 4000 குடும்பங்கள் தற்பொழுது மீளத்திரும்பியிருந்ததைக் காணக்கூடியவாறு இருந்தது. இவர்களுக்காக தற்காலிக கூடாரங்கள் வழங்கப்பட்டாலும், ஏனைய அடிப்படை கட்டுமான வசதிகளுக்காக பல்வேறு சிரமங்களை இவர்கள் எதிர்நோக்கி வருவதாக இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கூழாங்குளம் முசலி பிரதேசவாசியான மீரா சாஹிம் ஷைனப், “வைத்தியசாலை ஒன்று திறந்து ரெண்டு, மூன்று மாதம் ஆகுது. சிலாபத் துறையில தான் இருக்குது. அங்க போனா டொக்டர்மார் ஒரு கிழமைக்கு பிறகு வாங்க எண்டு சொல்லுறாங்க. அப்ப அதுவரைக்கும் நோயாளிங்க செத்தா சாகுறதுதான். தூர இடத்துக்கு கொண்டு போறதுக்கு வாகன வசதிகள் இல்ல” என தனது மனக்குறையை வேதனையுடன் தெரிவித்தார்.

> **“இறுதி யுத்தத்தில் இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றுவதிலேயே அனைவரது கவனமும் இருக்கிறது. அதற்கு முன்னர் இடம்பெயர்ந்த வடக்கு முஸ்லிம்களைப் பற்றி யாருக்குமே அக்கறையில்லை”**

1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து இங்குள்ள முகாம் ஒன்றிலேயே வாழ்ந்து வருகின்ற இம்மக்கள் இவர்களுடைய சொந்த நிலங்களில் குடியேற்றப்படும் பொழுது பல அடிப்படைப் பிரச்சினைகளை எதிர்நோக்கவேண்டியிருப்பதாக தெரிவிக்கின்றனர். அங்கு பெரும்பாலான வீடுகளும் குடியிருப்புக்களும் அழிவடைந்திருப்பதால் தமிழர்களை மீள் குடியேற்றம் என்ற பெயரில் தற்போது சீரழிப்பதைப் போல இவர்களும் அங்கு சென்று சீரழிய நேரிடும் என்பதை கூழாங்குளம் முசலி பிரதேசத்தில் வசிக்கும் அப்துல் கையும் என்பவர் எம்முடன் உரையாடியபொழுது தெரிவித்தார்.

“இந்த ஏரியாவுக்கு வந்து ஒரு வருஷம் ஆகுது. எங்களுக்குத் தண்ணீர்ப் பிரச்சனை இருக்கு. இந்த கிணத்த தவிர வேற எந்த கிணறும் இல்ல. அதுவும் குடி தண்ணீருக்கும் இதுதான். குளிக்கவும் இதுதான். ஆண், பெண் எல்லாரும் இதில தான் குளிக்கிறம். கிட்டத்தட்ட ஐம்பது குடும்பங்களுக்கு மேல இதில தான் குடிச்சிக்கொண்டு இருக்கம். சுகாதார முறைப்படி பாக்கப்போனா குளிக்கிற தண்ணியில குடிக்கக்கூடாது. இருந்தாலும் நாங்க இதில தான் குளிக்கிறம், குடிக்கிறம். இந்த ஏரியாவில இருக்கிற ஐம்பது குடும்பத்தில 200 பேருக்கு மேல இருக்கம். எல்லாருக்கும் இந்த ஒரு கிணறுதான்” என்று இங்குள்ள தண்ணீர்ப் பிரச்சினையையும் அவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை.



இரண்டு தசாப்தங்களில் முற்றிலும் மாற்றமடைந்த தமது வாழ்வியல் போக்கினைப் புறந்தள்ளிவிட்டு தமது சொந்தக் கிராமங்களில் வாழ விரும்பினாலும், இந்த மக்கள் எதிர்நோக்கும் இவ்வாறான அடிப்படைப் பிரச்சினைகள் அதற்குத் தடையாக உள்ளன என்றுதான் சொல்லவேண்டும். புத்தளம் போன்ற பிரதேசங்களில் இடம்பெயர்ந்த மக்கள் கணிசமான அளவுக்கு தமது வாழ்வை ஸ்திரப்படுத்திக்கொண்டுள்ள பின்னர் இத்தகைய திட்டமிடலற்ற மீள் குடியேற்றங்களில் பங்குகொள்ள தயாரற்றவர்களாகவே இருக்கின்றனர்.

புத்தளம் பிரதேசத்திலுள்ள தொண்டர் நிறுவனமொன்றின் முகாமையாளரான கலாநிதி பர்ஷானா ஹனிபாவை சந்தித்து பேசியபோது “கடைசியாக யுத்தம் இடம்பெற்ற வன்னிப்பிரதேசங்களில், இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியேற்றுவதிலேயே அனைவரது அவதானமும் இருக்கின்றது. எனினும் 20 வருடங்களாக இடம்பெயர்ந்து வாழ்கின்ற வடக்கு முஸ்லிம்களை இவர்கள் மறந்துவிட்டனர். அதாவது 2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்களுக்கு முன்னுரிமை வழங்கவில்லை” என்று அவர் குறைபட்டுக் கொண்டார்.

வடக்கில் வாழ்ந்து தற்பொழுது புத்தளம் போன்ற பிரதேசங்களில் வசிக்கும் முஸ்லிம் மக்கள் மீண்டும் தமது சொந்தப் பிரதேசங்களுக்குச் செல்லத் தயாராகிய நிலையிலும் அவர்களுக்கென்று ஒரு நிரந்தரமான வீடுவாசல் இல்லாமல் அங்கு போய் எங்கு இருப்பது என்பதுதான் அவர்களுடைய கவலையாக இருக்கின்றது. இன்று 2 இலட்சத்து 50 ஆயிரத்தினை வடமாகாண முஸ்லிம்களின் சனத்தொகை எட்டுகின்றது. இந்நிலையில் தமது கிராமங்களில் மீளக்குடியேறுவதற்கான புறச்சூழல் உருவானாலும் அதன் சமூகப் பொருளாதார பிரச்சனைகளின் தாக்கம் மிக ஆழமானதாகும். ஆகவே இவைகள் அவதானத்தில் கொள்ளப்பட்டு எதிர்கால நகர்வுகள் முறையாக முன்னெடுக்கப்படுவதே நிலையான தீர்வாக அமையும்.

வடமாகாணத்திலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் சுமார் இரு தசாப்தங்களாக நாட்டின் பல பிரதேசங்களிலும் வாழ்ந்து வருகின்றனர். இம் மக்களுக்கு ஏற்பட்ட காணிப்பங்கீடு, கல்வி, அரச நியமனங்கள், தொழில்வாய்ப்பு, சுகாதாரம், பல்கலைக்கழக அனுமதி உட்பட எல்லா வகைகளிலும் இழப்புக்களை பாரிய அளவில் சந்தித்துள்ளார்கள். ஒரு நிலையான, நிம்மதியான விடிவு காலம் எப்போது வரும் என ஏங்கிக் கொண்டிருக்கும் இம்மக்களுக்கு அரசாங்கம் அவர்களுடைய குறைகளைத் தீர்க்கக்கூடிய உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இவர்களுக்கான நஷ்டஈட்டைப் பெற்றுக்கொடுக்க முன்வர வேண்டும். இதைவிட அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் மக்களைப் பிரதிநித்துவம் செய்யும் அமைச்சர்களும் அம் மக்களுக்காக குரல்கொடுக்க முன்வரவேண்டும். இவ்வாறான இதயசுத்தியுடனான முயற்சிகளை மேற்கொள்வதனாலன்றி இம்மக்களுக்கு நிரந்தரத்தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியாது. உரியவர்கள் கவனிப்பார்களா?

# கடாபியை தமிழர்கள் ஆதரிக்க வேண்டுமா?

**நி. பிரசாந்தன்**

70 முதல் 90 வரையான ஆண்டுகளில் அமெரிக்காவுக்கு சிம்ம சொப்பனமாய்த் திகழ்ந்தவர்தான் இந்த கடாபி. இதனால் அமெரிக்கா அன்றிலிருந்தே இவரை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது. தனது நாட்டு மக்களிடம் இருந்து பிரிக்க முடியாதவராய் இதுவரை இருந்ததால் அமெரிக்காவின் சதித்திட்டம் தவிடு பொடியானது. கடாபி பி.எல்.ஓ.வுக்கு மிக நெருக்கமாக இருந்துவந்தவர். உலக நாடுகளில் இருந்து வந்த சரியான போராளிகளுக்கு நெருக்கமானவராய் இருந்து வந்துள்ளார். இதனாலேயே இவர்மீது பல பயங்கரவாத குற்றச்சாட்டுகளை அமெரிக்கா கூறி வந்தது. இவரைக் கட்டுக்குள் வைக்க எண்ணிய அமெரிக்கா, ஐ.நா. வின் உதவியுடன் 90களிலேயே பொருளாதார தடைகளை விதித்தது. இதையெல்லாம் தகர்த்தெரிந்தவர்தான் இந்த கடாபி.

கடாபிக்கும் தமிழர்களுக்கும் சில வகைகளில் இரகசியமாய் நெருங்கிய தொடர்பிருந்து வந்துள்ளது. ஈழமிதவாதி என்று அழைக்கப்பட்ட அமிர்தலிங்கம் கொல்லப்பட்டது யாவரும் அறிந்திருந்தாலும் அவர் ஏன் கொல்லப்பட்டார் என்று பெரும்பாலானோருக்கு தெரிய வாய்ப்பில்லை.



புலிகளுக்கும் அமிர்தலிங்கத்திற்கும் மிக நெருக்கமான தொடர்பிருந்தது. சுருக்கமாய்ச் சொன்னால் புலிகள் அப்போது சென்னையில் முகாமிட்டிருந்தனர். அமிர்தலிங்கம் சென்னைக்கு வந்தால், தமிழகத்தில் அவரது கால்பட்டது முதல் திரும்பிச்செல்லும் வரை அவருக்குப் புலிகள் பாதுகாப்பு அளித்து அனைத்தையும் கவனித்து வந்தனர். அவ்வளவு நெருக்கமான நம்பிக்கை வைத்திருந்தனர். அப்படிப்பட்ட சமயத்தில் அமிர்தலிங்கம் ஒருமுறை ஆபிரிக்க நாடுகளுக்கு பயணம் செய்தார். கடாபி அமிர்தலிங்கத்தை இரகசியமாய் தன்னைப் பார்க்கவரச் சொல்லியிருக்கிறார். இந்த இரகசிய சந்திப்பின்போது கடாபி விடுதலைப்புலிகளின் போராட்டம் பற்றி கேள்வியுற்று அவர்களுக்கு உதவ எண்ணியிருந்தார்.


தான் ஆயுதப் பயிற்சியளித்து பண உதவியும் செய்யவுள்ளதாகக் கூறினார். இதற்காக புலிகளை அனுப்பவேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். இரகசிய சந்திப்பு என்றபடியால் கடாபி கேட்டுக்கொண்டது யாருக்கும் தெரியாது என எண்ணிய அமிர்தலிங்கம் தன்னுடைய மகனையும் சில இளைஞர்களையும் புலிகள் என்ற போர்வையில் பயிற்சிக்காக அனுப்பினார். பெருந்தொகையும் பெற்றுக்கொண்டார் என செய்திகள் சொல்கின்றன. இந்த நிகழ்ச்சி புலிகளின் தலைவருக்கு எப்படியோ தெரிந்தது. அது நேரடியாக சென்னை வந்த அமிர்தலிங்கத்திடமே கேட்கப்பட்டது. முதலில் மறுத்த அமிர்தலிங்கம் பின்னர் பயிற்சி எடுக்கும் தனது மகன் மற்றும் பிறருடைய புகைப்படங்கள் காட்டப்பட்டதும் மறுப்பேதும் தெரிவிக்காமல் புலிகளின் தலைவரிடம் மன்னிப்புக் கேட்டார். பிறகு நடந்தது உலகுக்கு தெரியும்.

ஒருமுறை சுகவீனமுற்ற ஒருவர் அரச மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்குப் படுக்கை வசதி செய்தி கொடுக்கப்படவில்லை. உடனே ஒரு அஞ்சலட்டை மூலம் மருத்துவமனையில் உள்ள குறைபாட்டை அதிபரான கடாபிக்கு தெரியப்படுத்தினார். என்ன ஆச்சரியம்! தபால் கிடைத்த அன்றே மருத்துவமனைக்கு கடாபி வந்து குறைகளை நிவர்த்தி செய்ய கட்டளையிட்டுச் சென்றார். தன் மக்களிடம் இருந்த செல்வாக்கே அவரை 50 வருடங்களுக்கு மேலாக ஆட்சி செய்ய வைத்தது.

தற்போது எகிப்து, தெற்கு சூடான் என ஆபிரிக்காவில் அமெரிக்காவின் கை ஓங்கியுள்ளது. அதிகாரப் பசி கொண்டுள்ள அமெரிக்கா முதலில் ரஷ்யாவை உடைத்தது. வைரம் கொண்டுள்ள ஆப்கானிஸ்தானை தன் வசமாக்கியது. எண்ணெய் வளம்மிக்க ஈராக்கின் எண்ணெய்க் கிணறுகளை தனதாக்கியது. பின்னர், எகிப்தை உடைத்து தன்னுடைய ஆட்களை அமர்த்தியுள்ளது. இப்போது லிபியாயும் கடாபியை பலியெடுக்க நினைக்கிறது. தற்போது லிபியாவில் அல்-கைதா இயக்கத்தினர் லிபிய இராணுவ உடை தரித்து பொதுமக்களை கொன்றுள்ளதாய் செய்திகள் வருவதை கவனிக்கப்பட வேண்டியுள்ளது.

இன்றுள்ள நிலையில் கடாபி இலங்கை, இந்தியா போன்ற நாடுகளின் உதவியை நாடுகிறார். இதற்காக பல நாடுகள் அவருக்கு மறைமுகமாய் உதவி செய்யவருகின்றன. அதில் இலங்கையும் ஒன்று.

கடாபி தமிழர்களுக்கு நல்லவரா என்பதை இனி நாம்தான் தீர்மானிக்க வேண்டும். கடாபியை காப்பாற்றினால் தமிழர்களுக்கு நல்லது செய்வாரா என்பதை நாம் நிதானமாய் யோசிக்கவேண்டும். அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்க இயலாத நிலையில் தமிழன் இருக்கிறான் என்பது மட்டும் உண்மை.



அமிர்தலிங்கம்

# விலைவாசி படுத்தும் பாடு



நரேன்

விமானப்படையின் 60 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக விமானப்படையின் இரண்டு கிபீர் விமானங்கள் பயிற்சியில் ஈடுபட்டு வெடித்துச் சிதறியது யாவரும் அறிந்ததே. அவ்விடத்தில் நடந்த ஒரு சுவாரஸ்யமான நிகழ்வு இன்றைய விலைவாசி ஏற்றத்தின் அதியுச்ச நிலையைக் காட்டுவதாக அமைந்தது.

குறித்த இரண்டு விமானங்களும் தென்னந்தோட்டமொன்றில் வீழ்ந்து நொறுங்கியதால் ஏராளமான தென்னை மரங்கள் சேதமுற்றன. அதிலிருந்த தேங்காய்கள் நாலாபக்கமும் சிதறியோட, விமான விபத்தைப் பார்வையிட வந்த பொதுமக்கள் தேங்காய்களைக் கண்டதும் விமான விபத்தையே மறந்தவர்களாக, சிதறிக்கிடந்த தேங்காய்களைப் பொறுக்குவதற்காக முண்டியடித்து ஒருவரையொருவர் தள்ளி வீழ்த்தியும் கொண்டனர்.

தேங்காய்களுக்காக சண்டையிட்டுக் கொண்ட பொதுமக்களை பொலிஸாரினாலும் கட்டுப்படுத்த முடியாதநிலை ஏற்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. இலங்கையின் பொருட்களின் விலை அதிகரிப்பால் தேங்காய்களும் அதிக விலையில் விற்கப்படும் நிலை காரணமாகவே பொதுமக்கள் அவ்வாறு தேங்காய்களுக்காக மோதிக் கொண்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

அத்துடன், விபத்து நடைபெற்ற இடத்தைப் பார்வையிட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ வருகை தந்த போதும் பொதுமக்கள் அவரைப் பார்ப்பதில் பெரும் ஆர்வம் காட்டாமல் தேங்காய் பொறுக்குவதிலேயே கண்ணாய் இருந்தனர்.

உலகம் போற போக்கைப்பாரு..!



# மாறுபட்ட சூழலில் வேறுபட்ட மனிதர்கள்



## அன்புத் தங்கைக்கு...

அருந்தவன் ஆஸ்பத்திரியிலிருந்து ஒரு வார காலமாகின்றது. தீடீரென ஏற்பட்ட மாரடைப்பு அவரது வாழ்க்கைப் போராட்டத்தை மேலும் மாற்றியிருந்தது. அகதியாய் புலம்பெயர்ந்து லண்டனுக்கு வந்த அவருக்கு இது நாள்வரை தொலைத்தவற்றை நினைத்து வருந்தாமல் இருந்திருந்தால், இப்படி ஒரு நிலைமை வந்திருக்க சாத்தியமே இல்லை.

அருந்தவனின் தங்கை வினோதினி தானும் குடும்பத்துடன் லண்டன் வரக்கேட்டபோது அவர் எழுதிய கடிதம் தலையணைக்கு அடியில் அமைதியாய் உறங்கிக் கொண்டிருந்தது. அருந்தவன் அதை எடுத்து மீண்டும் வாசித்துப் பார்த்தார்.

அன்பான விநோதினிக்கு...,

நீ இங்கு வர விரும்புவதை நான் தடுக்கவோ, அல்லது போலிக்காரணம் காட்டியோ இந்தக் கடிதத்தை எழுதவில்லை. உன் அருமை அண்ணன் என்ற பாசத்துடன், நடைமுறை வாழ்க்கையை உனக்கு எழுதுகின்றேன். உன் நிலையில் இருந்து பார்க்கும்பொழுது இக்கரை உன் அக்கரையைவிட பச்சையாகத் தெரியும். ஆனால், அது நிஜமல்ல.

இங்கு வந்து நான் வாழ்க்கையை தொலைத்து விட்டேனோ? என்று எண்ணத்தோன்றுகின்றது. ஆசைகள் அதிகமாகும் போதுதான் ஆபத்துக்கள் அதிகமாகின்றன. எமது அப்பா, அம்மாவின் அரவணைப்பில் அன்புசொரிய வாழ்ந்த அந்த நாட்களை நான் நினைத்துப் பார்த்தேன். அன்பு என்பதன் அர்த்தத்தை

**சி று க தை**

இங்கு புரிந்து கொள்வது இளந் தலைமுறையினருக்கு கடினமாக இருக்கின்றது.

பாசமாக வளர்ந்த எங்கள் தாய் தந்தையருக்கு நாங்கள் அன்புப் பிள்ளைகளாக இருந்தோம். ஆனால் இங்கே பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையே நிறைய இடைவெளி இருந்து வருகின்றது. எங்களை வளர்த்த பெற்றோர்கள் போல் நாங்களும் இல்லை, எங்கள் பெற்றோருக்கு இருந்த பிள்ளைகள் போல் எங்கள் பிள்ளைகளும் இல்லை.

அந்த நாட்களில் நானும் நீயும் சிறு பிள்ளைகளாக இருந்த காலத்திலும் சரி, வளர்ந்து வேலைக்குப்போன காலத்திலும் சரி ஒரு நாளாவது எமது பெற்றோரை எதிர்த்து பேசியிருப்போமா? எனக்கு இதுவரை அப்படி பேசிய தாக ஞாபகம் இல்லை.

இங்கே எனது மகளோ, மகனோ பாடசாலை முடித்து வீட்டிற்கு வந்தால் நான் அறைக்குள் முடங்கி விடுவேன். என் மாரியாதையை நானே காப்பாற்றிக்கொள்ள. ஆனால் இங்கு பலருக்கு பிள்ளைகளின் வாயால் பேச்சு வாங்கி பழக்கப்பட்டுவிட்டது.

"யூ ஸ்டுபிட்" என்று எனது மகள் எனது மனைவியைப் பேசும்போது அவள் கன்னத்தில் ஓங்கி அறையவேண்டும் போலத் தோன்றும். ஆனால், அப்படி ஓங்கி அறைந்தால் நிச்சயமாக நான் கம்பி எண்ணவேண்டியதுதான்.

பல்கலைக்கழகம் சென்று வரும் என் மகன் காதில் தோடும் மாட்டி, காலடியில் கிழிந்த ஜீன்சும் போட்டுக் கெந்திக்கெந்தி நடக்கும்பொழுது அந்தக் காலத்து ஜமேக்கன் நாட்டுக் காப்பிலிகள் நடந்த ஞாபகம் தான் வரும்.

"ஏன்டா தம்பி இப்படி நடையும் மாறி நடத்தையும் மாறி திரிகின்றாய்" என்று கேட்டால் "டடி யூ ஆர் அவுட் ஒப் ஓடர்" என்று அவன் சொல்லும்போது அப்படியே அவன் கழுத்தை நெரித்து விட லாமா என்று தோன்றும்.

எனது மகள் சௌந்தர்யா போடும் ஆடைகளைப் பார்த்தால் என் மகளா இப்படி என்ற எண்ணம் உனக்குத் கூடத் தோன்றும். அது மாத்திரம் அல்லாமல் உனக்கு வியப்பாக கூட இருக்கும். "பெசன்" என்று சொல்லி நாளுக்கு நாள் மாறுகிற ஆடையுலகத்தில் மயங்கி கிடக்கின்றாள். அவளுக்கு சௌந்தர்யா என்று பெயர் வைத்ததற்கு பதிலாக ஆங்கிலத்தில் ஏதாவது பெயர் வைத்திடலாமாவென அடிக்கடி தோன்றும்.

இரண்டு துண்டுகளால் கழுத்தின் பின்புறமாக இறுகக்கட்டி ஆழமாக வெட்டி அமைக்கப்பட்ட பிளவுசை அவள் போடும் போது... சீ! எனக்கு என் மகளை விமர்சிக்கவே வெட்கமாக இருக்கின்றது. இரண்டு மார்பகங்களின் அரைவாசி பிளவுஸ்சினூடாக வெளியே நீட்ட, கட்டையாக இடுப்பின் கீழ் அரையடி உயரத்திற்கு ஸ்கேர்ட் போட்டுக்கொண்டு அவள் நடக்கும்பொழுது கண்களை மூடிக்கொண்டு கடவுளே! என்று வெட்கத்தால் தலைகுனிந்த நாட்கள் எத்தனை...?

> இரண்டு துண்டுகளால்
> கழுத்தின் பின்புறமாக
> இறுகக் கட்டி ஆழமாக
> வெட்டி அமைக்கப்பட்ட
> பிளவுசை அவள் போடும்
> போது சீ! எனக்கு என்
> மகளை விமர்சிக்கவே
> வெட்கமாக இருக்கின்றது.
> இரண்டு மார்பகங்களின்
> அரைவாசி பிளவுஸ்சினூ
> டாக வெளியே நீட்ட,
> கட்டையாக இடுப்பின் கீழ்
> அரையடி உயரத்திற்கு
> ஸ்கேர்ட் போட்டுக்கொண்டு
> அவள் நடக்கும் பொழுது
> கண்களை மூடிக்கொண்டு
> கடவுளே! என்று
> வெட்கத்தால் தலைகுனிந்த
> நாட்கள் எத்தனை...

தாயின் வயிற்றில் பிள்ளை இருக்கும்பொழுது பிள்ளைக்கு உணவூட்டிய அந்த தொப்புள் கொடியறுந்த இடத்திலே வெள்ளிச்சலங்கைகள் தாளம் போட அவள் நடந்துபோகும் காட்சியை இனிமேலும் என்னால் விமர்சிக்கவே முடியாது. என் மனைவி அனிதாவிடம் சொன்னால் பிள்ளைகளின் பக்கம் நின்று அவர்கள் செய்வது சரி என்று அடம்பிடிப்பது அவர்களின் பழக்கமாயிற்று.

அனிதாவும் என்னைவிட நல்ல பொறுப்பான வேலையில் இருக்கின்றாள். என் பிள்ளைகளைப்போல ஓரளவு அவளும் மாறிவிட்டாள் என்று சொல்லலாம். இப்போதெல்லாம் அவளுக்கு என்னைப்பற்றி சிந்திக்க நேரமில்லை. அடிக்கடி தன்னை கண்ணாடியில் பார்த்து அலங்கரிப்பது அவளது வேலையாகிவிட்டது. நரைத்துவிட்ட தலைமயிரை கறுப்பாக்க ஒவ்வொரு கிழமையும் அரை நாள் போய்விடும்.


உழைக்கும் பணத்தில் சாறி சாறியாக வாங்கி, ஒருமுறை உடுத்திய சாறி மறுமுறை உடுபடாமல் சில காலங்களின் பின், பாக்கில் கட்டப்பட்டு தொண்டு நிறுவனங்களுக்குத் தானமாகக் கொடுக்கப்படும் போது பாடுபட்டு உழைத்த பணத்தின் மதிப்பை அவள் இன்னும் உணர வில்லை என்று எனக்குத் தோன்றும்.

நாங்கள் இருவரும் வாக்குவாதப்பட்டால் "வாயை மூடு" என்று சொல்லுமளவுக்கு துணிந்துவிட்டாள். என்னை விவாகரத்து செய்துவிட்டு தனியாக வாழக்கூட அவளுக்கு துணிவுண்டு. தானும் உழைக்கின்ற அதுவும் என்னைவிட அதிகம் உழைக்கின்ற அகங்காரம் அவளுக்கு.

சில நாட்களில் அலுவலக பார்ட்டி முடிந்து வீடு திரும்பி வரும் போது அவள் நடத்தையிலிருந்து அனிதா குடித்திருக்கின்றாள் என்று என்னால் உணர முடிந்தும் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் நான் இதுவரை பொறுமையாக இருந்திருக்கின்றேன் என்று சொன்னால் உனக்கு வியப்பாகத்தான் இருக்கும்.

எனது மகன் சுதன் என்னிடமே வந்து "டடி ஹேவ் யூ கொட் எக்ஸ்ட்ரா கான் ஒவ் பியர்" என்று கேட்கும்போது நான் ஒன்றும் கேட்காதவன் போல பேப்பர் வாசித்து நடிப்பதை எப்படி உனக்கு விமர்சிப்பது?

மொத்தத்தில் இந்த நாட்டில் எனது குடும்பத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதாபாத்திரம். நாங்கள் நடிக்கும் நாடகங்களும் ஏராளம். அகதியாய் இங்கு வந்த நான் அதிகம் கோபத்தைக் காட்டினால் இருக்கும் கொஞ்ச அன்பையும் தொலைத்து அனாதையாகி விடுவேனோ என்ற பயத்தில் அதிக நேரம் என் அறையிலே முடங்கிக் கிடப்பேன்.



◄ வவுனியூர் இரா உதயணன் ►

இங்கு அகதியாய் வந்த நாங்கள் பணத்திற்காக எங்கள் வாழ்க்கையை தொலைத்து விட்டோமோ என்ற கவலை எனக்கு மாத்திரமல்ல, இங்கு வந்த பல பேருக்கும் மனதின் ஆழத்தில் குடைந்து கொண்டுதானிருக்கின்றது.

இன்னும் கொஞ்ச காலத்தில் இங்கு வாழும் தமிழர்களாகிய எங்களில் ஒரு சிலர் என்பதை விட பலர் எங்கள் பண்பாடுகளை, விழுமியங்களை மறந்து இந்த நாட்டின் பண்பாட்டுக் கலாச்சாரங்களுக்குள் உறைந்து மாறுபட்ட மனிதர்களாக வேறுபட்ட சூழ்நிலையில் வாழப்போகின்றார்கள் என்பதை நினைக்க எங்கள் வாழ்க்கையை இங்கு வந்து தொலைத்து விட்டோமோ என்ற கவலை என் மனதில் ஊன்றத் தொடங்கியுள்ளது.

இன்னும் பல விடயங்களை எழுத வேண்டும்போல எனக்குத் தோன்றுகின்றது. ஆனால், நான் இதுவரை எழுதிய அனைத்தும் நீ சரியானதொரு முடிவெடுக்க உதவியாயிருக்கும் என நம்பு கின்றேன்.

**அன்புடன்...,**
அண்ணன் அருந்தவன்

கடிதத்தை நர்ஸிடம் கொடுத்து ஆஸ்பத்திரி போஸ்ட் பொக்ஸில் போடச் சொல்லிவிட்டு பெரு மூச்சுடன் நிமிர்ந்து படுத்தார் அருந்தவன்.

# அதற்குத் தக

# எனக்கு வரும் எஸ்.எம்.எஸ்.

அஷ்ரஃப் சிஹாப்தீன்
ashroffshihabdeen@gmail.com

"உனது புன்னகை எனக்கு மிகவும் பிடிக்கும். காரணம் மஞ்சள் வர்ணம் எனக்கு மிகவும் விருப்பமானது"

இது ஒரு குறுந்தகவல். இந்தத் தகவலில் தொனிக்கும் கிண்டலையும் கற்பனையையும் கவனியுங்கள். 'உனது பற்கள் மஞ்சள் நிறமாக இருக்கின்றன. நீ பற்களைச் சுத்தம் செய்வதில்லை' என்ற செய்தியை ஏந்திய நண்பர்களுக்கிடையில் பரிமாறிக் கொள்ளப்படும் குறுந்தகவல் இது. மனிதனுக்குத் தேவையான, அவசியமான எத்தனையோ தகவல்களைப் பகிர்ந்து கொள்ளும் குறுந்தகவலில்



நகைச்சுவையும் கிண்டல்களும் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. அதுவும் ஒரு சுகமான அனுபவமே. சும்மா இருக்கும் பொழுதுகளில் நண்பர்களுக்கிடையே இவ்வாறான லட்சக் கணக்கான குறுஞ் செய்திகள் பரிமாற்றம் இடம்பெறுகிறது. சில குறுஞ்செய்திகள் கிண்டலுடன் வெளிவந்தாலும் அவை ஆழமான கருத்தைக் கொண்டவையாயும் இருக்கின்றன. மற்றொரு குறுஞ்செய்தி இது.

வினா: திருமணம் செய்யும் எண்ணம் இல்லாதபோதும் ஆண்கள் பெண்களைத் துரத்துவது ஏன்?

விடை: ஓட்டும் எண்ணம் இல்லாத போதும் நாய்கள் வாகனங்களைத் துரத்துவது போல்தான் இதுவும்!

குறுஞ்செய்திகள் அவற்றின் கால தேச வர்த்தமானங்களைக் கொண்டு மனித குலத்துக்குப் பெரும் வரமாகவும் அமைந்து விடுகின்றன. ஒரு மிகப் பெரும் இராணுவ இரகசியத்தைக்கூட குறுஞ்செய்தியூடாக வினாடியில் அனுப்பிவிட்டு வேலையைப் பார்க்கலாம்.

ஆபிரிக்காவில் உள்ள ஒரு தேசத்தில் மருத்துவ சேவைக்காகச் சென்ற ஒரு வைத்தியர் 16 வயதான ஒரு பையன் ஆபத்தான நோயில் இருப்பதைக் கண்டுபிடிக்கிறார். அவன்து தோள் எலும்பில் வியாதி. கவனிக்காமல் விட்டால் இறந்து போவான். வைத்தியரோ இம்மாதிரியான ஒரு அறுவைச் சிகிச்சையைச் செய்து அனுபவப்பட்டவர் அல்லர். பிரிட்டனிலேயே இவ்வாறான அறுவைச் சிகிச்சை பத்துப் பேருக்கு மட்டுமே செய்யப்பட்டிருந்தது. டொக்டர் டேவிட் நொட் அந்த இளைஞனின் உயிர் காப்பதற்குத் துணிந்தார்.

இத்துறையில் அனுபவமுள்ள பிரிட்டனில் வசிக்கும் தமது நண்பரான டொக்டர் மெரிரியன் தோமஸைத் தொடர்பு கொண்டார். அறுவைச் சிகிச்சைக்கான விளக்கத்தை டாக்டர் தோமஸ் தொலைபேசியிலோ, மின்னஞ்சலிலோ, தொலை நகல் படங்கள் மூலமோ விளக்கவில்லை. அவர்கள் பரிமாறிக் கொண்டது குறுந்தகவல் மூலம். அறுவைச் சிகிச்சை செய்யவேண்டிய படித் தரங்களை குறுந்தகவலில் விளக்கிக் கொண்டிருக்க, அறுவைச் சிகிச்சையை டாக்டர் டேவிட் செய்து முடித்தார். இவ்வாறான அறுவைச் சிகிச்சையின் போது அதிக இரத்தம் வெளியேறுவதால் நோயாளி மரணத்தின் அருகில் இருப்பார். அதி தீவிரக் கண்காணிப்புப் பிரிவின் பின்னணியிலேயே இந்த அறுவைச் சிகிச்சை நடைபெறுவது வழக்கம். ஆபிரிக்காவில் இவ்வாறான எவ்வித மருத்துவ வசதிகளுமற்ற நிலையில் ஒரு பைன்ட் இரத்தத்தைக் கொண்டு டாக்டர் டேவிட் அறுவைச் சிகிச்சையைச் செய்து அந்த இளைஞனின் உயிரைக் காப்பாற்றி விட்டார்.

இது மருத்துவத் துறையில் குறுந்தகவல் மூலம் நிகழ்த்தப்பட்ட சாதனை. இலக்கியத் துறையிலும் ஒரு சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. ஒரு முழு நாவலையும் குறுந்தகவல் மூலம் எழுதி (?) முடித்திருக்கிறார் ஒருவர். ஹன்னு லந்தியாலா என்பது அவரது பெயர். கணனித் தொழில்நுட்ப வல்லுனரான இவர் தனது தொழிலை இராஜினாமா செய்துவிட்டு ஊர் சுற்றத் தொடங்கினார். ஐரோப்பிய நாடுகளிலும், இந்தியாவிலும் சுற்றியலைந்தார். அவ்வேளைகளில் குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் அவர் அனுப்பிய குறுந் தகவல்களைத் தொகுத்தார்கள். கிட்டத்தட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட விபரமான குறுந்தகவல்கள் அவை. குறுந்தகவலில் பயன்படுத்தப்படும் குறிச் சொற்களுடன் கூடியதாகவும் பிழைகளுடன் கூடிய தாகவும் அவை இருந்தபோதும் 332 பக்கங்களைக் கொண்ட நாவலாக அது உருவெடுத்துவிட்டது.

ஒவ்வொரு நாட்டிலும் இடத்திலும் தாம் கண்டது, கேட்டதை, நடந்ததை எழுதியிருக்கிறார் என்று நினைக்கிறேன். 2007 ஆம் ஆண்டு இந்த நாவல் வெளிவந்திருக்கிறது. நமக்கு எல்லாமே தாமதமாகத்தானே தெரிய வருகிறது. இந்த நாவலை நாமும் வாசிக்க முடியும் பின்லாந்து மொழி தெரியுமாக இருந்தால்.

நல்ல காலமாக இன்னும் தமிழில் குறுந்தகவல் அனுப்பும் முறை இன்னும் இங்கு புழக்கத்துக்கு வரவில்லை. தமிழில் கவிதை, கதை, நாவல் என்று குறுந்தகவலில் எழுதி நாறடிக்கத் தொடங்கி விடுவார்கள். ஆளுக்கு நான்கு தளங்களைத் திறந்து கொண்டு சிலர் அடிக்கும் கூத்தையும், கும்மாளத்தையும், காட்டும் பந்தாவையும் சகிக்க முடியுதில்லை. தெருவில் நடக்கும்போது கூட யாரையும் கண்டு கொள்ளாமல் நேரே பார்த்து நடக்கிறார்கள். பந்தா... இணைய எழுத்தாளர்களாம்!!




கைத் தொலை பேசி வருவதற்கு முன்னர் தனியே பேசினால் பைத்தியம் என்று சொல்வது வழக்கம். இப்போது தனியே நின்று யார் பேசினாலும் யாரும் கண்டு கொள்வதில்லை. நன்றாக ஆடையணிந்த ஒரு பைத்தியம் நின்று தனியே பேசிக் கொண்டிருந்தாலும் கூடக் கண்டு கொள்ள மாட்டார்கள். நமது நாட்டில் கைத் தோலைபேசியில் பேசியபடி வாகனம் ஓட்டுவதையும் பேசியபடி நடந்து போவதையும் அதிகம் காண்கிறோம். இதன் காரணமாக பல விபத்துக்கள் ஏற்பட்டதால் பேசிக்கொண்டு வாகனம் ஓட்டத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேற்கு நாடுகளில் அனேகமானோர் கதைப்பதை விட குறுந்தகவல் அனுப்பும் பழக்கமுள்ளவர்களாக இருக்கின்றனர். குறுந்தகவலில் கவனம் செலுத்தியதால் அங்கு இடம்பெறும் விபத்துக்கள் ஏராளம். நேரடியாகப் பேசுவதை விடக் குறுந்தகவல் மூலம் எண்ணங்களைப் பகிர்ந்துகொள்வதில் அவர்கள் ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

குறுந்தகவல் அனுப்புவதில் போட்டிகளும் வைக்கப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குள் அதிக அர்த்தமுள்ள சொற்களை அனுப்புவோருக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. ஒரு கைத்தொலைபேசிக் கம்பனி விமானத்திலிருந்து பாரசூட்டில் குதிப்பவர்களுக்கு ஒரு போட்டி ஏற்பாடு செய்திருக்கிறது. விமானத்திலிருந்து குதிப்பதற்கும் பாரசூட் விரிப்பதற்கான நூலை இழுப்பதற்குமிடையிலான ஒரேயொரு நிமிட அவகாசத்துள் குறுந்தகவலை அனுப்ப வேண்டும். வாயால் உச்சரிப்பதற்குச் சிரமமான வசனங்கள் இப்போட்டியில் வழங்கப்பட்டன. இதை ஒரு கின்னஸ் சாதனைக்காக கைத்தொலைபேசி நிறுவனம் ஏற்பாடு செய்தபோதும் தனது கைத்தொலைபேசிக்கான விளம்பரமாகப் பயன்படுத்தியது. சிரமமான சொற்களைப் பதிவதில் கவனம் செலுத்தி, பாரசூட் நூலை இழுக்கத் தவறினால் கஞ்சிதான்.

நமது நண்பர்கள், குடும்பத்தினர் நமக்கு அனுப்புகின்றவையும் நாம் அவர்களுக்கு அனுப்புபவையுமான குறுந்தகவல்கள் பற்றிச் சற்று இப்போது சிந்திக்கத் தொடங்கியிருப்பீர்கள். நான் இரவில் வீட்டிலிருந்து வெளியேறி எங்காவது சென்றால் எனக்கு வீட்டிலிருந்து வரும் குறுந்தகவல் அநேகமாக இப்படியிருக்கும்.

'ஸ்லைஸ் பாண் வாங்கி வரவும் அல்லது ஒரு பெனடோல் கார்ட் வாங்கி வரவும்.'

## டிஜிட்டல் லவ்

FACEBOOKக்குள் வந்துவிடாதே
உலக SHARE மார்க்கெட்டுக்கள்
விலைபேச வந்துவிடும்
பிழைத்துக் கொள்ளட்டும் டாட்டா
பிர்லாக்கள்...

உனது நிழற்படத்திலேயே
ஒரு கோடி YOUTUBE
குறும்படங்கள் கண்டுவிட்டேன்
நிஜத்தில் வந்தால் OSCAR
உனக்குத்தான்...

தாக்கப்பட்ட வைரஸ்கள்
தகர்க்கப்பட்டது எப்படி
உன்மேல் கொண்ட பாசத்தாலா?
இல்லை உன்
பெயர் PASSWORD இல்
இருப்பதாலா...?

WIKIPEDIAவே காதல்பீடியா
ஆகிவிட்டது டொனேஷனாக
உன் பெயரை 400 முறையெழுதி
அனுப்பிவிட்டேன் எனக்கென்ன
தரப்போகிறாய்..!

YAHOOவே வெட்கப்பட்டது
உண்மைதான்
ஆனால், சத்தியமாக
நான் முத்தமிட்டது நீ
அனுப்பிய மெயிலுக்குத்தான்...


உன்னுடன் CHAT செய்தே
ENTER KEYகள் தேய்ந்துவிட்டன
எனக்குள் ENTER ஆகிவிடு
KEY BOARDகள் தேய்வதற்குள்

உறங்கும் போதும் உன் நினைவுகள்
நீங்காமல் DOWNLOADடாகி
OVERLOADடாகிவிட்டது இதயம்
உன் சிரிப்பொலியை மின்னஞ்சல்
செய் REFRESH கொள்கிறேன்

WIKILEAKSஉம் காணாத வண்ண
கோப்புகளை வைத்திருக்கிறாயோ!
உன்னை ஹெக் செய்ய நினைத்தால்
மீட்புகளின்றி மயங்கிப் போகிறேன்.

உன் FLYING-KISSயை
சேகரிப்பதில்
கூகிளையே மிஞ்சிவிட்டேன்
என் வாழ்க்கைக்குள் LOGIN செய்
காதல் MAPப்புகள் காட்டுகிறேன்.

# இலங்கையில் அதிகரித்து வரும்



# இளவயதுக் கர்ப்பம்

◄ தி. ஶ்ரீகாந்த் ►

'சட்டவிரோத திருமணம்; 14 வயதுச் சிறுமி வைத்தியசாலையில் அனுமதிப்பு', 'கருச்சிதைவு செய்ய வைத்தியரை நாடிய சிறுமி', 'பள்ளிப் படிப்பைப் பூர்த்திசெய்யாத மகளுக்கு தாய் ஒருவர் திருமணம் செய்து வைத்த சம்பவம்' இவை நாளாந்த பத்திரிகைகளில் பஞ்சமின்றி வெளிவரும் செய்திகள்.

பதின்ம வயதென்பது பாலியல் ரீதியான பிரச்சினைகளின் உச்சகட்டம். குறிப்பாக இப்பதின்ம வயதினருக்கு உரிய பாதுகாப்பு, முறையான கல்வி என்பன சரியான முறையில் கிடைக்காதவிடத்து அவை பல்வேறு பாதிப்புகளுக்கு இட்டுச்செல்கின்றன. இன்று நாடளாவிய ரீதியில் இளவயதில் கர்ப்பம் தரிப்போரது எண்ணிக்கை பாரியளவில் அதிகரித்துள்ளது. பொருளா தாரப் பிரச்சினை, எதிர்பாலாரில் ஏற்படும் கவர்ச்சி, சமூகத்தில் நடக்கும் அக்கிரமங்கள், யுத்தத்துக்குப் பிறகு நிலவும் பாதுகாப்பற்ற சூழ்நிலை என்பவற்றின் வெளிப்பாடுதான் இந்த இளவயதுக் கர்ப்பம்.

படிப்பறிவற்றவர்களிடம் பரவலாகக் காணப்பட்ட இந்தப் பிரச்சினை இப்போது படித்தவர்கள் மத்தியிலும் நிலவுவதுதான் ஆச்சரியத்தைத் தருகின்றது. கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு, மலை யகம், பொலநறுவை என்று காணப்பட்ட இந்த விடயம் இப்போது யாழில் அதிகரித்து காணப்படுவதே வேதனை தரும் விடயமாகும். கடந்த வருடங்களில் மட்டும் 342 பெண்கள் இளவயதிலேயே தாயாகியுள்ளனர் என்ற தகவலை யாழ். போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் வெளியிட்டிருப்பது இதற்கு சான்றாகும்.

கல்விசார் மட்டத்தினரிடையே அண்மையில் நாம் இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடியபோது பல உண்மைகள் வெளிவந்தன.

பிரபல பாடசாலை ஒன்றில் கற்பிக்கும் ஒரு ஆசிரியை "பாடசாலைகளில் பாலியல் ரீதியான கல்வி என்றில்லாமல் சுகாதாரம், விஞ்ஞானப் பாடங்களினூடாக இந்த விடயங்களைப் பற்றியும் எதிர்கால விளைவுகள் பற்றியும் விளக்கமளிக்கப்பட வேண்டும். சமய நிறுவனங்களின் மீதான ஈடுபாட்டை இவ்வயதுப்பிள்ளைகளுக்கு அதிகப்படுத்தி, பாலியல் தொடர்பான சரியான விளக்கம் இவர்களுக்கு அளிக்கப்படும் பட்சத்தில் அவர்களின் ஆளுமை, தற்பாதுகாப்புத் தன்மை என்பன வளர்ச்சியடையும். சரியாகச் சிந்தித்து முடிவெடுக்கக் கூடிய திறமையேற்படும். ஆனால் ஒரு சில தாய்மார்களே இது தொடர்பான அறிவுள்ளவர்களாக உள்ளனர். குறித்த வயதில் தற்காப்பு தொடர்பான வழிகளை அவர்களே அறிந்திருப்பதில்லை. ஏனெனில், அவர்களுக்கும் கூட இவ்விடயங்களில் அறிவூட்டல் தொடர்பான எந்தவித முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்படுவதில்லை. அவர்கள் வெறுமனே அனுபவரீதியான படிப்பினைகளையே கொண்டிருப்பார்கள். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று இவ்வயதுப் பிள்ளைகள் சிந்திக்காமல் முடிவெடுத்து திருமணம் செய்து, பிறகு தன் சக பெண்பிள்ளைகள் நன்றாகப் படித்து உயர்ந்த நிலையில் இருப்பதைப் பார்த்து மனரீதியான பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புண்டு. பெற்றோர்கள் எந்தளவிற்குப் பாதுகாப்பாக இருந்தாலும் வேலியே பயிரை மேய்ந்த கதையாக உறவுகளே இவ்வாறான பெண்பிள்ளைகளைத் துஷ்பிரயோகங்களுக்குள்ளாக்கும் நிலையும் இன்று காணப்படுகின்றது. ஆசிரியர்களும் பெற்றோர்களும் இவ்வயதுப்பிள்ளைகளுடன் அன்பாக நெருங்கிப்பழக வேண்டும். அப்போது தான் அப்பிள்ளைகள் தமது பிரச்சினைகள் என்னவென்று பெற்றோரிடமோ ஆசிரிய ரிடமோ சொல்லக்கூடிய நிலை உருவாகும்" என்ற நல்ல விளக்கத்தைத் தந்திருந்தார்.

தற்போது பல சமூக சேவை அமைப்புகள் கூட இந்த இளவயது கர்ப்பத்தினைத் தடுக்கும் நோக்கில் பல வேலைத்திட்டங்களை நாடளாவிய ரீதியில் முன்னெடுத்து வருகின்றனர். "பொறுப்பற்ற சில பெற்றோர்களின் செயற்பாட்டினால் பாதிக்கப்படுவது இளவயது சிறுமிகளே! அதாவது, ஆட்டோ டிரைவரை மாமா என்று கூறி அறிமுகப்படுத்துவது மட்டுமல்லாமல், அவரைநம்பி தமது பிள்ளைகளையும் அனுப்பிவைப்பார்கள். ஆனால், பிள்ளைக்கு ஏதாவது ஒரு சம்பவம் நடந்த பிறகுதான் ஆட்டோ டிரைவரின் சுயரூபம் தெரியவரும். பொருளா தாரத் தேவைகளுக்காக தம் பிள்ளைகளை இளவயதில் திருமணம் செய்து கொடுக்கும் நிலையும் ஆங்காங்கே காணப்படுகின்றன. திருமண வாழ்க்கை, பாலியல் தொடர்பான போதிய அறிவு போன்றவை இல்லாதவிடத்து அங்கே பிரசவிக்கப்படும் குழந்தைக்கும் ஆரோக்கியம் சம்பந்தமான பிரச்சினை ஏற்படுகின்றது. குழந்தை பராமரிப்பிலும் சிக்கல் ஏற்படுகின்றது. இன்று பொதுஇடங்களில்கூட இச்சிறுமிகள் மனக்கசப்பிற்கு உட்படுத்தப்படுகின்றனர். குறிப்பாக பேரூந்துகளில் பெண் பிள்ளைகள் சுதந்திரமாக சென்றுவர முடிவதில்லை. 'நங்கி பயின்ட' என்று கூறி பஸ் நடத்துனர்கள் தகாத இடங்களில் கைவைப்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது. பெற்றோர்கள் பிள்ளையை ஒழுங்குமுறை யாக வளர்ப்பது தொடர்பில் கூடுதல் அக்கறை செலுத்த வேண்டும். தினமும் பிள்ளைகளுடன் குடும்ப விடயங்கள், நாட்டுநடப்புகள் பற்றிக் கலந்து ரையாடுதல், பொதுஇடங்களுக்கு குடும்பத்தோடு சேர்ந்துசெல்லுதல் போன்ற நெருக்கங்களை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்" என்று சமூகநல ஆய்வாளரான ஹிஸ்னி கூறினார்.

மகப்பேற்று மருத்துவ நிபுணர் டொக்டர் ராணி சிதம்பரப்பிள்ளை இப்பிரச்சினை பற்றி கூறும்போது, "பாதுகாப்பு வழங்க வேண்டிய தந்தையே மகளை தவறான முறையில் வழிநடத்தும் நிலை இன்று காணப்படுகிறது. அவ்வயதுப் பிள்ளைகளுக்கு போதிய அரவணைப்பு பெற்றோர்களிடமிருந்து கிடைக்காத நிலையில் வேறொருவர் மூலமாக அரவணைப்புக் கிடைக்குமாயின் அவர்கள் வழிமாறிப் போகக் கூடிய சந்தர்ப்பங்கள் அதிகளவில் உண்டு என்று ஆதங்கப்பட்டார்.


மகப்பேற்று மருத்துவ நிபுணர் டொக்டர் ராணி சிதம்பரப்பிள்ளை இப்பிரச்சினை பற்றிக் கூறும்போது, "பாதுகாப்பு வழங்க வேண்டிய தந்தையே மகளை தவறான முறையில் வழிநடத்தும் நிலை இன்று காணப்படுகிறது. அவ்வயதுப் பிள்ளைகளுக்கு போதிய அரவணைப்பு பெற்றோர்களிடமிருந்து கிடைக்காத நிலையில் வேறொருவர் மூலமாக அரவணைப்புக் கிடைக்குமாயின் அவர்கள் வழிமாறிப் போகக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகளவில் உண்டு என்று ஆதங்கப்பட்டார். இதனை விட யுத்தமும் இளவயதுத் திருமணங்களின் அதிகரிப்புக்கு ஒரு மறைமுக ஊக்கியாக இருந்துள்ளது. யுத்தத்தின் போது பலவந்தமாகப் போராட்டத்தில் இணைத்துக் கொள்ளும் நடவடிக்கையில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காகவும், படையினரின் கைதுகளில் இருந்து தப்புவதற்காகவும் நிகழ்ந்தேறிய ஏராளமான இளவயதுத் திருமணங்கள் இதற்கு நல்ல உதாரணம்.

இத்தகைய இளவயதுக் கர்ப்பங்களைத் தவிர்க்க, பாடசாலைகளில் பாலியல் தொடர்பான கல்வியறிவு வழங்கப்படல் வேண்டும். குடும்பத்தினரிடையே பரஸ்பர அன்பு, கலந்துரையாடல், சரியான நட்பு இருக்க வேண்டும். புகைபிடித்தல், மது பாவனை, ஆபாசத் திரைப்படங்களைப் பார்வையிடல் என்பவற்றைத் தவிர்ப்பதுடன் அவற்றில் ஈடுபடும் நண்பர்களிடம் பழகுவதையும் தடுக்க வேண்டும். அத்துடன் அவற்றுக்குத் தூண்டுவோரையும் நல் வழிப்படுத்த வேண்டும். ஊடகங்களும் பாலியல் உணர்வுகளுக்குத் தீனி போடும் நிகழ்ச்சிகளைத் தவிர்த்து சமுதாய விழிப்புணர்வுக்கு வழிகாட்டும் நிகழ்ச்சிகளை வழங்க வேண்டும். இவையே இளவயதுக் கர்ப்பங்களைக் குறைப்பதற்கான வழிகளாக அமையும்.



## இது எப்படி இருக்கு?

மூன்று பேர் ஒரு மோட்டார் சைக்கிளில போய்க்கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு Traffic பொலிஸ் கைகாட்டி நிறுத்தச் சொன்னார். அப்போது பைக்கில் இருந்த ஒருவர் கோபமாக "அண்ணே! ஏற்கனவே மூண்டு பேர் உட்கார்ந்து இருக்கிறம்! இதில நீ எங்க உட்காருவ..?" என்று கேட்டான்.






“பயணிகளின் துயரங்களையும் கவனயீனங்களையும் பயணியாக இருந்து நான் அனுபவித்ததால் ஓடும் பஸ்ஸில் எனது கவிதைத்தொகுதியை வெளியிடும் ஆவல் கொண்டேன்” என்று கூறியவர் வேறுயாருமல்லர். முதன் முதலில் ஓடும் பஸ்ஸில் கவிதை நூலை வெளியிட்டு சாதனை படைக்கவிருக்கும் இளம் கவிஞரான நெடுந்தீவு முகிலனே அவர்.

இம்மாதம் 10 ஆம் திகதி வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச்செல்லும் பேரூந்தில் இவ் வெளியீடு இடம்பெறவிருப்பது புதுமை யானது. ‘பயணிகள் கவனத்திற்கு’ எனும் இக்கவிதைத் தொகுப்பானது பஸ் பயணத்தில் இவருக்கு ஏற்பட்ட அனுபவங்களையே கூறி நிற்கின்றது.

தமிழிலக்கிய இதழியல் கல்லூரியில் இவருக்குப் பெயர் ‘பேஸ்புக்’ (?) பதினாறு வயதில் பொழுதுபோக்கிற்காக கவிதை எழுத ஆரம்பித்த இவர் இன்று 8 கவிதைத் தொகுப்புக்களைத் தந்திருக்கின்றார்.

அழகான ஒரு மாலைவேளையில் சுகமான தென்றல், உடலையும் உள்ளத்தையும் வருடிச்செல்ல இயற்கையை ரசித்துக்கொண்டு வெள்ளவத்தை கடற்கரையில் நின்றவரிடம் என்னை அறிமுகப்படுத்திக்கொண்டேன். இது வரை எட்டுக் கவிதைத் தொகுதிகளை வெளியிட்டும் எந்த ஆர்ப்பாட்டமும் இன்றி அதே மாறாத புன்னகையுடன் என்னை வரவேற்றார். அவரைவிடப் பெரிய மடிக்கணனி அவரது மடியில் இருந்தது. போட்டோ எடுக்கப்போகிறோம் எனத்தெரிந்ததும் பொக்கற்றில் இருந்து ஒரு ஜெல் பைக்கற்றை எடுத்து தலையில் தடவிக்கொண்டே “கெதியா எடுங்கோ... இருட்டாகப்போகுது” என்றார். போட்டோவிற்குப் போஸ் கொடுத்து அவரே களைத்துப் போய்விட்டார் என்றால் படமெடுத்த என்னுடைய நிலமை எப்படியிருக்கும் என்று நினைத்துப் பாருங்கள்.

“இலங்கை ஒரு தீவு. அதன் உள்ளே ஒரு தீவு நெடுந்தீவு. அத்தீவுக்குள்ளே ஒரு மூலையில் என்வீடு. பிறந்தது, படித்தது, பழகியது, இதுவரை வாழ்ந்தது எல்லாம் கம்பிகளால் அடைக்கப்படாத



முன்வந்திருக்கின்றார்கள் என்றால் அது நவீன ஊடகங்களின் பயன்பாடே ஆகும். பின்னர் இலங்கை ஊடகவியல் கல்லூரியில் நான் மாணவனாக இருந்ததால் நானும் ஓர் பதிவ ராகும் (Blog) வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. வாசகர்கள் எனக்கெழுதிய வாழ்த்துக்களும் அவர்கள் கொடுத்த வரவேற்புக்களும் என்னையே எனக்கு ஒரு இலக்கியவாதியாக காட்டிக்கொடுத்தது.

தொடக்கத்தில் எனது கவிதைகள் ஒருசாராருக்கு உரியதாகவே காணப்பட்டது. இதுவரை ஒரு நபரைப்பற்றியோ அல்லது ஒருவரின் வேண்டுகோளுக்காகவோ கவிதை எழுதிய அனுபவம் எனக்கில்லை. ஆயினும், எவ்வகை இலக்கியமாயினும் அந்தந்த காலச்சூழலுக்கேற்ப அதன் பாடுபொருள்கள் அமையும். சங்ககாலத்தில் கற்பு, கருணை, வீரம்

ரசிகர்கள் வட்டத்தால் வழங்கப்பட்ட ‘கவிமுரசு’ எனும் விருதையே...”

யாருமே தங்கள் முதல் படைப்பை வெளியிடும்போது அவர்களுக்கு இருக்கும் அந்த டென்ஷன் கலந்த சந்தோஷம், பதைபதைப்பு பற்றி சொல்லவே தேவையில்லை. இவரும் அதற்கு விதிவிலக்கல்ல.

“ஒரு கவிதைப் புத்தகத்தை வெளியிடும்போது நான் ஒரு மகவைப் பெறுவது போல ஒரு உணர்வோடு இருப்பேன். அது எனக்கு விருதைப் பெற்றுத்தரும்போது அந்தக் குழந்தை வளர்ந்து இந்தச் சமூகத்தில் ஒரு நல்ல குழந்தையாகிவிட்டது என்று உணர்வேன். அந்தவேளை என் மனது ‘ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்’ என உச்சரிக்கும்” என்றார் உண்மையில் ஒரு தாயுணர்வோடு.

**எதிரிகளே - உங்கள்**
**முகமூடிகளை ஒரு தடவை**
**கழற்றுங்கள் - உங்கள்**
**முகங்களை**
**நாங்கள் ரசிக்க அல்ல!**
**எங்களிலும் சிலரைக் காணவில்லை**

என்ற கவிதையை தனக்குப் பிடித்த வரிகளாக குறிப்பிட்டுச் சொன்ன முகிலன் சமூகப் பிரச்சினைகளை அதிகமான கவிதைகளில் தொட்டுச் சொல்லி வருகிறார். தாய்மொழி தமிழ் என்றபடியால் தமிழ் மீதான காதல் அதிகரித்து இப்போது தமிழ் கவிதைகளே இவரது காதலியாகி விட்டன.

## ‘எனது கவிதைகளை கர்வத்துடனும் அகங்காரத்துடனும் வெளியிடுவதே சிறந்தது என்று கருதுகிறேன்’

## கவிமுரசு நெடுந்தீவு முகிலனுடன் ஒரு கடற்கரைக் கலக்கல்

கலக்கல், படங்கள் : த. இரவிவர்மன்

வரலாற்றில் தனது கவிதைக்குக் கிடைத்த களத்தில் வைத்தே கவிதை நூலை வெளியிடும் வித்தியாசமான முயற்சி இது எனலாம்.

“எனது படைப்புக்கள் அனைத்தும் எனக்கு முழுநிறை வைத் தந்தவை. ஆனாலும், என் எல்லாத் தொகுதிகளும் எல்லோருக்கும் முழுநிறைவை நிச்சயமாக ஏதோ ஒரு வகையிலாவது கொடுத்திருக்கும். காரணம் நான் குறைகளை எழுதுபவன்” என்னும் முகிலனை அறிமுகப்படுத்த வேண்டியதில்லை. அறிமுகத்துக்குரியவரும் இல்லை.

கவித்துவமான கருத்துக்களுடன் எப்போதும் கரைந்துகொண்டே இருக்கும் குணம். ஊர்பெயர் போலவே நெடிய தோற்றம். ஒரு பார்வையிலேயே பார்ப்போரை சுண்டியிழுக்கும் அழகிய கண்கள். தெத்துப்பல் தெரிய சிரிக்கும்போது பார்ப்பதற்கு கவர்ச்சியாய் இருக்கும். யாரைச் சந்தித்தாலும் கலகலப்பாகக் கவிதை பற்றியே கதைத்துக் கொண்டிருக்கும் இயல்பு. தாள்களும் நோட்புக்கும் பேனையும் எப்போதுமே அவரது கைளில் தயாராக இருக்கும். எண்ணத்தில் உருவாகுவதை உடனே கவிதையாக வடிப்பதற்கு...

அந்தக் கிராமக்கூட்டில்தான். உயர்கல்வி தேடி தலைநகருக்கு வந்தேன். ஆனாலும், என் உயிரும் சுவாசமும் நேசமும் என் தமிழ் உறவுகளோடுதான்” என்று வைரமுத்து ரேஞ்சில் அடுக்கித் தள்ளிக்கொண்டே போன முகிலனை இடைநிறுத்தி இலக்கியப் பயணம் பற்றிக் கேட்டேன்.

“ஆரம்பகாலங்களில் என் இலக்கியப் பயணம் பத்திரிகைகளை நோக்கியே பறந்து கொண்டிருந்தது. பத்திரிகை, சஞ்சிகைகளில் எழுதிய நான் பின்னர் வானொலி, தொலைக்காட்சி என்று எழுத ஆரம்பித்தேன். அதன்பின்பு பல இணையத்தளங்களில் எழுதினேன். தற்போதும் எழுதிக்கொண்டிருக்கிறேன். உதாரணமாக முகநூலில் (facebook) நான் கட்டாயம் ஒவ்வொரு கவிதைகளை நாளாந்தம் எழுதிக்கொண்டிருப்பேன். புலம்பெயர் நாடுகளில் எனது கவிதைகள் பேசப்படுவதோடு எனது அடுத்தடுத்த தொகுப்புக்களை வெளியிடுவதற்கு அந்நாடுகளில் வாழும் பல உறவுகள்

ஆகியவையும் சித்தர்கள் காலத்தில் ஞானமும் பாரதி காலத்தில் தேசமும் விடுதலையும் எழுதுவதற்கு தூண்டுகோலாக இருந்ததைப்போல் எனது இன்றைய சமூகத்தில் வறுமை, இடப்பெயர்வு, போர், அகதி, அநா தை, ஊழல், கொள்ளை, மோசடி, வரதட்சணை, கொலை, காமம், அழிவு, பிணி, ஏழை, பிச்சை, பழிவாங்கல், கொடுமை, ஊனம் என பல்வேறுபட்ட யதார்த்த சம்பவங்களுக்கு ஒரு சவாலா கவே நான் எழுத ஆரம்பித்தேன்” என்று அவர் உணர்ச்சிகலந்த தொனியில் கூறும்போது இந்த வயதில் அவருக்குள் கொழுந்து விட்டெரிந்த முற்போக்கு சிந்தனைகளை என்னால் நன்றாகவே அறிய முடிந்தது.

கவிதைப் பயணத்தில் விருதுகள் எனும்போது உங்கள் மனதில் வருவது பற்றிக் கொஞ்சம் கூறுங்களேன்.

“என் கவிதை ஒன்று எனக்கு ஞாபகம் வருகிறது. ‘விருதுக்காக ஒருவன் எழுதுகிறான். விதவையான வெள்ளைத்தாள்களில்..’ விருதுக்காகவோ வியாபாரத்திற்காகவோ நான் இதுவரை ஒரு வரியைக்கூட எழுதியதில்லை. என்றாலும் நான் எனக்கு கிடைத்த சிறந்த விருதுகளில் ஒன்றாக கரு துவது 30.01.2011 அன்று யாழ்ப்பாண

**“முள்ளை முள்ளால் எடுத்தலே என் வாதம். ஆதலால் ‘பயணிகள் கவனத்திற்கு’ தொகுதியா னது நான் பஸ் பயணங்களில் நேரடியாக அனுபவித்தவற்றின் பதிவுகள் என்றபடியால் அதை பஸ்ஸிற்குள்ளேயே வெளியிட விருப்பம் கொண்டேன். பயணிகளின் துயரங்களையும் கவனயீனங்களையும் பயணியாக இருந்து நான் அனுபவித்ததால் இந்த எண்ணம் எனக்கு வந்தது”**

தற்காலத்தில் இலக்கியங்கள் பெரிதும் போற்றப்படுவதில்லை. அதன் ஆயுட்காலமும் குறைந்துகொண்டு வருகின்றது. இருந்தும் இவர்போன்ற கவிஞர்கள் கவிதைகளுக்கு புத்துணர்வு அளித்து வருவதால் கவிதைகளுக்கு ஓரளவேனும் உயிரிருக்கிறது. இவரது கிராமத்து மக்கள்கூட தமிழோடு ஒன்றிக் கலந்தவர்கள். அதனாலோ என்னவோ இவரது வளர்ச்சிக்கு முன்னும் பின்னும் தமிழும் சேர்ந்தே

வளர்ந்துகொண்டிருக்கின்றது.

நான்கு வருடங்களுக்கு முன் தன் உறவுகளுக்கு மத்தியில் 'மனத்திரை மேகங்கள்' என்ற கவிதை நூலை வெளியிட்ட முகிலன் தனது வெற்றிகரமான ஒன்பதாவது படைப்பான 'பயணிகள் கவனத்திற்கு' என்ற கவிதைத் தொகுதியை இம்மாதம் 10ஆம் திகதி வித்தியாசமான முறையில் வெளியிட இருக்கின்றார்.

இதுபற்றி அவரிடம் கேட்டபோது...

"முள்ளை முள்ளால் எடுத்தலே என் வாதம். ஆதலால், 'பயணிகள் கவனத்திற்கு' தொகுதியானது நான் பஸ் பயணங்களில் நேரடியாக அனுபவித்தவற்றின் பதிவுகள் என்றபடியால் அதை பஸ்ஸிற்குள்ளேயே வெளியிட விருப்பம் கொண்டேன். பயணிகளின் துயரங்களையும் கவனயீனங்களையும் பயணியாக இருந்து நான் அனுபவித்ததால் இந்த எண்ணம் எனக்கு வந்தது" என்றார்.

தற்காலத்தை நோக்கும்போது ஏதோ ஒருசில கவிதைகளை எழுதிவிட்டு தங்களைக் கவிஞர்கள் என்று தம்பட்டம் அடித்துக்கொள்பவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர்... என்று நான் கூறிக்கொண்டிருக்கும்போது என்னை இடைமறித்து...

"அப்படியாயின் என்னை எந்த இடத்திலும் கவிஞர் என்று அழைத்து விடாதீர்கள். ஆனாலும், எனது கவிதை களை கர்வத்துடனும் அகங்காரத்துடனும் வெளியிடுவது சிறந்தது என்று கருதுகிறேன். சாதாரணமாக கவிதைகளை எல்லோராலுமே எழுதமுடியும். ஆனால், எல்லோரும் கவிஞர் ஆகிவிடமுடியாது. எழுதுகிறவர்கள் எல்லோரும் தாங்கள் கவிஞர்கள் என்று எண்ணுவதாலேயே வாசகர் பற்றாக்குறை காணப்படுகிறது.

ஆயினும் எனது கவிதைகளின் முதல் வாசகன் நானே" என்று பெருமைபடக் கூறிய முகிலனுக்கு பி. சிதம்பரநாதனின் "அரண்மனைத் திராட்சைகள்" கவிதைத் தொகுதி மிகவும் பிடிக்குமாம்.

அத்தோடு இவரது அடுத்த கவிதைத் தொகுதியை இந்தியாவில் அச்சடித்து ஒரே தடவையில் ஐந்து நாடுகளில் வெளியீடு செய்வதற்கான முயற்சியில் இறங்கியிருப்பதாகத் தெரிவித்தார். நேரமும் கடக்க அவருக்கு வாழ்த்துக் கூறி விடைபெற்றேன்.

ஒரு எழுத்தாளனுக்கு அவரது எழுத்துக்கள். அவர்களது மொழியைச் சார்ந்தவர்களுக்காவது முழுமையாக சென்றடையுமாயின் அதுவே பெரிய கௌரவம். இதற்கு வாசகர்களைச் சென்றடையக்கூடிய ஊடகங்களை முதலில் தெரிவு செய்ய வேண்டும். ஆனால் இன்றைய ஊடகங்கள் தமக்கென ஒரு கொள்கையை வைத்துக்கொண்டு செயற்படுவது சற்று வேதனை-யே.

இனியும் காதல், இலக்கியம் என்று இருப்பதைவிட்டு எமது துயர்தோய்ந்த மக்களின் விடிவுக்காக கவி வரிகளால் வரலாறு படைக்க முகிலனைப் போன்று முன்வரவேண்டும். அதன்மூலம் எமது விடிவுக்கான புதிய மாற்றமொன்றை படைக்கலாம்.

'இலக்கியம் இரைப்பைக்கு இரை போடாது' என்று சொல்வார்கள். ஆனால் இதயங்களில் வலிக்கும் ரணங்களுக்கு இலக்கியம் தீனி போடும். என்றாலும் இலக்கியவாதிகள் எல்லோரும் அரசியல் வாதிகள் போல்

பிரிந்திராமல் ஒன்றிணைந்தால் இலக்கியமும் உயிர்வாழும். உறவுகளும் நிலைபெறும்.



# எட்டாவது நரகம்

ஆடும் மனிதன் ஆட்டம்காண அலைகளொன்றாய் கூடின!
ஆசைதீர பூமிப்பந்தை அடித்துவிளையாடின!
ஆடுமாடு கோழிபூனை அழுதுகண்ணை மூடின!
ஆறுகுளங்கள் நதிகள் சேர்ந்து ஊழிப்பாடல் பாடின!

மேடுபள்ளம் பாய்ந்தவெள்ளம் மேலெழுந்து சென்றன!
மேகக்கூட்டம் வானைப்பார்த்து பாவம்பூமி என்றன!
பாடுபட்டு சேர்த்தவற்றை பகிர்ந்து அலைகள் தின்றன!
படையைக்கண்ட தமிழர்போல பயந்துயாவும் நின்றன!

வீடுகாணி 'கார்'கள்கூட கால்முளைத்து நடந்தன!
வியக்குமளவு கப்பல்கூட வீட்டின்மேலே கிடந்தன!
வாடும்மனிதன் வாட்டம்கண்டு வானம்பூமி அழுதன!
வாழவேண்டும் உயிர்களென்று வையம்யாவும் தொழுதன!

சூடுபட்டபாலை மீண்டும் சுனாமிப்பூனை நக்கின!
'சூச்சூ..'என்று விரட்டிப்பார்த்தும் கழிவையெங்கும் கக்கின!
கேடுகெட்ட மனிதவாழ்க்கை கிடந்ததற்குள் சிக்கின!
கேள்விகேட்ட அறிவும்கூட தோல்வியுற்று முக்கின!

உயிரைக்கையில் பிடித்துக்கொண்டு உயிர்கள்யாவும்
கெஞ்சின!
உலகக்கோப்பை வென்றார்போலே அலைகள்கூடிக்
கொஞ்சின!
அகிலமின்றே அழியுமென்று இருக்கும் நிலங்கள் அஞ்சின!
அலைகள்தின்று போட்ட மிச்சம் இமயமலையை விஞ்சின!

காடுகழனி யெங்கும்வெள்ளம் கரைபுரண்டு ஓடின!
கடவுளில்லை என்றவாயும் கடவுள்நாமம் கூறின!
காடுகரை யெங்கும்பிணங்கள் அழுகிப்புழுத்து நாறின!
நாடுஎட்டாம் நரகம்போன்று இமைக்கும்பொழுதில் மாறின!

கவிஞர் பொத்துவில் அஸ்மின்

# உறங்காத நிலம்

நிலமும் உயிர்களும் உறக்கமற்றலைகிற
காலத்தில் நீ உறங்காதிருக்கிற இடத்தை நானேறிவேன்
விதைகள் நிறைந்த நிலத்தை
நிலம் தின்னும் பெருங்கால்கள் மிதிக்கின்றன
உன்னைப்போலவே எல்லோரும்
உயிரோடு புதைக்கப்பட்டவர்கள்
அதனால் இந்த நிலம் இடையிடையே துடித்தசைகிறது
இரத்தமும் கண்ணீரும் கனவும் காதலும்
எல்லா இடங்களிலும் கசிகிறது.

நீ உறங்கா நிலத்தில் பேய்கள் பசியோடு அலைகின்றன
நிலத்தை கொள்ளையிட்டு
வண்டிகளில் வெட்டி ஏற்றிக் கொண்டு போகும் இரவில்
நீ என்ன செய்வாய்? என்னைக் குறித்து நீ வைத்திருக்கும்
வார்த்தைகளை என்ன செய்வாய்?
உன் கூந்தல் முடிகள் நிலத்தில் கலந்து எப்பொழுதும் பறக்கின்றன.

உன்னை முத்தமிட துடிக்கும் தருணங்களில்
நீயும் நானும் கலந்த நிலத்தை முத்தமிடுகிறேன்
வாழ் நிலத்தின் கீழாய் நீ என்னை தேடி அலைகிறாய்
அங்கு தெருக்கள் இருக்கின்றனவா?
நமது பிரியத்தை பகிரும் வெளிகள் உள்ளனவா?
குருதியில் உறைந்திருக்கிற
நம் பெருங்கனவைப்போல நமது காதலும் உயிரோடிருக்கிறது
நம் காதலைப்போல கனவுக்கும் மரணமில்லை
நான் உன்னை மணல்வெளிகளை கிளறியும்
சிறுகடலில் மூழ்கியும் தேடிக் கொண்டிருக்கிறேன்.

தோல்வியின் பின்னரான பிரிவின் தனிமை
என்னைக் கொல்லும் இருளால் நிரம்பிக்கொண்டிருக்கிறது
உன் முத்தங்களில்லாத காலத்தில்
எனது வானம் இருண்டு கிடக்கிறது
உன்னைக் குறித்து
நமது நகரமும் நிலமும் என்னை ஏமாற்றிக் கொண்டிருக்கிறது
கனவு மக்களின் தாகங்களுடன்
நமது முத்தத்தின் ருசியையும் இந்த நிலமறியும்
உறங்காத நிலம் மீண்டும் முளைப்பேன் என்கிறது
கனவோடு காலத்தோடு பொழுதுகளுடன்
மீண்டும் நீ காதல் நிலத்திலிருந்து முளைப்பாயா

தீபச்செல்வன்

# இணையத்தில் தரவிறக்கம் செய்த அனைத்து கோப்புகளையும் கண்டறிய

இன்று மென்பொருட்களை தரவிறக்கம் செய்ய நிறைய தளங்கள் உள்ளன. அதனை கூகிளில் சென்றாலே கண்டறிந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம். ஆனால் நமக்குத் தேவையான வீடியோக்கள் மற்றும் ஓடியோக்களை தரவிறக்கம் செய்வதற்கு ஒரு சில நேரங்களில் கூகிளில் தேடினால் சரியான இணையம் கிடைப்பதில்லை.

அந்த குறையைப் போக்க ஒரு அருமையான தளம் உள்ளது. இந்தத் தளத்தில் நீங்கள் தேடும் கோப்புகளுக்கு இணைய முகவரி மட்டுமே கிடைக்கும். இணையத்தளங்களான Rapidshare, Mega upload, 4Shared, Mediafire, Hotfile மேலும் பல தளங்களில் இருந்து நமக்கு வேண்டிய கோப்புகளின் இணைய முகவரிகளை துல்லியமாக நமக்கு தருகிறது. இனி நமக்குத் தேவையான கோப்புகளை சுலபமாக தரவிறக்கம் செய்துகொள்ளலாம். தேடி அலைய வேண்டியதில்லை.

இணையதள முகவரி: http://filetram.com/

File Tram

# லினக்ஸ் Linux™ தமிழாக்கம் தமிழ்



ஒருங்குறி (unicode) எழுத்துருக்கள் நிறுவப்பட்டு தமிழில் தட்டச்சிட முடியும் கணனி பயன்படுத்துபவர் யாரும் இந்தப் பணியில் சேர்ந்து கொள்ளலாம். உங்களுக்குப் பிடித்த திட்டத்தின் ஒருங்கிணைப்பாளருக்கு ஒரு மின்னஞ்சல் அனுப்பி ஆர்வத்தைத் தெரிவித்தால் ஒரு உரைக்கோப்பு (text file) அனுப்பி வைப்பார்கள். Poedit என்ற உரைத் தொகுப்பை (text editor) பயன்படுத்தி விண்டோஸ் கணனிகளிலும் KBabel என்ற மொழிபெயர்ப்புக் கருவியைப் பயன்படுத்தி லினக்ஸ் கணனிகளிலும் மொழி பெயர்க்கலாம். சாளரத்தின் மேற்பகுதியில் ஆங்கிலச்சொல் வரும். கீழ் பகுதியில் தமிழ்ச் சொல்லை உள்ளிட்டால் வேலை முடிந்தது.

ஒவ்வொரு கோப்பிலும் நூற்றுக் கணக்கான சொற்றொடர்கள் இருக்கலாம். முடிந்தவற்றை மொழிமாற்றி கோப்பைச் சேமித்து ஒருங்கிணைப்பாளருக்கு அனுப்பிவிட்டால் உங்கள் பங்களிப்பு ஆரம்பித்துவிட்டது.

உங்களால் மொழி மாற்றம் செய்யப்பட்ட சொற்கள் பல்லாயிரக் கணக்கான கணனிகளுக்குப் போய்ச்சேர்ந்து பயன்படுத்தப்படும். மொழிபெயர்த்தவர்கள் பட்டியலில் உங்கள் பெயரும் சேர்ந்து கொள்ளும். முயற்சித்துப் பாருங்கள்.




இயற்கை அனர்த்தங்களில், சுனாமியை முன்கூட்டியே உணரக்கூடிய அளவுக்கு தொழில்நுட்பம் முன்னேறிவிட்டது. இதன் அடுத்த முயற்சி நிலநடுக்கத்தை முன்கூட்டியே தெரிந்துகொள்வதாகும். இங்கிலாந்து மற்றும் ரஷ்ய விஞ்ஞானிகள், லண்டன் கல்லூரியைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களான ஆலன் ஸ்மித், விட்டாலி சிம்யேரெவ் ஆகியோர் தலைமையில் இணைந்து மொஸ்கோவில் இதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். இந்தச் சோதனை வெற்றிகரமாக முடிந்ததையடுத்து செயற்பாடுகளையும் தொடக்கியுள்ளனர்.

தொலைக்காட்சிப் பெட்டியின் அளவில் இருக்கும் 'ட்வின் சொட்' எனும் செயற்கைக்கோள்கள் இந்த ஆய்வில் ஈடுபடப்போகின்றன. விண்ணில் செலுத்தப்படும் இந்த இரண்டும் சில நூறு கி.மீ. தொலைவில் பூமியை வட்டமடித்துக் கொண்டே இருக்கும். எரிமலையின் செயற்பாடுகள் மற்றும் பூமியில் கணிசமான விபரீத மாற்றங்கள் தெரிந்தால் தரை கட்டுப்பாட்டு மையத்துக்கு செயற்கைகோளில் இருந்து தகவல் வரும். நிலநடுக்கம் ஏற்பட அதிக வாய்ப்புள்ள இடங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு கண்காணிக்கப்படும். இதனை 2015 இல் விண்ணில் செலுத்தவுள்ளனர்.



# பூமியில் நடக்கப் போகும் இயற்கை அனர்த்தங்களை முன்கூட்டியே அறிய முடியும்

லெய்செஸ்டர் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இரத்த அழுத்தத்தை அளவிடும் முறையில் ஒரு புரட்சியை ஏற்படுத்தும் கருவி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர். "கடிகாரம் போன்ற இக்கருவியில் உள்ள சென்சார், இரத்தக் குழாயின் நாடித்துடிப்பு அலையை அளவிட்டு கணிக்கும் விபரங்களை பழைய தோள்பட்டை கருவி மூலம் அனுப்புகிறது. இதன்மூலம் இதயத்துக்கு அருகிலுள்ள அழுத்தத்தை ஏயார்டா மூலம் அறியலாம். ஏயார்டா என்பது இதயத்திலிருந்து மில்லிமீற்றர் அளவு அருகில் இருப்பது. தோள்பட்டையைவிட இவ்விடத்தில் அழுத்தம் அதிகம். ஏயார்ட்டாவின் அழுத்தத்தை அளவிட்டால் மாத்திரமே சிகிச்சை பூரணமாக இருக்கும். மூளை மற்றும் இதயத்திற்கு அருகில் உள்ள இரத்த அழுத்த அளவை அறிவது, இதயநோய்கள் மற்றும் மாரடைப்பு சிகிச்சைகளில் அவசியமாகத் தேவைப்படுகின்றது. இந்த நோயாளிகளுக்கு தங்களின் சென்ட்ரல் ஏயார்டிக் சிஸ்டோலிக் பிரஷரை அளவிடவும் அதற்கான சிகிச்சைகளை வீட்டிலேயே செய்து கொள்ள முடியும்" என்று பேராசிரியர் பிரையன் வில்லியம்ஸ் தெரிவித்தார்.



# இரத்த அழுத்தத்தை அளவிட புதிய கருவி

# கூகிளுக்குப் போட்டியாக போர்லுக்




கூகிள் உள்ளிட்ட பல தேடியந்திரங்களில் ஒரே நேரத்தில் மற்றும் ஒரேஇடத்தில் தேட உதவும் தேடியந்திரம்தான் போர்லுக்.

இதைவிட சுலபமாக பல தேடியந்திரத் தேடலை பயன்படுத்தமுடியாது என்று சொல்லக்கூடிய அளவுக்கு மிகமிக எளிதாக தேடல் சேவையை வழங்குகிறது.

கூகிளைவிட எளிமையான முகப்பு பக்கத்தைக் கொண்ட இதில் Type செய்யும்போதே அற்புதம் ஆரம்பமாகிவிடுகிறது. முதல் எழுத்தை அடிக்கத் தொடங்கியதுமே தேடப்படும் சொல் இதுவாகத்தான் இருக்கும் என்ற கணிப்பில் அந்த சொல்லுக்குரிய தேடல் முடிவுகள் அணிவகுக்கின்றன. பொருந்தக்கூடிய பிறசொற்களும் கொடுக்கப்படுகின்றன.

அந்த கணிப்பு சரியானது என்றால் தேடல் முடிவுகளை பரிசீலிக்க தொடங்கிவிடலாம். இல்லையென்றால் நாம் தேட உத்தேசித்த சொல்லை முழுவதும் அடித்து தேடலாம். ஐ டியூன்ஸ் மூலம் பாடல்களையும் maps மூலம் வரைபடங்களையும் தனியே தேடலாம்.

நாடுகளுக்கான தனித்தனி பட்டியலும் இடம்பெறுகின்றன. செய்திகள், புகைப்படங்கள், வீடியோ என தனித்தனியே தேடிக்கொள்ளும் வசதியை தரும்.

தேடியந்திரங்கள் எல்லாவற்றையும்விட அதிக சிக்கல் இல்லாமல், குறுக்கீடுகள் இல்லாமல் இந்த சேவை மிகவும் எளிமையாக இருக்கிறது.



# தத்துவ விசாரம்

“முழுமையான நான் கொண்டிருக்கும் அதே சிருஷ்டிக்கும் சக்தியினை என்னுடைய எண்ணற்ற அங்கங்களாகிய உங்கள் ஒவ்வொருவருக்கும் கொடுத்திருக்கின்றேன்..”

கடவுளே உனக்குக் கண் இல்லையா, ஏன் இப்படிச் செய்தாய் என்றுநாம்எமதுவாழ்க்கையில்பலதடவைகள் அரற்றியிருப்போம். ஏன் ஜப்பானில் சுனாமி வந்து இவ்வளவு அழிவுகளையும் ஏற்படுத்த வேண்டும்? ஏன் உலகமெல்லாம் யுத்தங்களும் வன்முறைகளும் அதிகரித்து மக்கள் அவலச் சாவினை அடையவேண்டும்? சரி, இதையெல்லாம் விட்டாலும் ஏன் எங்கள் சொந்த வாழ்க்கையில் நாம் நினைத்தது நடப்பதில்லை? ஏன் உறவுகள் பிரிகின்றன? ஏன் வறுமையால் வாடவேண்டும்?

நாங்கள் எப்பொழுதும் இப்படி நடந்தால் நல்லது, இப்படி நடந்தால் கெட்டது என்று வாழ்க்கையைப் பிரித்துப் பார்த்தபடியே இருக்கின்றோம். ஆனால் எங்களுக்கு கூடாததாக நடப்பது இன்னொருவருக்கு நன்மையாகப் போகின்ற விந்தையை யோசித்துப் பார்த்ததுண்டா? என்னுடைய நண்பர் தன்னுடைய ஜப்பான் காரை விற்பதற்காக முயற்சி செய்து கொண்டிருந்தார். இலங்கை அரசாங்கம் கார் மீதான வரிகளை இறக்கியதும், கார் விலைகளும் பொலபொலவெனச் சரியத் தொடங்கின. அவருக்குப் பெருத்த ஏமாற்றம். ஜப்பானில் சுனாமி தாக்கிய சில நாட்களில் முகமெல்லாம் சிரிப்பாக என்னிடம் வந்தார். “இப்ப ஜப்பான் கார்களுக்கு கிராக்கி வந்திட்டுதாம். கார் விலை ஏறப்போகுதாம். சுனாமியால இன்னும் கொஞ்ச நாளுக்கு அங்கேயிருந்து கார்கள் வராது எண்டதாலதானாம் இந்த விலையேற்றம்..” என்றார்.

சுனாமி ஜப்பான் மக்களுக்குக் கூடாதுதான், ஆனால் அது எனது நண்பருக்கு நல்லதாகப் போய்விட்டது பார்த்தீர்களா? ஒருவருக்கு நல்லதாகப் போகும் விஷயம் நிச்சயமாக இன்னொருவருக்கு கெட்டதாகப் போய்விடுகிறது. ஒருவர் இலாபம் ஈட்டினால் யாரோ ஒருவருக்கு நட்டமாகப் போய் விட்டது என்றுதானே அர்த்தம்? நிறைய கார் வசதிகளும், மாடிக் கோபுர ஆடம்பர நகர வாழ்க்கையும் எங்களுக்கு நல்லது. ஆனால் மரங்களையும் காடுகளையும் நம்பி வாழுகின்ற பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் அது கெட்டது. இப்படி நல்லது என்ற ஒன்று, அதே நேரத்திலேயே கெட்டதாகும் ஏராளமான உதாரணங்களை நீங்கள் காட்டிக்கொண்டே போகலாம்.

அப்படியானால் உலகத்தில் எது நல்லது எது கெட்டது? கடவுள் ஒரு உயிருக்கு நல்லதைக் கொடுத்து அதை இன்னொருவருக்கு கெட்டதாக ஆக்கி விடுகிறாரா? இதை யோசித்துப் பார்த்தால் நல்லது கெட்டது என்று ஒன்றுமேயில்லை என்பது புரியும். நல்லது கெட்டது என்றில்லை. எல்லாமே ஒன்று என்று நாம் முடிவெடுத்தால், அந்த நல்லதல்லாத கெட்டதல்லாத எல்லாவற்றையும் செய்பவர் யார் என்கின்ற கேள்வி எழும்.

சுனாமி ஏற்பட்டது, பூமித்தட்டுக்கள், கடலடியின் எரிமலைகள் என்று இயற்கை இயங்கும் விதிகளுக்கு அமைந்தது. கார் விலை ஏறுவது டிமாண்ட் சப்ளை என்று வர்த்தகம் இயங்கும் விதிகளுக்கு அமைந்தது. இந்த உலகில் சகலதுமே தத்தமது விதிகளுக்கு அமைய இயங்கி ஒன்றின் மீதொன்று தாக்கம் செலுத்திக்கொண்டே இருக்கின்றன. அந்த விதிகளைத் தொழிற்பட வைப்பதெல்லாம் நாங்களேயன்றி வேறொருவருமில்லை.

நாம் எமது வாழ்க்கை முறையால் இயற்கைச் சக்திகளை மாற்றுகின்றோம், அந்த மாற்றத்தினால் இயற்கை மாறுபாடான நடத்தையை வெளிக்காட்டும்போது அதனை இயற்கையின் சீற்றம் என்கின்றோம். அரசியலில் அதிகார மையங்களை உருவாக்குவதும் நாங்கள்தான், பிறகு அவை தம்மைப் பாதுகாத்துக்கொள்ள யுத்தங்களைக் கட்டவிழ்த்தால் அவஸ்தைப்பட்டு இறப்பதும் நாங்கள்தான்.

உங்கள் வாழ்க்கையின் சூழ்நிலைகளையும் நிலைமைகளையும் உருவாக்குவது கடவுளின் வேலையல்ல. தன்னுடைய பிம்பமாக உங்களை சிருஷ்டித்தார், நீங்கள் ஏனைய எல்லாவற்றையும் சிருஷ்டிக்கிறீர்கள். உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு கணமும் உங்கள் நிலைமைகளையும் சூழ்நிலைகளையும் வாழ்க்கையையும் நீங்கள் சிருஷ்டிக்கும் கணமாகும். கொஞ்ச நேரம் அமைதியாக உட்கார்ந்து எங்கள் வாழ்க்கையை நாமே சிருஷ்டிக்கும் அற்புதத்தினை உணர்ந்து பாருங்கள். எங்களுக்குள் எவ்வளவு சக்தி இருக்கிறது என்று மலைத்துப் போய்விடுவீர்கள்!

- ரிஷி பத்தினி -

# இருக்கிறம்

## ஒரு பொல்லாப்புமில்லை

சாம்பலிலிருந்து எழும் பீனிக்ஸ் பறவையாக ‘இருக்கிறம்’ மீண்டும் எழத் தொடங்கியிருக்கிறது. கடந்த நான்கு வருடங்களில் சஞ்சிகையை மாதமிருமுறை வெளியிடுவதில் ஏற்பட்ட தாமதங்கள், பொருளாதாரத் தடைகள் என பல பிரச்சனைகளுக்கு முகங்கொடுத்து ‘இருக்கிறம்’ வெளிவந்துகொண்டிருந்ததை யாவரும் அறிவர். அதிகரித்துவரும் செலவீனங்கள், விநியோகத்திலுள்ள ஆட்பல பற்றாக்குறை, சந்தைப் படுத்தலிலுள்ள குறைபாடுகள் என பல்வேறு நெருக்கடிகளுக்குள் ‘இருக்கிறம்’ சிக்கித் திணறத் தொடங்கியதால் ஜனவரி மாதம் 64 ஆவது இதழுடன் தனது பயணத்தை தற்காலிகமாக இடைநிறுத்தியிருந்தது.

எனினும், இச்சஞ்சிகைக்காக இரவுபகலாக கண்விழித்து அயராது பாடுபட்டுவரும் துடிப்புமிக்க இதழியல் துறைசார்ந்த இளைஞர் குழுவினருடன் பணியாற்றும் துணிச்சல் மிக்க பத்திரிகையாளர்களும் எழுத்தாளர்களும் மீண்டும் ‘இருக்கிறம்’ சஞ்சிகையை கொண்டுவர பல முயற்சிகளையும் மேற்கொண்டனர். மனதில் துணிவும் நம்பிக்கையும் ஆதரவளிக்கும் வாசகர்களும் இருக்கிறமுடன் கூடவே இருந்ததால் மீண்டும் ‘இருக்கிறம்’ தனது பயணத்தை வார இதழாக ஆரம்பித்து இருக்கிறது.

இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழ்ச் சஞ்சிகை ஒன்றை ஆரம்பித்து தொடர்ந்து நடத்துவது என்பது எந்தளவுக்கு சவாலானது என்பது அனைவருக்கும் தெரியும். குறிப்பாக தமிழகத்திலிருந்து வெளிவரக்கூடிய சஞ்சிகைகளின் போட்டியைச் சமாளிக்க வேண்டும். அந்தளவு தூரத்திற்கு அதற்கான விடயப்பரப்போ, அச்சுத் தரமோ, வாசகர்களின் ஆதரவோ இலங்கையில் இல்லை. அதனால்தான் இலங்கையைப் பொறுத்தவரையில் நின்றுபோன சஞ்சிகைகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

பற்றி எரியும் அன்றாடப் பிரச்சினைகள், தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் வாழ்வைப் புரட்டிப் போட்டு நிற்கும் சிக்கல்கள் போன்றவற்றையே பெரும்பாலும் உள்ளடக்கங்களின் பிரதான கருப்பொருளாகக் கொண்டு ‘இருக்கிறம்’ வெளியாவதால் அது தமிழ் பேசும் மக்களின் உயிர்த்துடிப்பின் பிரதிபலிப்பாக நிற்கின்றது என்பது வெள்ளிடைமலை. ஏனைய சஞ்சிகைகள் இலக்கியத்தை முதற் பொருளாகப் பேச, ‘இருக்கிறம்’ வெகுசன வாசிப்புக்குத் தீனிபோடும் பல்துறை சார்ந்த இதழாகத் தன்னை அடையாளப்படுத்தி நிற்கிறது. இலக்கியத் தரப்பை மட்டுமல்லாமல், சகல-ரையும் வாசிக்க வைக்கவேண்டுமென்பதே இதன் நோக்கம். ஆரோக்கியமான வாசிப்பு அனுபவத்தைத் தருவதுதான் ‘இருக்கிறம்’ பெற்றுள்ள வெற்றிக்குப் பிரதான காரணம். இவற்றுக்கும் மேலாக சமூக அவலங்களை பிரதேச மண்வாசனையோடு நகைச்சுவையாகத் தருவதில் ‘இருக்கிறம்’ ஒரு தனித்துவத்தைப் பெற்றிருக்கின்றது. கருத்தைக் கவரும் லாவகமான எழுத்து நடை, காத்திரமான கட்டுரைகள், நேர்த்தியான அச்சு, ஒழுங்கமைப்பான பக்க வடிவமைப்பு, கவர்ச்சியான கட்டமைப்பு, வண்ணப் பிரதிபலிப்பு இதுவே ‘இருக்கிறம்’.

### ‘இருக்கிறம்’ பெயர் குறிப்பது

அதென்ன ‘இருக்கிறம்’ என்று இன்றும் பலர் கேள்வியெழுப்புகின்றனர். யுத்த அழிவுகளில் சிக்கி, ஆக்கிரமிப்பு அழுத்தங்ளில் துவண்டு, வாழ்வியல் சோகங்களில் மூழ்கி, நலிவுற்றிருக்கும் எமது தமிழ்பேசும் மக்களையோ, அல்லது புலம்பெயர் தமிழர்களையோ பார்த்து எப்படி இருக்கிறீர்கள்? என்று கேட்டால் ‘இருக்கிறம்’ என விரக்தியாகப் பதில் சொல்வார்கள். ஆனால், நாங்களும் ‘இருக்கிறம்’ என்ற அடையாளத்தோடு உயிர்த்துடிப்புள்ள சஞ்சிகையாக ‘இருக்கிறம்’ நான்கு ஆண்டுகளாக வெளிவந்துகொண்டிருக்கிறது. ஏதோ ‘இருக்கிறம், எப்படியோ இருக்கிறம், சும்மா இருக்கிறம், என்பவர்களுக்கிடையில் இருக்கின்றவர்களுக்காய் ‘இருக்கிறம்’ என்ற தற்துணிவுடன் ‘இருக்கிறம்’ வெளிவந்து கொண்டிருக்கின்றது.

உலகில் வெளிவந்து கொண்டிருக்கும் சஞ்சிகைகளோ, நூல்களோ பெயர்ச்சொல்லில்தான் தமக்குரிய பெயரை அடையாளப்படுத்துகின்றன. ஆனால், ஈழத்தமிழர்களின் வாழ்வியலை வெளிக்காட்டுவதற்காய் வினைச்சொல்லிலே ‘இருக்கிறம்’ தனது பெயரை வகுத்துக் கொண்டது. ஏனெனில், இன்று நாமெல்லாம் வினைகளாகத்தானே இருக்கின்றோம்.

இருக்கிறமின் மகுட வாக்கியம் ‘ஒரு பொல்லாப்பும் இல்லை’ என்ற யோகர் சுவாமிகளின் கூற்று. ‘ஒரு பொல்லாப்புமில்லை, எப்பவோ முடிந்த காரியம்’ என்றார் அந்த தேரடிச் சித்தர். உண்மைதான். ‘ஒரு பொல்லாப்பும் இல்லை’ என்பதோடு ‘இருக்கிறம்’ தனது செயற்பாடுகளை வரையறுத்துக்கொள்ளாது எமது எதிர்காலம் குறித்து அறிவார்ந்த ஆய்வு முறைகளுக்கும் இடம் தருகின்றது. ஈழத்தமிழ்ச் சமூகம் தனது கலைந்து போன கனவுகளை நனவாக்குவதற்கு இந்த அணுகுமுறை அவசியமானதால் அதை நோக்கிய இருக்கிறமின் பயணம் மிகவும் துணிச்சலானது.

### காகங்கள் ஏன்?

‘இருக்கிறம்’ என்ற சின்னத்தில் இரண்டு காகங்கள் ஏன் எதிரும் புதிருமாக ஒன்றையொன்று பார்த்தவண்ணம் உட்கார்ந்திருக்கின்றன? காகத்தை விட வேறு பறவைகள் சின்னங்களாக இல்லையா? என்று நீங்கள் கேட்கலாம். எங்களுடைய நாட்டில் காகம்தான் எங்கும் காணப்படும் பறவை. சாதாரண பொதுசனங்களை அது அடையாளப்படுத்துகிறது. காகம் எமது வாழ்வியலுடன் நெருங்கிய தொடர்புபட்டது. ஒரு இரையைக் கண்டால் தான் மட்டும் உண்ணாது தனது சகாக்களையும் அழைத்து பகுத்துண்ணும் பழக்கம் கொண்டது. சைவ சமயத்தவர்கள் விரதம் அனுஷ்டிக்கும்போது உணவின் சிறுபகுதியை முதல் காகத்திற்கு வைத்த பின்னரே உண்ணத் தொடங்குவார்கள். இவை அனைத்தும் இன்று எமது சமூகத்திற்குத் தேவை. பண்பாடு, பழக்கவழக்கம் இரண்டும் இன்று ஐந்தறிவு ஜீவனாகிய காகத்திடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற கருத்தியலின் அடிப்படையிலே காகம் இருக்கிறமின் சின்னமாகியது.

பத்திரிகை உலகில் 80 வருடகால அனுபவத்தைக் கொண்ட வீரகேசரியின் எக்ஸ்பிரஸ் நியுஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டுடன் ‘இருக்கிறம்’ சஞ்சிகை இன்று கைகோர்த்திருக்கின்றது. ‘இருக்கிறம்’ சஞ்சிகையின் பதிப்புரிமை மற்றும் விநியோக, விளம்பரப் பணிகளை வீரகேசரி நிறுவனம் பொறுப்பேற்றிருக்கிறது. இதுவரை மாதமிருமுறை வெளிவந்து கொண்டிருந்த ‘இருக்கிறம்’ இன்றுமுதல் வார இதழாக வீரகேசரி வெளியீட்டகத்தின் கீழ் வெளிவர இருப்பது வாசக நெஞ்சங்களின் அறிவுப்பசிக்கு தீனிபோடுவதாய் இருக்கும்.

இலங்கைத் தமிழ் சஞ்சிகை வரலாற்றிலே இது ஒரு மைல் கல் என்று சொல்லலாம். எதிர்காலத்தில் புதிய உத்வேகத்துடன் புதியபாதையில் பயணிக்கவிருக்கும் ‘இருக்கிறம்’ சஞ்சிகைக்கு வீரகேசரி சரியான ஒரு அடித்தளத்தையிட்டிருக்கிறது. வீரகேசரியின் ஆதரவுக்கு எமது நன்றிகள்.

வாசிப்புப் பழக்கம் மிகக் குறைவாக உள்ள சமூகமாக தமிழ்பேசும் மக்கள் இருப்பது இன்று பெரும் குறையாக இருக்கின்றது. இந்நிலையில் இவர்களை வாசிக்கத் தூண்டுவது ஒரு சஞ்சிகையின் பெரும் பணியாக இருக்கிறது. இலக்கியச் சிற்றேடுகள், ஜனரஞ்சக இதழ்கள் என்று வெவ்வேறு திசைகளில் பயணித்த காலம் கரைந்து கொண்டு போகிறது.

இன்று எமது மக்களைப் பொறுத்தவரையில் மாற்றம்தான் ஒரு முடிவாக இருக்கின்றது. மாற்றுக் கருத்துக்களும், மாற்றுச்சிந்தனைகளும் இன்று தமிழ் இளைஞர்கள் மத்தியில் பெரிதும் வரவேற்கப் படுகின்றன. அந்தவகையில் அதற்கான சமூக சஞ்சிகையாக இருக்கிறமின் எழுச்சி எதிர்காலத்தில் வாசகர்கள் மத்தியில் புதிய திசையொன்றைச் சுட்டிக்காட்டி நிற்கும் என்பது திண்ணம்.

- ‘இருக்கிறம்’ குழு -



# விடுதலையின் பின்னரும் தொடரும் அச்சுறுத்தல்

- தமிழியன்-

யுத்த காலத்தில் யுத்த கெடுபிடிகள் காரணமாக சந்தேகத்தின் பேரில் கைதுகளும் ஆட்கடத்தல்களும் காணாமல் போதல்களும் மிகச்சாதாரணமாக நடைபெற்றுவந்தன. ஆனால், யுத்தம் கடந்த இரண்டு வருடங்கள் நிறைவடைந்த பின்னரும்கூட, கைதுகளுக்கும் ஆட்கடத்தல்களும் சர்வசாதாரணமாக நடைபெறுவதுதான் ஆச்சரியத்தைத் தருகின்றது. இதற்கு தற்போது அமுலில் இருக்கும் அவசரகாலச் சட்டமும் ஓர் உதாரணம் என்று சொல்லலாம்.

யுத்த காலத்தில் அரசியல் கைதிகள் என்ற பெயரில் வகை தொகையற்றோர் கைதுசெய்யப்பட்டு மிகப்பயங்கரமான சித்திரவதை முகாம்களில் இன்னும் தடுத்துவைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுகின்றனர். இவர்களை விடுவிக்குமாறு அரசுக்கு பல்வேறு உள்நாட்டு வெளிநாட்டு தரப்புகளிலிருந்து அழுத்தம் கொடுக்கப்பட்டு வந்தாலும் இதில் இழுத்தடிப்பு நிலையே காணப்படுகின்றது. ஒருசிலர் பல்வேறு போராட்டங்களுக்கு மத்தியில் விடுவிக்கப்பட்டாலும் அவர்களை தொடர்ந்தும் அச்சுறுத்தி வருவதாக பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றனர். எதற்காக விடுதலை செய்யப்பட்டவர்கள் மீண்டும் தேடப்படுகின்றனர் என்பது புரியாத புதிராகவே இருக்கின்றது.

இவ்வாறு விடுதலை செய்யப்பட்ட ஒரு கைதியான பி.சர்வானந்தா என்பவர் விடுவிக்கப்பட்ட பின்னரும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வருகின்றார். கடந்த 2007 ஜுன் மாதம் ஆமர் வீதியில் வைத்து வெள்ளை வானில் கடத்தப்பட்டு கொழும்பு புதிய மகசீன் சிறைச்சாலையில் அரசியல் கைதியாக தடுத்துவைக்கப்பட்டிருந்தவர் பி. சர்வானந்தா. 2010 ஜுன் 22ம் திகதி இவர் விடுதலை செய்யப்பட்டார். விடுவிக்கப்பட்ட இவரை பாதுகாப்புத் தரப்பைச் சேர்ந்த சிலர் தொடர்ந்தும் அச்சுறுத்தி வருவதாக எம்மிடம் கூறினார்.

"நான் விடுதலை செய்யப்பட்டு இப்போது 8 மாதங்களுக்கு மேலாகின்றது. இந்தக் காலப்பகுதியில் கிட்டத்தட்ட 7 தடவைகள் ஒரு குழு என்னைத் தேடிவந்து மிரட்டிச் சென்றிருக்கின்றனர். இதுபற்றி மனித உரிமை ஆணைக்குழு, செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அனைத்திற்கும் அறிவித்திருந்தும் வழமைபோல் இந்த விடயத்தில் எதுவித பயனுமில்லை. இவ்வாறான செயற்பாடுகளால் எங்கட வீடு ஒவ்வொரு நாளும் செத்த வீடு மாதிரித்தான் இருக்கின்றது. இந்த 8 மாதமும் படாத துன்பம் இல்லை. எவருக்குமே நிம்மதியில்லை. என்ர பாதுகாப்புத்தேடி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடமாய் அலைந்து திரிகிறன். பாதுகாப்பற்ற நிலையால் தற்போது தேவாலயமொன்றில் அடைக்கலமாயிருக்கும்போது எனது வீட்டிற்கு வந்து 4 பேர் என்னைக்கேட்டு மிரட்டிவிட்டுச் சென்றுள்ளனர். அவர்கள் யார் என்று எமக்குத் தெரியவில்லை. ஏனெனில் தாம் புலனாய்வுப்பிரிவைச்




சேர்ந்தவர்கள் என்று கூறினர். ஒரே குழுதான் மாறிமாறி வருகிறார்கள். ஆனால், என்னைக் கைதுசெய்யும் போது இவர்கள் எவரும் இருக்கவில்லை. சிறையில் இருந்தபோதும் நான் பல துன்புறுத்தல்களை அனுபவித்தவன். ஆனால், நான் விடுவிக்கப்பட்டும்கூட தொடர்ந்தும் இவ்வாறான அச்சுறுத்தல்களுக்கு ஆளாகியுள்ளேன்.

இதனால் நாங்கள் எங்கள் வெள்ளவத்தை வீட்டை விட்டு வெளியேறி நுவரெலியாவில் ஒரு இடத்தில் இருந்தோம். ஆனால், அங்கும் என்னைத்தேடி வந்துவிட்டனர். அண்மையில் வானொன்றில் சாரதி உட்பட 4 பேர் வந்துள்ளனர். ஐ.பி. நிசாந்த, சார்ஜன்ட் ரணதுங்க, சம்பத் என்பவர்கள் வீட்டிற்கு வந்து என்னைக்கேட்டு விசாரித்துள்ளனர். வீட்டில் அம்மாவும் அப்பாவுமே இருந்தனர். அப்பா ஒரு இருதய நோயாளி. அவர்கள் 'உடனடியாக

## - விடுவிக்கப்பட்டவரின் வாக்குமூலம் -

உங்கள் பிள்ளையை எம்மிடம் ஒப்படைக்கவேண்டும். இல்லையெனில் நாம் அவரைக் கைதுசெய்வோம்' என்றும் மிரட்டியிருக்கின்றார்கள். இதன்போது எனது பெற்றோர், நான் முறையாக நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டவன் என்றும் அதற்கான சகல ஆதாரங்களும் உண்டு எனவும் காண்பித்துள்ளனர். எனினும் அவர்கள் வேறு விடயம் ஒன்றிற்காக விசார ணை செய்யவேண்டியுள்ளது என்று கூறியுள்ளனர்.

இது சம்பந்தமாக பாராளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி, மாவை சேனாதிராஜா மற்றும் ஸ்ரீதரன் எம்.பி. க்கும் அறிவித்திருக்கிறேன். எனினும் அவர்கள் என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றார்கள் என்று தெரியல்ல. இது சம்பந்தமாக பொலிஸுக்கும் சொல்ல முடியாமல் இருக்கிறது. ஏனென்றால், அதற்குள் உள்ளவர்களே இவ்வாறான விடயங்களில் ஈடுபடுகின்றனர். இதனால் எனக்கு இருக்கும் இரண்டு தம்பிகளுக்கும் ஏதும் பிரச்சினை வந்துவிடுமோ என்று பயமாக உள்ளது. இவ்வாறான துன்பநிலை யிலேயே நான் நிம்மதியின்றி வாழ்ந்து வருகின்றேன்" என்று தெரிவித்தார்.

"2008 நவம்பர் மாதம் புதிய மகசீன் சிறைச்சாலையில் நடந்த தாக்குதல் சம்பவத்தில் சிறைச்சாலை அதிகாரிக ளாலும் சிங்களக் கைதிகள ாலும் நாங்கள் தாக்கப்பட்டபோது, கைதிகளின் விடுதலை சம்மந்தமான விடயங்களைக் கவனிக்கும் குழுவுக்கு எதிராக நாங்கள் F.I.R தாக்கல் செய்தோம். அக்குழுவில் சிறைச்சாலை தலை மை அதிகாரி டி. ஆர். டி சில்வாவும் இருந்தார். (தற்போதைய கற்றுக்கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் தலைவர்) பிறகு அவங்க எங்களைக் கூப்பிட்டு 'F.I.R. திருப்பி வாங்குங்க. நாங்க ரிலீஸ் பண்றம்' எண்டு சொன்னாங்க. டி. ஆர். டி. சில்வாவுக்கும் A.G. Department க்கும் தொடர்பு இருக்கு. ஒருவேளை அவர் A.G. Departmentக்கு எங்கள் விடுதலை தொடர்பாக கதைத்திருக்கலாம். ஆனால், அவைக்கும் எங்களை கஸ்டடியில் வைத்திருந்தவங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அதனால நாங்க எப்படி வெளில வந்தம் என்று எங்கள கஸ்டடியில் வைத்திருந்தவங்களுக்கு ஆச்சரியம். சிறையில் என்னோடு இருந்த ஜீவரட்ணம் என்பரையும் வந்து மிரட்டிவிட்டு சென்றிருக்கின்றார்கள். எனக்கு ஒரே பிரச்சினையாக உள்ளது" என்று மிகவும் மனவேதனையுடன் எம்மிடம் தெரிவித்தார்.

நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட பின்னரும் ஒரு மனிதனுக்கு இந்த நிலை மை என்றால் இனி எங்குபோய் முறை யிடுவது? பயங்கரவாதம் அழிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்தும் இவ்வாறான தனிமனிதர்கள் மிரட்டப்படுவது ஏன்? வெள்ளைவானில் கடத்தப்பட்டவர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டு அடுத்த வாரமே அவரைத் தேடி வீட்டுக்குச் சென்றிருக்கின்றார்கள் என்றால் வெள்ளைவானுக்கும் அரசுக்கும் என்ன தொடர்பு என்று இந்நேரத்தில் கேள்வி எழுகின்றது. எந்தநேரம் என்ன நடக்கும் என்ற குழப்பத்துடன் வாழும் எத்தனையோ சர்வானந்தாக்கள் எம்மத்தியில் இருக்கின்றனர். முறையாக விடுதலை செய்யப்பட்ட ஒருவரை அவர் போகும் இடமெல்லாம் தேடிச்சென்று மிரட்டிக் கொண்டு இருந்தால் அவர்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடமாகச் சென்று ஒளிந்துகொண்டிருக்கமுடியாது. இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் தமிழ் அரசியல்வாதிகளும் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## நடந்தது என்ன?

- மாயன் -

இலங்கையின் நீதித்துறையும் பொலிஸ் துறையும் தம்மைப் போன்ற அப்பாவிகளுக்கு ஒரு போதும் கிடைக்காது என்றறிந்ததாலோ என்னவோ பொலநறுவையைச் சேர்ந்த ஒரு விவசாயி ஒருவர் நஞ்சருந்தித் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்.

இவர் நெல் விதைப்புக்காக முப்பதாயிரம் ரூபாயை ஒரு வியாபாரியிடம் கடனாகப் பெற்றிருக்கிறார். அண்மையில் அடித்த பெரு வெள்ளத்தில் ஆரியதாச என்ற இந்த விவசாயியின் வயலை வெள்ளம் கழுவிச் சென்று விட்டது. அரசாங்கத்தின் எத்தகைய நிவாரணமும் அவருக்குக் கிடைக்கவில்லை. கடன் கொடுத்தவரோ கழுத்தை இறுக்கினார். ஆரியதாசவோ கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாத வெட்கத்திலும் வேதனையிலும் நஞ்சிடம் தஞ்சமானார். வெறும் முப்பதாயிரம் ரூபாய்க்காக அவர் நஞ்சருந்த வேண்டி ஏற்பட்டது.

ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஆளும் கட்சியின் அமைச்சர்கள் பலரும் அரசாங்க வங்கிகளில் பெற்ற பல மில்லியன் ரூபாய்கள், வருடங்கள் பல கடந்தும் முதலும் இன்றி வட்டியும் இன்றி வெறும் கோப்புக்களில் அதுவும் கோப்புக்களின் அடியில் தூங்கிக் கிடக்கின்றன.

அவை பற்றி கேட்பதற்கு யாரும் இல்லை. பார்ப்பாரும் இல்லை. நீதித்துறையோ காவல் துறையோ அந்தப் பக்கம் எட்டிக் கூடப் பார்க்கத் தயாராக இல்லை. வெறும் முப்பதாயிரம் ரூபாய்க்காக தனது உயிரைவிட்ட அந்தச் சிங்கள விவசாயியின் மனைவியும் மகளும், மில்லியன் கணக்கில் அரச பணத்தை ஏப்பம் விட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் அரசியல்வாதிகளில் ஒருவரின் வீட்டில் கூலி வேலை செய்து தமது வயிற்றைக் கழுவுகின்றனர் என்பதுதான் அவர்களின் இன்றைய உண்மைநிலை.

**நாசமாய்ப்போன தார்மீகமும் சீரழிந்துபோன நீதியும்**

# காணாமல்போனவர்களும் வெள்ளைவான் மர்மங்களும்

அஹமட் உசாமா
இலக்கியன்

யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்கள் கடந்துவிட்ட நிலையில் இன்றும் கடத்தல்களும் காணாமல்போதல்களும் தொடர்ந்து இடம்பெற்று வருவது இலங்கை மக்களை அச்சுறுத்தலுக்குள்ளாக்கியிருக்கிறது. உலக நாடுகள்கூட இவ்விடயத்தில் மௌனமாக இருப்பது மனவேதனையாகவும் அதேவேளை ஆச்சரியமாகவும் இருக்கின்றது. முப்பது வருட கால யுத்தத்தையே முடிவுக்குக் கொண்டுவந்த இலங்கை அரசுக்கு வெள்ளைவானையும் அத்தோடு சம்மந்தப்பட்டவர்களையும் கண்டுபிடிப்பதில் ஏன் அவ்வளவு சிக்கல் என்று தெரியவில்லை.

இலங்கையில் காணாமல்போனவர்களை நினைவுகூர அமைக்கப்பட்ட நினைவுத்தூபி பற்றி அறிந்திருக்கிறீர்களா? அல்லது ஞாபகமாவது இருக்கின்றதா? இவ்வாறான இடம் மிக முக்கியமானதொன்றாகும். கொழும்பு நகரின் புறநகர்ப்பகுதியிலுள்ள பத்தரமுல்லை குளத்திற்கருகிலுள்ள இந்த நினைவுத் தூபி 1980களின் முதற்பகுதிகளில் எம்பிலிப்பிட்டியில் காணாமல்போன மாணவர்கள் சிலரை நினைவுகூறுவதற்காக 1999ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. அன்று முதல் 3 தசாப்தங்களாக இலங்கையில் காணாமல் போனவர்களை நினைவுகூறுகின்ற கலாசாரத்தின் மத்திய நிலையமாக இது விளங்கி வருகின்றது. கடத்தப்பட்டு காணாமல் போனவர்களது நினைவுகளை அனைவருக்கும் ஞாபகப்படுத்துகின்ற இந்த நினைவுத்தூபி பல வருடங்களாக கைவிடப்பட்டு அனைவராலும் மறக்கடிக்கப்பட்டுள்ளது. அண்மையில் காணாமல்போனோரின் குடும்பங்களும் உறவுகளும் இந்த இடத்துக்குச் சென்று பற்றைகளால் மண்டிக்கிடந்த இந்த நினைவுத்தூபியை சுத்தம் செய்ததனூடாக சம்பந்தப்பட்டவர்களுக்கு காணாமல் போனோரை மீண்டும் நினைவுபடுத்தினர்.

பொதுவாக கடத்தப்படுகின்ற சந்தர்ப்பங்களில் அவர்கள் தமது கருத்துக்களை வெளியிடுவதற்கான சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. சில சந்தர்ப்பங்களில் ஒருசிலர் மாத்திரம் வீடு திரும்பினாலும் அநேகமானவர்களுக்கு என்ன நடந்தது என்பது இன்றுவரை மர்மமாக இருக்கின்றது. இது பற்றிய விசாரணைகளை மேற்கொள்கின்ற பொலிஸார் மேற்கொள்கின்ற உதாசீனப் போக்குகள்கூட இதுவரை சாதகமான தீர்வுகளை எட்டமுடியாமல் போனதற்குக் காரணமாகும். நியமிக்கப்பட்ட விசேட ஆணைக்குழுக்கள் பல வருடங்களாக சாட்சிகளை விசாரணைக்குட்படுத்தினாலும் அதனைக் கட்டுப்படுத்துவதில் தோல்வியடைந்துள்ளன என்றே கூறவேண்டும்.

2006, 2007 ஆம் ஆண்டு யுத்தம் தீவிரமாக இடம்பெற்ற காலகட்டங்களில் காணாமல் போன 500 பேர் பற்றிய முறைப்பாடுகள் உள்ளூர் மற்றும் தேசிய மனித உரிமை அமைப்புக்களிடம் பதியப்பட்டுள்ளன.


கடந்த வருடம் ஜனாதிபதி தேர்தலுக்கு இரு தினங்களுக்கு முன்னர் ஊடகவியலாளரும் கேலிச்சித்திரக் கலைஞருமான பிரகீத் எக்னெலிகொட காணாமல் போனார். அவரைப் பற்றிய எந்தவிதமான தகவலும் இதுவரை அவரது குடும்பத்தாருக்கு தெரியாது. யுத்தம் நிறைவடைந்து ஆறே மாதங்கள் கடந்த நிலமையில் இச்சம்பவம் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. அவரது மனைவி சந்தியாவுக்கும் இரு பிள்ளைகளுக்கும் அவர் உயிருடன் இருக்கிறாரா என்ற தகவல்கூட இதுவரை கிடைக்கவில்லை.



நினைவுத்தூபியின் அருகில் பற்றைகளை வெட்டிச் சுத்தம்செய்துகொண்டிருந்த பிரகீத்தின் மனைவி சந்தியாவுடன் பேச்சுக் கொடுத்தோம். "பிரகீத் கடத்தப்பட்டு காணாமல்போய் ஒரு வருடத்துக்கும் மேலாகிறது. இன்று காணாமல் போனோருக்கான இந்நினைவுத் தூபியை அமைத்துக்கொண்டு அரசாங்கமே இந்த வேலைகளை செய்கின்றது" என்று அரசை சாடினார்.

1991ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட காணாமல்போன குடும்பங்களின் ஒன்றியம், 80களின் முற்பகுதியில் ஏற்பட்ட கலவரங்களின்போது காணாமல்போன குடும்பங்களது பிரச்சினைகளுக்காக குரல் கொடுக்கின்ற ஒரு அமைப்பாகும். இவ்வமைப்பின் 20ஆவது வருடாந்தக் கூட்டம் அண்மையில் கொழும்பில் இடம்பெற்றபோது 20 வருடங்களுக்கு முன்னர் காணாமல் போனவர்களது குடும்பங்களின் பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்பட்டது. அதேபோன்று காணாமல் போனவர்களது அமைப்புக்களை ஒன்றிணைத்துக்கொண்டு எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ள நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டது.

அந்நிகழ்வில் காணாமல்போன பலரது உறவினர்கள் அங்கு கண்ணீரோடு காணப்பட்டார்கள். தனது மகனை இழந்த சகோதர இனத்தைச் சேர்ந்த அனீதிரேசா சிதுவை என்ற தாய் "என்ர மகன் காணாமல் போய் 21 வருடமாகுது. என்ர மகனுக்கு என்ன நடந்தது எண்டு இதுவரைக்கும் எனக்குத் தெரியாது. நான் போகாத இடமில்லை. என்ர மகன் ஒரு இராணுவ வீரர் என்றதால இராணுவம்தான் அவரை கொண்டு போயிட்டாங்க என்று நான் எல்லா இராணுவ முகாம்களுக்கும் சென்று பார்த்தேன். எங்கயும் இல்ல. என்ர மகனுக்காக ரூபா 25,000 கொடுத்தாங்க. என்ர மகன்ரை பெறுமதி 25,000 ரூபாய்தானா? 94ஆம் ஆண்டுக்கு பிறகு என்ர மகன்ர மரணச்சான்றிதழையும் கொடுத்தாங்க. என்ர மகன் இறந்துபோயிட்டான். ஆனால், என்ர மகனுக்கு என்ன நடந்திச்சு என்று இதுவரைக்கும் எனக்கு தெரியாது" என்றார் கண்களில் கண்ணீர் வழிந்தோட...












மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு பெண்மணி கடைக்குச் சென்ற தன் கணவர் கடத்தப்பட்டதாகவும் அவரைத் தேடித் தருமாறும் கேட்டுக்கதறி அழுதபோது நெஞ்சம் கனத்தது! அதேபோல் கோவிலுக்குச் சென்று கொண்டிருந்தபோது தன்னுடைய கணவர் கடத்தப்பட்டதாகவும் இதுவரை அவர் குறித்த தகவல்கள் தங்களுக்குத் தெரியவில்லை என இந்த நிகழ்வில் கலந்துகொண்ட மற்றொரு பெண்மணி தெரிவித்தார்.

இதேபோன்று யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்டு காணாமல் போன குடும்ப உறுப்பினர் ஒருவரின் உறவினரான கௌசி "கொடிய யுத்தம் காரணமாக ஏராளமான இளைஞர்களும் யுவதிகளும் கடத்தப்பட்டும் காணாமல்போயும் கொலை செய்யப்பட்டும் உள்ளனர். கடத்தப்பட்டு காணாமல்போன எம் உறவுகள், பிள்ளைகள், கணவன்மார்கள் தொடர்பில் அரசும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும். எம் உறவுகள் உயிருடன் இருக்கின்றார்களா என்பது பற்றி அறியத்தரவேண்டும். சிறைச்சாலைகளிலும் இராணுவ முகாம்களிலும், வேறு இடங்களிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரங்களை அரசு வெளியிடவேண்டும்" என்றார் ஆக்ரோஷமாக..!

20 வருடங்களாக தமது குடும்ப அங்கத்தவர்களை இழந்து அவர்கள் பற்றிய செய்தி கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் இவர்கள் காத்திருக்கின்றனர். சந்தியா எக்னெலிகொட தனது கணவர் குறித்த விசாரணைகளை மேற்கொள்ளும் அதிகாரிகளுக்கு அழுத்தம்கொடுத்து வருகிறார். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாரிடமும் மனித உரிமை அமைப்புக்களிடமும் பல முறைப்பாடுகளைச் செய்துள்ளார். அதேநேரம் உயர்நீதிமன்றத்தில் வழக்கொன்றினையும் தொடுத்துள்ளார்.

கடந்த ஆண்டில் கடத்தல்கள் ஒப்பீட்டளவில் குறைந்திருந்தாலும் பிரகீத் எக்னெலிகொட போன்றவர்கள் குறித்த முறையான விசாரணைகள் இடம்பெறவில்லை. துரதிஷ்டவசமாக ஆயிரக்கணக்கான காணாமல்போன குடும்பங்களுடன் பிரகீத் எக்னெலிகொடவின் குடும்பமும் உறவின் வரவிற்காக எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றனர்.

தம் உறவுகளை பறிகொடுத்துவிட்டு தவிக்கும் குடும்பத்தவர்கள் இன்று வருவார், நாளை வருவார் என்று காத்துக் கிடக்கின்றனர். அதுமட்டுமன்றி பலரது உதவிகளை நாடி கொழும்புக்கு வந்து மொழியும் தெரியாது, பலரால் ஏமாற்றப்பட்டு அலைக்கழிக்கப்பட்ட சம்பவங்களும் நிகழ்ந்துகொண்டுதானிருக்கின்றன. சிலவேளைகளில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டு மாதாமாதம் நீதிமன்ற படிகளிலும் ஏறிக்கொண்டிருக்கின்றனர். யாவற்றையும் இழந்த நிலைமையில் தாம் வட்டிக்கு கடன் வாங்கியும் தம் வீடுகளை அடமானம் வைத்தும் காசைக் கொடுத்து ஏமாறுகின்றனர். எல்லாம் தம் உறவுகள் திரும்பிவரும் என்ற ஒரு நப்பாசையில்தான். இவை அனைத்திற்கும் ஒரு தீர்வுவேண்டும். காரணம் இவ்வாறான மனிதநேய விடயங்களில்கூட ஒருசிலர் குளிர்காய்ந்து கொண்டுதானிருக்கின்றனர். இப்பிரச்சினையையே காரணம் காட்டி தங்களை வாழவைத்துக் கொண்டிருக்கும் பலர் இவர்களுக்கான தீர்வு பற்றி சற்றேனும் சிந்தித்துப் பார்த்ததாகத் தெரியவில்லை.

வெள்ளைவான் கலாச்சாரம் இன்று அரசியலாகிவிட்டது. எவரும் எவரையும் வெள்ளைவானில் கடத்தலாம் என்ற நிலைமை வந்துவிட்டது. யாழில் நடந்துவரும் கடத்தல்களும் இதைத்தான் சுட்டிநிற்கின்றன. தனக்கு வேண்டாத ஒருவரை படை உறுப்பினர்கள் அல்லது ஆயுததாரிகளின் ஒத்துழைப்போடு கடத்தி பணம் பறிப்பதோ அல்லது கொலை செய்வதோ சர்வசாதாரணமாக நிகழ்ந்து வருகின்றது. இதற்காக குறிப்பிட்ட நபர் செலவழிக்கப் போவது சில லட்சங்களும் உயர் ரக மதுப் போத்தல்களுமே. சிலவேளைகளில் மாதுவும் கூட இருக்கும்.

இவை அனைத்திற்கும் முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டுமெனில் அரசு சம்மந்தப்பட்டவர்கள் தொடர்பான உண்மை விபரங்களை வெளியிட ஆவன செய்யவேண்டும். அத்தோடு போரின்போது கைது செய்யப்பட்டவர்களின் நிலை என்னவென்பது தெரியவில்லை. அவர்கள் காவலில் வைக்கப்பட்டிருக்கலாம் கொலை செய்யப்பட்டிருக்கலாம் அல்லது நிரந்தரமாகவே காணாமலும் போயிருக்கலாம். இந்நிலையில் படைத்தரப்பின் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர் விபரங்களை அரசு வெளியிட்டால் காணாமல் போனவர்களின் நிலை என்னவென்பது குறித்து அவர்களின் உறவினர்கள் அறிந்து கொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும். ஆகவே, இதன் முக்கிய பொறுப்பு அரச உயர் அதிகாரிகளுக்கே உரியது.

# ‘பூக்கள் இருந்தால்தான் மாலை கட்டலாம்’ கஷ்டப்பட்டாலும் உழைத்துச் சாப்பிடுகின்றோம்

## கொழும்பு கொச்சிக்கடை பூமாலைத் தொழிலாளர்கள்

நேரடி ரிப்போர்ட்





க. மாலா

படங்கள்: நிரோஜன்

கொழும்புக்கு வருபவர்கள் ஒருமுறை கொச்சிக்கடை வீதியால் சென்று வந்தால் பூக்களின் வாசனை அவர்களை திரும்பிப் பார்க்க வைக்கும். கொழும்பில் சில இடங்களில் பூக்கடைகள் இருந்தாலும் கொச்சிக்கடையே பூமாலைக்குப் பெயர்போன இடம். பூக்களே கிடைக்காத இலையுதிர் காலங்களில்கூட கொச்சிக்கடை வீதிகளில் பூக்களுக்கும் பூமாலைகளுக்கும் பஞ்சமிருக்காது. வீதியோரங்களில் பூக்களும் பூமாலைகளும் என கண்களுக்கு குளிர்ச்சியாக பல வண்ண நிறங்களில் அழகாக எந்த நேரமும் தொங்கிக் கொண்டிருக்கும்.

ஏறக்குறைய 30 இற்கும் மேற்பட்ட பூக்கடைகளில் பூமாலை கட்டி வியாபாரம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. பூமாலை கட்டுபவர்களின் கைகள் பூக்களோடு சேர்ந்து நளினமாடுவதை பார்க்கும்போது வியப்பாக இருக்கும். அத்தோடு சேர்ந்து “அம்மா பூ வாங்க வாங்க...” என்றும் கூவிக்கொண்டும் இருப்பர். இவ்வாறு பரபரப்பாக பூமாலை கட்டுபவர்களிடம் சென்று உரையாடி அவர்களது சிறிது நேரத்தை எமக்காக ஒதுக்கிக் கொண்டோம்.

வெள்ளிக்கிழமையெண்டால் நல்ல வியாபாரம் போகும். பூ வாங்குற விலைக்கேத்த மாதிரித் தான் மாலையின்ர விலையும் கூடிக் குறையும். சில நேரம் பூ கிடைக்கிறதில்லை. அந்த நேரத்துல அறுகம்புல், துளசி இலையில தான் மாலை கட்டுவன். எனக்கு ஒரு மகள் மட்டுமெண்ட படியால் இதால உழைக்கிற காசு ஓரளவு போதுமாக இருக்கு” என்றார் சற்று இறங்கிய தொனியில்.

“நான் பத்து வருடமாக இந்தத் தொழிலைச் செய்து வருகிறேன். ஜா-எல, மாதம்பை, மாத்தளை போன்ற இடங்களில் இருந்து பூக்களைக் கொண்டு வருகின்றார்கள். கிராம் கணக்கில் பூ வாங்குவதில்லை. பைக் கணக்கில்தான் வாங்க வேண்டியிருக்கும். இது மாத்திரமன்றி ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 15 மாலைகள் வரை கட்டுவன். சிலநேரம் அவை எல்லாம் விற்கப்படுவது மில்லை. விற்காவிட்டால் மாலைளை வீசவேண்டி வரும். நஷ்டம்தான். சொந்தத் தொழில் எண்ட படியால் சந்தோசமா செய்யிறம்” என்றார் தெமட்டகொடயில் வசித்து வரும் இரண்டு பிள்ளைகளின் தந்தையான சரவணன்.

ஆகவே பெரும்பாலும் அங்குள்ளவர்களே கொழும்பில் அதிகமாக இத்தொழிலைச் செய்து வருகின்றனர். காரணம் அவர்கள் பூக்களை விலை கொடுத்து வாங்க வேண்டியதில்லை. அவ்வாறு தலவாக்கலையில் இருந்து கொழும்புக்கு வந்து பூமாலை கட்டும் சசி என்பவரைச் சந்தித்தோம்.

“இங்க எல்லாமாக 36 பூக்கடைகள் இருக்கு. காலையில் 6 மணிக்கு வந்தால் இரவு 9 மணிக்குத்தான் கடையைப் பூட்டுவோம். முதல் யாழ்ப்பாணத்துச் சனங்கள் நிறையப் பேர் வந்து பூமாலைகள் வாங்கிட்டுப் போவாங்க. இப்ப சமாதானமா இருக்கிறபடியால் சனங்கள் வாறது குறைவு. இருந்தாலும் இங்க இருக்கிறவங்க வருவாங்க. கஷ்டப்பட்டாலும் உழைத்து சாப்பிடுறோம் என்ற திருப்தியோடு இந்த தொழிலைச் செய்துவருகின்றோம்” என்றார் சசி.

தெருவோரத்தில் சிறு கடைகளை வைத்துக்கொண்டு வியாபாரம் செய்யும் இவர்களுக்கு அரசாங்கம் இது வரை எந்த உதவியும் செய்யவில்லை என்பது இங்குள்ள வியாபாரிகளின் கவலையாக இருந்தது.



சிவபாதசுந்தரம்

இங்கு பொதுவாக உறவினர்களே இத்தொழிலை செய்து வருகின்றனர். சில இடங்களில் தந்தை பூமாலை கட்ட, மகன் ஒத்தாசை செய்வது, கணவன் மாலை கட்டும் போது மனைவி உதவுவது என ஓடியாடி இவர்களது தொழில் நடைபெறுகின்றது.

அத்தெருவில் ஒரு பூக்கடைக்கு உரிமையாளரான ராஜா என்பவரிடம் உரையாடியபோது

“இதுதான் எண்ட தொழில். இதனைக் கொண்டுதான் எங்கட குடும்பத்தைப் பார்க்கிறன். இவ்வளவுதான் கிடைக்கும் என்று எதிர்பார்த்து இந்த தொழிலைச் செய்ய முடியாது. 50 ரூபாவும் கிடைக்கலாம் 500 ரூபாவும் கிடைக்கலாம்” என்றார்.

எவ்வளவு காலமாக இந்தத் தொழிலைச் செய்கின்றீர்கள்? இதில் வரும் வருமானம் போதுமானதாக இருக்கின்றதா?

“நான் நாலு வருஷமா இந்த தொழிலச் செய்றன். ஒரு நாளைக்கு 30 பூமாலைகள்வரை கட்டுவன்.

இவரிடம் விற்பனை பற்றிக் கேட்டபோது...

“பூ மாலை ஒன்று 40 ரூபாவிற்கு விற்பம். கலியாண வீடுகளிற்கு நாங்கள் கொண்டுபோய் கேட்டால் ஒரு மாலை 250 ரூபாய் அல்லது 300 ரூபாய்க்கு கொடுப்பன். செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமைகளில்தான் சனம் அதிகமாக கோயிலுக்கு வரும். அன்றைய நாட்களில் நிறைய மாலைகள் விற்போம். மற்ற



நாட்களில் குறைவாகத்தான் வரும். கலியாண ஓடர் வந்தால் அதில் நிறைய லாபம் உண்டு” என்றார்.

ஒரு கடையில் 50 வயது மதிக்கத்தக்க ஒரு வயதானவர் மிகவும் லாவகமாக ஒரு பெரிய மாலையை சுறுசுறுப்பாகக் கட்டிக்கொண்டு இருந்தார். ஒரு திருமண வீட்டுக்கு கொடுக்கவேண்டுமாம். வயதையும் மீறிய அவரது சுறுசுறுப்பு. சற்று நேரம் அவரது கைகளையே என் கண் பார்த்துக்கொண்டு இருந்தது.

அனேகமாக மலையகப் பிரதேசங்களில் பூக்கள் சற்று அதிகமாகவே காணப்படும்.

இதுபற்றி அந்தத் தெருவில் நெடுங்காலமாக பூமாலை கட்டுவதில் ஈடுபட்டிருக்கும் கே. ராஜேந்தர் என்பவரிடம் கேட்டபோது...

“நாங்க ரோட் ஓரத்தில கடை வைத்திருப்பதால் நடந்து போறவங்களுக்கு இடைஞ்சலா இருக்குமெண்டு பொலிஸ் அடிக்கடி வந்து கடையை எடுக்கச் சொல்லுவாங்க. எங்களால ஒண்டும் செய்யேலாது. இந்த தொழில நாங்க வேற இடத்திலும் செய்யேலாது. கோவில்கள் இருக்கிற இடத்திலும் சனம் நல்லா வாற இடத்திலும் தான் பூமாலை கட்டி விற்க முடியும். அப்ப தான் வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியும். இங்க இருந்து எங்கள போகச் சொன்னால் நாங்க எங்க போறது” என்றார் கவலையோடு.

ஆரம்ப கால கட்டத்தில் சடங்கு சம்பிரதாயங்களுக்கென்று பயன்பட்ட பூமாலை இன்று எல்லா முக்கிய நிகழ்வுகளின் போதும் பயன்படுத்தப்படும் ஒரு முதன்மைப் பொருளாக மாறி விட்டது. பூமாலை கட்டுவதென்பது சிலருக்கு மட்டுமே கைவந்த கலை.



சரவணன்



சசி



ராஜா



ராஜேந்தர்

ஆரம்ப காலகட்டத்தில் பண்டாரம் என்று சொல்லப்படும் ஒரு வர்க்கத்தினர் மட்டுமே பரம்பரை பரம்பரையாக இந்தத் தொழிலை செய்து வந்தனர். ஆனால், தற்போது ஏனையோரும் இத்தொழிலில் ஈடுபட்டிருப்பதைக் காணக்கூடிய தாகவிருக்கின்றது.

ஆனால், இவர்களுக்கான வசதி வாய்ப்புக்கள் பற்றி இதுவரை எவரும் சற்றேனும் சிந்தித்தது கிடையாது. அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவீனங்களை பார்க்கும்போது அனைவரும் ஏதாவது ஒரு தொழிலைச் செய்து வாழவேண்டிய ஒரு கட்டாயத்தில் இருக்கின்றோம். இம்மக்களைப் பொறுத்தளவில் அன்றாடம் பெறப்படும் ஒரு தொகையை வைத்தே இவர்களது வாழ்க்கை செல்கின்றது.

அதுவும் பூக்கள் கிடைக்காத காலங்களில் இவர்களது பாடு திண்டாட்டம்தான். அத்தோடு பல்வேறு இடங்களிலிருந்து பூக்களை இவர்கள் விலைக்கு வாங்கும்போது இவர்களுக்கு பெரியளவில் இலாபம் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. ஆகவே, இதற்கு மாற்றீடாக பூக்கன்றுகளை வளர்த்தல், வெளிநாடுகளிலிருந்து பூக்களை இறக்குமதி செய்தல் போன்ற திட்டங்களை அதிகரிக்கலாம்.

இவ்வியாபாரிகளை அந்த இடங்களிலிருந்து வெளியேற சொல்வது அவர்களது வயிற்றில் அடிக்கும் செயலாகும். இதற்கு மாறாக இவர்களுக்கு ஆலயத்துக்கு சொந்தமான இடத்தில் சிறு கடைத்தொகுதிகளை அமைத்துக் கொடுக்கலாம். அல்லது அவர்களுக்கென பிரத்தியேகமான இடங்களை ஒதுக்கி அவர்களையும் வாழவைக்கலாம்.

# இரவு நேர ரயில் பயணங்களில் நடப்பது என்ன?

உண்மையின் பதிவு

முஹம்மட் பிறவ்ஸ்

தலைநகரில் கடமைபுரிபவர்கள் வார இறுதி நாட்களை தங்களது குடும்பத்துடன் கழிப்பதற்காக வெள்ளிக்கிழமை இரவே தலைநகரிலிருந்து புறப்பட்டுவிடுகின்றனர். விடுமுறையில் வீடு செல்பவர்களும் வேறு தேவைகளுக்காகச் செல்பவர்களும் தூங்கிக்கொண்டே பயணிக்கலாம் என்ற நப்பாசையில் இரவுநேர ரயில் பயணங்களையே அதிகமாக நாடுகின்றனர்.

இப்பொழுது நாட்டில் சுமூகமான சூழ்நிலை நிலவுவதால் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளுக்குச் செல்லும் ரயில்களிலே அதிகமான கூட்டம் நிரம்பி வழிவதைக் காணக்கூடியதாகவிருக்கின்றது.

உண்மையிலேயே இரவுநேர ரயில் பயணங்கள் திருப்தியளிக்கின்றனவா? அங்கு நடப்பது என்ன என்று அதில் பயணித்த அனுபவம் உள்ளவர்களுக்குத்தான் தெரியும். ரயில் பயணத்தில் நடக்கும் சில சம்பவங்கள் வெளியில் வருவது அரிது. காரணம் பாதிக்கப்பட்டவர்கள் வெளியில் சொல்ல பயப்படுவதே. இதனால் தமக்கு ஏதும் ஆபத்து வந்துவிடுமோ அல்லது தமது பெயர் கெட்டுவிடுமோ எனப் பலவாறாகப் பயப்படுவதால்தான் சமூகத்தில் நுகர்வோருக்கு ஏற்படும் பிரச்சனைகளை மக்கள் தட்டிக் கேட்கப் பயந்து வருகின்றனர்.

குறிப்பாக பயணம் செய்யும் பெண்களுக்கு ஊறு விளைவிக்க என்று ஒரு கூட்டமே அலைகின்றது. தூங்குவதைப் போல பாவனைசெய்து அவர்கள் மீது சரிவது. அப்பெண்கள் சற்று கண் அயரும்போது கைகளாலும் கால்களாலும் உராய்வது என்று எல்லாமே நடக்கும். அதுமட்டுமன்றி தண்ணீர் மற்றும் சிறு உணவுவகைகளை விற்பதற்கு இடையில் ஏறும் சிறு வியாபாரிகள் தங்கள் கைகளுக்கு சிக்கும் பொருட்களை திருடிக்கொண்டு போகும் சந்தர்ப்பங்களை நான் எத்தனையோ முறை கண்டும் நமக்கேன் வீண்வம்பு என்று இருந்ததுண்டு. காரணம் நான் அடிக்கடி ரயிலில் செல்பவன். என் பாதுகாப்பும் எனக்கு முக்கியமே.

அண்மையில் என் அலுவலக நண்பர் ஒருவர் என்னிடம் அலுத்துக்கொண்ட ஒரு விடயம், தன் தங்கைக்கு சீற் புக் பண்ணுவதற்காக அவர் கொழும்பு - கோட்டை புகையிரத நிலைத்திற்குச் சென்று அங்குள்ள டிக்கட் கவுண்டரில் யாராவது பெண்கள் பக்கத்தில் சீட் தருமாறு கேட்டிருக்கின்றார். அவர்களும் சரி என்று கூறிவிட்டு கடைசியில் ஒரு கிழவரின் பக்கத்தில் புக் செய்து விட்டு இனவாதம் பேசியுள்ளனர். தன் தங்கையின் பாதுகாப்பு குறித்து அவர் வாயே திறக்காமல் வந்திருக்கின்றார். அவள் விடியவிடிய அனுபவித்த துன்பங்கள் சொல்லில் அடங்காது. அவ்வளவு தள்ளாத வயதிலும் அந்தக் கிழம் இவள் மீது சாய்வதும் கையால் இடுப்பில் இடிப்பதுமாக இருந்திருக்கின்றது. இவளுக்கோ மொழிப் பிரச்சினை. மெல்லவும் முடியாமல் துப்பவும் முடியாமல் அவள் சகலதையும் பொறுத்துக்கொண்டு ஊர் வந்து சேர்ந்திருக்கின்றாள்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் பெண்பிள்ளைகள் தங்கள் பாதுகாப்பு பற்றி சற்றுக் கவனம் செலுத்தவேண்டும். பஸ் வண்டிகளிலும் ரயிலிலும் நடக்கும் இவ்வாறான பிரச்சினைகள் பற்றி எவ்வளவோ எழுதியும் நடந்தது ஒன்றுமில்லை. கூடுமானவரை தங்கள் பாதுகாப்புக்காக ஒருவரை அழைத்துச் செல்லவே வேண்டும். அதுமட்டுமன்றி குட்ட குட்ட குனிபவன் போல இவ் அக்கிரமங்களை தாங்கிக்கொண்டு செல்லாமல் யாரிடமாவது கூறலாம். அல்லது பாதுகாப்பு கருதி எதிர்க்கலாம். விசயம் அம்பலத்துக்கு வரும்போது நிச்சயம் அங்கு ஏதாவது தீர்வு கிடைக்கலாம்.

இதேபோல் என் இன்னொரு நண்பர் கூறிய விடயம் "காசு கொடுத்தால் இப்ப ஏலாதது ஒண்டுமில்ல. அவையள் புக்கிங் சீற் இல்லை என்று சொல்லிவிட்டு சில சீற்களை ஒதுக்கி வைச்சு கொள்ளுவினம். காரணம் பிறகு யாராவது அவசரமா போகணும் எண்டு கேட்டால் 500 ரூபாய்க்கு மேல் வாங்கிக்கொண்டு அதை கொடுப்பாங்கள். நான் எத்தனையோ முறை கண்டிருக்கன். ஏன் நான்கூட ஒருக்கா அவசரம் எண்டு பேரம் பேசி கடைசியா 450 ரூபா கொடுத்துவிட்டு வந்தன்" என்றார். "இவற்றைக் கண்டுகொள்ள யாரும் இல்லை. அங்குள்ள மேலதிகாரிகளே இதற்கு துணைசெல்லும்போது என்ன செய்வது" என்று விசனப்பட்டார். இதை உரியவர்கள் ஆதாரத்துடன் மேலிடத்துக்கு தெரிவித்து நடவடிக்கை எடுக்காவிட்டால் இது தொடரத்தான் செய்யும். இது அதிகமாக இரவு நேர ரயில்களிலேயே நடக்கின்றன. இதனால் இங்கு பாதிக்கப்படுவது அப்பாவி மக்கள்தான்.

சிலவேளைகளில் சில வயது வந்த ஆண்கள் ஒன்றாக சேர்ந்து ரயிலுக்குள்ளேயே மது அருந்தி பாட்டுப்பாடி, நடனமாடி பயணிகளை இம்சைப்படுத்துவதுண்டு. பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த இளைஞர்களே அவ்வாறான வேலைகளில் அதிகமாக ஈடுபடுகின்றனர். சிலரோ கஞ்சா போன்ற போதைப்பொருட்களை பாவிப்பதையும் அதன்போது விடயம் தெரிந்தவர்கள் அந்தப் புகை சுவாசத்திற்குச் செல்லாதவாறு மூக்கைப் பொத்தி அவஸ்தைப்படுவதையும் நான் எத்தனையோ தடவை கண்டுள்ளேன். மதுபோதையில் சில இளைஞர்கள் இளம்பெண்களுக்கு சேட்டை விடுவதும் அவர்களை முறைத்துப் பார்ப்பதும் கூச்சலிடுவதும் என்று தாங்கள் தான் ரயிலுக்கு சொந்தக்காரர்கள் என்பது போல் நடந்துகொள்வார்கள். அதிகாரிகளோ இவற்றைக் கண்டும் காணாமல் போய்விடுவார்கள்.

இந்த ரயில் பயணங்களில் பெரும் பாலும் ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரியும் இளம் பெண்களே பயணிக்கின்றனர். ரயில் சிநேகம் என்பதைப் போல அதிகமான ரயில் காதல்களும் இங்கேதான் அரங்கேறுகின்றன. அதாவது வரும்போது தனித்து வருபவர்கள் இடையிலேயே ஜோடி சேர்ந்து விடுவார்கள். பட்டப்பகலில் பலருக்கு மத்தியில் பயணம் செய்யும்போதே ஆண்களின் தொல்லைகளைத் தாங்க முடிவதில்லை. அதிலும் இரவு நேர பயணம் என்றால் சொல்லவே தேவையில்லை. எத்தனையோ யோசனைகள், பிரச்சினைகளுக்கு மத்தியில் பயணம் செய்யும்போது அவர்களது மனநிலை பற்றி சிறிதும் கவலைப்படாது தங்கள் வெறியாட்டத்தைத் தொடங்கிவிடுகின்றனர்.



இது எனக்கு நடந்த ஒரு சம்பவம். ஒரு ரயில் பயணத்தின்போது எனக்கு நல்ல உறக்கம். திடீரென ஒரே சலசலப்பு. சத்தம் கேட்டு விழித்துக்கொண்ட நான் சற்று எட்டிப் பார்த்தேன். ஒரு இளைஞன் திருதிருவென விழித்துக்கொண்டிருந்தான். தூக்கத்தின்போது எதிரே இருந்த பெண்ணின் உடம்பின்மீது காலை போட்டுவிட்டானாம். அந்தப் பெண் அலறியதில் அவ்விடத்தில் கூட்டம் சேர்ந்துவிட்டது. அந்த இளைஞன் குடித்தும் இருந்தான். பொங்கியெழுந்த ஒருவர் அந்த இளைஞனை தரதரவென இழுத்துச் சென்றார். அப்போது அவனது ஒரு கால் கழன்று விழுந்துவிட்டது. அப்போதுதான் தெரிந்தது அவனது ஒரு கால் செயற்கையாக பொருத்தப்பட்டிருக்கின்றது என்ற உண்மை. இழுத்துச் சென்றவரோ தன் தன்மானத்தை விட்டுக்கொடுக்காமல் அவனை தொடர்ந்து இழுத்துச்சென்று கழிப்பறையின் அருகில் போட்டுவிட்டார். இவனுக்கு கால் இல்லையே என்று கவலைப்படுவதா? அல்லது போதையில் மற்றவர்களுக்கு தொல்லை கொடுக்கின்றான் என்று கோபப்படுவதா? சற்றுத் திரும்பிப் பார்த்த பிறகுதான் எனக்கு உண்மை புரிந்தது. பெரிய உத்தமனைப் போல நடந்துகொண்ட அந்தப் பேர்வழி குறிப்பிட்ட அந்தப் பெண் அருகே சென்று இளைஞன் இருந்த இடத்தில் அமர்ந்துகொண்டு தன் மன்மத லீலைகளை லாவகமாக செய்யத் தொடங்கிவிட்டான். அந்தப் பெண்ணும்கூட அதற்கு உடன்பட்டாள். தனது மகள் அருகில் இருக்கிறாள் என்ற நினைப்புக்கூட அவளுக்கு வரவில்லை. பின்னர் அவர்கள் பிரிந்து செல்லும்போது தங்களது முகவரிகளையும் தொலைபேசி இலக்கங்களையும் பரிமாறிக்கொண்டனர். இந்தக் கருமங்களை என்னவென்று சொல்வது...



இதில் நடுநிசி வியாபாரிகள் வேறு. ஏற்கனவே தூக்கம் கலைந்த கோபத்தில் சற்று கண் அயர்ந்தேன். என் காதருகில் வந்து கோப்பி.... சிகரட்....' என்றான் ஒரு வியாபாரி. எனக்கு வந்த ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டேன். சிறிது நேரம் கழிய, ஒரு பெண் அலறிக் கத்திக்கொண்டிருந்தாள். அவ்விடத்தில் ஒரே கூட்டமாக இருக்க நானும் எழுந்துசென்று பார்த்தேன். தன் 3 பவுண் தங்கச் சங்கிலியை யாரோ ஒருத்தன் அறுத்துச் சென்றுவிட்டான் என்று அப்பெண் தலையில் அடித்துக்கொண்டு கதறினாள். வேறுயாருமில்லை அந்த வியாபாரிதான் கோப்பி விற்பதுபோல பாசாங்கு செய்து நோட்டம் பார்த்து தங்கச்சங்கிலிக்கு ஆட்டையைப் போட்டுவிட்டான் என்று கூடியிருந்தவர்கள் பேசிக்கொண்டனர். இரவில் எங்கு போய் அவனைப் பிடிப்பது?

இப்படித்தான் மயக்கமருந்து கலக்கப்பட்ட கோப்பியை பருகக் கொடுத்து செல்போன் உட்பட பெறுமதிமிக்க நகைகளை கொள்ளையடித்துச் சென்றதாக அண்மையில் பத்திரிகையொன்றிலும் செய்தியொன்று பிரசுரமாகியிருந்தது. இன்று நாட்டில் இவ்வாறான விடயங்கள் வெகு சாதாரணமாக நடக்கத்தொடங்கிவிட்டன. ஆகவே நாம்தான் எம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். கூடுமானவரை இரவு நேர ரயில் பயணங்களைத் தவிர்ப்பது நல்லது. தவிர்க்க முடியாத பயணம் என்றால் நகைகளை அணியாமல் பாதுகாப்புடன் செல்லவேண்டும். அப்போது இவ்வாறான விபரீதங்களிலிருந்து ஓரளவு தப்பித்துக்கொள்ளலாம். அல்லது இப்படியான விசமிகளிடமிருந்து தப்புவதற்காக தற்காப்புடன் செல்லவும் தயாராக இருக்கவேண்டும்.


தொட்டதற்கெல்லாம் சட்டம் இயற்றும் அரசாங்கம் இவ்வாறான செயல்களுக்கெதிராகவும் சட்டம் இயற்ற வேண்டும். இந்த விடயங்களில் கூடுதல் அக்கறை எடுத்து நடவடிக்கை எடுக்கவேண்டும். ஒருசிலர் செய்யும் செயலால் ஏனையோர் குடும்பத்தோடு வெளியே போகமுடியாத நிலை காணப்படுகின்றது. நடக்கும் எல்லா அக்கிரமங்களையும் சகித்துக்கொண்டுதான் பயணிக்கவேண்டுமென்பது நமது தலை விதியா? நிம்மதியையும் தூக்கத்தையும் தொலைத்த அந்தப் பிரயாணம் உண்மையிலேயே திருப்திகரமானதாக அமையவில்லை.

அன்றுடன் வெறுத்த இரவு நேர ரயில் பயணம் இன்றுவரை தொடரவில்லை..!

# அழகுக் குறிப்புகள்


அழகைத் தேடி எங்கேயும் போகவேண்டாமே. நம்முடைய சமையலறையிலேயே நமது அழகை மேம்படுத்தும் பொருட்கள் இருக்கின்றன. சமையலறையில் உபயோகமில்லாமல் தூக்கி வீசப்படும் சில பொருட்களையும் மிகுதியான பொருட்களையும் கொண்டே நம்மை மெருகூட்டிக் கொள்ளலாம்.

### தக்காளி



சமையலுக்கு உபயோகப்படுத்த முடியாத தக்காளியை குப்பையில் போட்டுவிடுவோம். அப்படிச் செய்யாமல் அதை கூழாக்கி முகத்தில் பசையாக போட்டுக் கொள்ளலாம். இதிலுள்ள விட்டமின்கள் 'சி' மற்றும் 'ஏ' முகத்தின் கரும்புள்ளிகளை நீக்கிவிடும்.

### பால்



பாலை உபயோகித்துவிட்டு பாத்திரத்தை சுத்தம் செய்வதற்காக போடுவதற்கு முன் அதிலிருக்கும் சிலதுளி பாலை சிறிது பஞ்சில் எடுத்து நம்முடைய முகத்தை சீராக துடைத்து எடுக்கலாம். இவ்வாறு செய்வதன் மூலம் நம்முடைய முகத்தின் துவாரங்கள் திறக்கும். முகம் சுத்தமாகவும் பிரகாசமாகவும் மாற இது உதவுகிறது. சிறிது தேன் கலந்து மொய்ஸ்டரைசராகவும் பயன்படுத்தலாம்.

### அப்பிள்



அப்பிளின் மிகுதி சதைப்பகுதியை அரைத்து தேன் சேர்த்து முகத்தில் தடவினால் முகத்தில் ஏற்படும் மெல்லிய கோடுகள் நீங்கும். அதோடு ஆரோக்கியமான பளபளப்பையும் இது கொடுக்கும்.

### ஒலிவ் எண்ணெய்



நம்முடைய கால்களின் முடியை நீக்கியபின் ஒலிவ் எண்ணெய் கொண்டு நன்கு மசாஜ் செய்தால் கால்களில் ஏற்பட்டுள்ள பிளவுகள் மற்றும் வெடிப்புகள் சரியாகும்.

# அடர்த்தியான தலைமுடிக்கு



வாரம் ஒருமுறை, தலைக்கு குளிக்கும் ஒரு மணி நேரத்திற்கு முன்பாக தலையில் வேர் முதல் நுனிவரை சுத்தமான வெண்ணையை தடவி நன்றாக மசாஜ் செய்யவும். பின்பு சீயக்காய் தேய்த்து குளிக்கவும். முட்டையின் வெள்ளைக்கருவை மட்டும் தனியாக எடுத்து அதனை தலைக்கு தடவி பின் 30 நிமிடங்கள் கழித்து கழுவவும். ஒவ்வொரு வாரமும் தலைக்கு குளிக்கும் முதல்நாள் இரவே தலையில் தேங்காய் எண்ணையையும் ஒலிவ் எண்ணையையும் தடவி மசாஜ் செய்து கொள்ளவும். ஒரு மாதமாவது தொடர்ந்து செய்தால் பலன்கிடைக்கும்.

# பாகற்காய் தக்காளிப் புளிக்கறி



பாகற்காய் கசக்கும் என்று எம் இளையோர் தங்கள் உணவில் அதை ஒதுக்கி வைத்துவிடுவதுண்டு. ஆனால் இதில் உள்ள மருத்துவ குணங்கள் மகத்தானது. சிறியோர் முதல் பெரியோர் வரை இதனை கட்டாயம் உணவில் சேர்த்துக் கொள்ளவேண்டும். நீரிழிவு நோயாளருக்கு மிகவும் நல்லது.

### தேவையான பொருட்கள்

பாகற்காய் - 250 கிராம்
தக்காளிப்பழம் - 250 கிராம்
வெங்காயம் - 5
பூண்டு -10
மிளகாய் வத்தல் - 5
கறிவேப்பிலை சிறிது
புளி - 25 கிராம்
நல்லெண்ணெய் -2 தே.கரண்டி
கடுகு, சீரகம் - 1 தேக்கரண்டி
உப்பு - 1 தேக்கரண்டி
மிளகாய்த்தூள் - 2 தேக்கரண்டி
நீர் - தேவைக்கேற்ப

### செய்முறை

முதலில் பாகற்காயை கழுவி சிறிது சிறிதாக வெட்டவும். தக்காளியையும் வெட்டவும். வெங்காயம், பூண்டு, மிளகாய் எல்லாவற்றையும் பொடிப்பொடியாக நறுக்கி வைக்கவும். புளியை நீரில் கரைத்து அளவாக எடுத்து வைக்கவும். அதன் பின் பாத்திரத்தை அடுப்பில் வைத்து எண்ணெய் விட்டு காய்ந்ததும் நறுக்கிய பாவற்காய், கடுகு, சீரகம், கறிவேப்பில்லை, மிளகாய் என்பவற்றைப் போட்டு வதக்கவும்.

வதங்கி பொன்னிறமாக வரும்போது இஞ்சிப்பூண்டை சிறிது தட்டி அதனுடன் சேர்த்து வெந்த யத்தைப் போட்டு கிளறிக்கொண்டே மிளகாய்த்தூள், உப்புத்தூள், கரைத்த புளி இவற்றுடன் சேர்த்து கறியை நன்கு கிளறி மூடி 5 நிமிடம் வேக விடுங்கள். பின்னர் வற்றியதும் நறுக்கிய தக்காளியைச் சேர்த்து வே-கவிடவும். பின்னர் ஆறவிட்டு பறிமாறலாம். சோறு, ரொட்டி, தோசை இவற்றுடன் சேர்த்துச் சாப்பிட சுவையாக இருக்கும்.

# பேரீச்சம்பழத்தின் மருத்துவக் குணம்

தினமும் இரவில் படுக்கச்செல்லும் முன்னர் ஒரு டம்ளர் காய்ச்சிய பசும்பாலில் 4 பேரீச்சம் பழத்தை ஊறவைத்து 1 மணி நேரம் கழித்து உண்டுவந்தால் உடல் நல்ல பலம்பெறும். தோல் பகுதிகள் மிருதுவாகவும் வலுவலுப்பாகவும் மாறும். கண் சம்மந்தமான கோளாறுகளும் நரம்பு சம்மந்தமான கோளாறுகளும் படிப்படியாகக் குறையும்.

பேரீச்சம் பழத்தை தேனில் ஊறவைத்து சாப்பிட்டு வந்தால் உடலுக்குத் தேவையான எல்லாச் சத்துக்களும் கிடைக்கும். கண் பார்வைக் கோளாறுகளும் நீங்கும். குழந்தைகளுக்கு பேரீச்சம் பழத்தை தேனில் ஊறவைத்து காலையும் மாலையும் கொடுத்து வந்தால் குழந்தைகளின் உடல் தேறி வலுவுடனும் புத்துணர்ச்சியுடன் சுறுசுறுப்பாகவும் இருப்பார்கள்.



பொதுவாக பெண்களுக்கு அதிக கல்சியச் சத்தும் இரும்புச்சத்தும் தேவைப்படுகின்றது. பெண்களுக்கு மாதவிலக்கு காலங்களில் ஏற்படும் உதிரப்போக்கால் இத்தகைய சத்துக்கள் மிகவும் குறைகிறது. இதை நிவர்த்திசெய்யவும் ஒழுங்கற்ற மாதவிலக்கை ஒழுங்குபடுத்தவும் பேரீச்சம்பழம் சிறந்த மருந்தாக உள்ளது.


மெனோபஸ் காலகட்டத்தில் மாதவிலக்கு முழுமையடையும். அப்போது பெண்களின் எலும்புகள் மிகவும் பலவீனமாக இருக்கும். மேலும் கை,கால்,மூட்டுகளில் வலிகள் உண்டாகும். இதனை சரிசெய்ய கொதிக்க வைத்த பாலில் பேரீச்சம்பழத்தை கலந்து பாலையும் பழத்தையும் சேர்த்து சாப்பிட்டுவந்தால் உடல் என்றும் ஆரோக்கியமாக இருக்கும். பேரீச்சம் பழத்தை பசும்பாலில் வேகவைத்து தொடர்ந்து அருந்தி வந்தால் இதய நோய்கள் அண்டாது.



எதுக்காக இலங்கை முழுவதும் போஸ்ட் மேன் போட்டிருக்காங்க?



ஏனென்டா போஸ்ட் வுமன் போட்டா டெலிவரி ஆக பத்து மாதம் ஆகும்.




கடற்கரை மணலில் உன் பெயரை எழுதி வைத்தேன்.
அலை வந்து அடித்துச் சென்றது.
உன் பெயராவது குளிக்கட்டுமென்று!
ஹி! ஹி!





**ஆசிரியர்:** இந்த வகுப்பு முடியும்வரை வெளியே நில்... அப்போதான் அறிவு வரும்.

**மாணவன்:** அப்போ நீங்க பாடம் சொல்லிக் கொடுத்தா அறிவு வராதா டீச்சர்?



# உலக அரங்கில் மீண்டும் தலைதூக்கியுள்ள சோமாலிய கடற்கொள்ளையர்களின் ஆதிக்கம்

விஜயராகவன்

'அமெரிக்காவின் கொம்பு' என வர்ணிக்கப்படும் சோமாலிய நாட்டுக் கரையோரமாக அதிகரித்துவரும் கடற் கொள்ளையரின் அட்டகாசம் தற்போது சர்வதேசத்தின் கவனத்தை வெகுவாக ஈர்த்துள்ளது. 'ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து மனிதனைக் கடித்த கதையாக' உல்லாசப் படகுகளை சிறு சரக்குக் கப்பல்களைக் கடத்திவந்த கொள்ளையர்கள் தற்போது ஆயுத விநியோகக் கப்பலொன்றைக் கடத்தி வைத்துக்கொண்டு 20 மில்லியன் டொலர்களைக் கப்பமாகக் கேட்டு வரும் நிலையில் ரஷ்ய தயாரிப்பான ரி-72 ரக யுத்த தாங்கிகள் தவறான கைகளுக்குக் கிடைப்பதைத் தடுக்க நினைக்கும் உலகின் வல்லரசுகள், கடற் கொள்ளையருக்கு எதிரான தீவிரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதில் ஒருமித்த கருத்துடன் செயற்பட ஆரம்பித்துள்ளன.

சோமாலிய கடற்பரப்பில் கடற்கொள்ளையர் தினமும் ஒரு கப்பலை கடத்துவதும், கப்பம் கேட்பதும் மிகவும் சாதாரண விடயமாகும். இவர்களை அடக்க அமெரிக்காவால் முடியவில்லை. கடற்கொள்ளையர் கூட்டத் தலைவர்கள் தங்களது கப்பப் பணத்தை நியூயோர்க் வங்கிகளிலேயே வைப்பிலிட்டுள்ளனர். மற்றும் அமெரிக்க பங்குச் சந்தைகளிலும் முதலீடு செய்துள்ளனர். கொள்ளை மூலம் கிடைத்த பணம் லைபீரியாவிலும், கொங்கோவிலும், மடகஸ்காரிலும் வைரக்கற்களாக கொள்வனவு செய்யப்பட்டு, டுபாய் மற்றும் லண்டன் இரத்தினக்கல் கண்காட்சிகளில் வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. இவர்களது வலையமைப்பை இயக்குவது C.I.A.

இன்று உலகளாவிய ரீதியில் பாரிய பிரச்சினையாக கருதப்படுவது சோ மாலிய கடற்கொள்ளையர்கள் விவ காரம். பல பத்திரிகைகளிலும் இவ்விடயம் பற்றிப் அவர்கள் கேட்கும் தொகை ஆளுக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்கள். எங்குபோவது, யாரிடமிருந்து இதைப் பெறுவது என்று திண்டாடுகின்றனர். சோமாலியக் கடற்கொள்ளையர் ஏன் இப்படிச் செய்கிறார்கள் என்று ஆராய்ந்து பார்த்தால் தமது நாட்டில் நிலவும் வறுமையைத் தீர்க்க யாருமே முன்வராமையால், பட்டினியில் மடியும் மக்களுக்கு உதவ இப்படிச் செய்வதாக அவர்கள் தம் செயலுக்கு நியாயம் கூறுகின்றனர்.

சோமாலிய கடற்கொள்ளையர்கள் விவகாரம் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே செல்கிறது. சென்ற ஆண்டின் முதல் இரண்டு மாதங்களுடன் ஒப்பிட்டால் இவர்களுடைய வளர்ச்சி மூன்று மடங்காக இருக்கின்றது. கடந்த இரண்டு மாத காலத்தில் மட்டும் 89 தாக்குதல்களை இவர்கள் நடாத்தியிருக்கிறார்கள்.

சுயஸ் கால்வாயைக் கடந்து போகும் சரக்குக் கப்பல்களைக் குறிவைத்து இவர்கள் நடத்திய தாக்குதல்களில் பயன்படுத்தப்பட்ட படகுகள், தொடர்ந்து அதி வேகம் பெற்று வருகின்றன. அண்மையில் டெனிஸ் கப்பல் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தியபோது அதற்குள் இருந்த பாதுகாப்புப் படையினர் திருப்பித் தாக்கியதால் கடற் கொள்ளையர் தப்பித்துவிட்டனர். இப்படியான சர்வதேச வர்த்தகத்திற்கு முரணான காரியங்கள் நடைபெறும்போது சோமாலிய அரசு என்ன செய்கிறது என்பது அடுத்த கேள்வியாகும். கடற் கொள்ளையரைப் பிடித்து சிறையில் வைத்து பராமரிக்க அங்கு சிறைக்கூடங்கள், அதற்கான வசதிகள் எதுவும் இல்லை என்கின்றனர்.

இது குறித்து பல நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய விசேட சந்திப்பில், இயங்கு நிலையில் உள்ள ஆயிரம் கடற்கொள்ளையரைப் பிடித்து சிறையில் போட 160 மில்லியன் குறோணர் தேவை என்கிறது சோமாலிய அரசு. டென்மார்க் இதற்காக 170 மில்லியன் குறோணர்களை வழங்கியுள்ளது. அந்த நாடுகளிலும் கடற்கொள்ளையர்கள் புதிதாக உருவாகலாம். அத்தோடு இது உலக வர்த்தக நெருக்கடியாக மாறிவிடவும் கூடும் என்ற அச்சத்தில் மேலைநாடுகள் இந்த விடயத்தில் தந்திரமாக செயற்படுகின்றன.

இந்தக் கடற்கொள்ளையர்கள் பற்றிப் பார்த்தால் பழைய கடற் கொள்ளையரின் வரலாறுகள்தான் உலக வரலாற்றை மாற்றியிருக்கிறது. சுமார் 100 வருடங்களாக கடல் வர்த்தகத்தில் கொடிகட்டிப் பறந்த ஸ்பானிய வல்லரசின் பாரிய ஆர்மடா கடற்படைக் கப்பல்களை பிரிட்டனின் கடற் கொள்ளையர் சிறிய கப்பல்களில் வந்து தாக்கி கொள்ளையிட்டு தீ மூட்டியபோது ஸ்பானியப் பேரரசே வீழ்ந்தது.

பசுபிக் சமுத்திரத்தில் பிரித்தானியர்கள் கஞ்சா கடத்தி சென்றபோது சீனா அவர்களின் கப்பல்களை மூழ்கடித்து போதை வஸ்த்து கடத்துவது குற்றம் என்றது. அவர்களுக்கு எதிராக படையெடுத்த பிரிட்டன், ஹொங்கொங் தீவை 99 வருடங்களுக்கு சீனாவிடமிருந்து எழுதி வாங்கியது. தாம் கடலில் கொட்டிய கஞ்சாவிற்கு நட்ட ஈடாக ஹொங் கொங் கையே பெற்றுக் கொண்டது. டென் மார்க்கில் வீக்கிங் என்ற கடலோடிகள் இருந்தார்கள். இவர்கள் கடற் கொள்ளை யர்களாகவே காலம் கடத்தினார்கள். இன்றுள்ள மேலை கடற்கொள்ளை இனங்கள் என்று நூல்கள் கூறுகின்றன. ஒன்று டெனிஸ்காரர் மற்றது தமிழர். இவர்களுக்குப் பிறகுதான் மற்றவர்கள் வருவதாகக் கூறப்படுகிறது. சோழப் பேரரசின் கடற் பயணங்களும் சாம்ராஜ்ஜியமும் இதற்கு ஓர் உதாரணம்.

வரும் நாட்களில் கணிசமான அளவு கடற் கொள்ளையர்கள் சிறைகளில் முடங்கப் போகிறார்கள். கடற் கொள்ளையர்களின் பெயரில் ஏற்றுமதி இறக்குமதி கட்டணங்கள் உயரப் போகின்றன என்பதே உண்மை. அண்மையில் நடைபெற்ற வடக்கு ஆபிரிக்கப் போராட்டம் பெற்றோல் விலையை லீட்டர் 12.15ற்கு கொண்டு வந்துவிட்டது. இனி கடற்கொள்ளையரால் வரப்போகும் பொருட்களின் விலையுயர்வு மேலும் ஒரு தடவை உலக மக்கள் முதுகில் விழப்போகிறது. கடற்கொள்ளையர் சிறைக்குச் செல்ல ஏனையவர்களின் கொள்ளைகள் தொடரத்தான் போகின்றது.



ஆனால், கடற் கொள்ளையர்கள் மீது பலாத்காரத்தைப் பாவித்து அவர்களை வெற்றிகொண்டு விடுவதால் மாத்திரம் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் கண்டுவிட முடியாது. ஏனெனில் ஒரு நாட்டின் கடற்படையில் முன்னர் பணியாற்றியவர்கள் கடற்கொள்ளை யர்களாக மாறுகின்றார்கள் என்றால் அதற்குக் காரணம் இருக்கிறது. சோமாலியாவில் நிரந்தர ஆட்சி இருந்திருந்தால் இந்நிலை உருவாகி யிருக்காது.

படித்திருப்பீர்கள். இதனால் ஐரோப்பாவே கதிகலங்கி நிற்கிறது. கடந்த சில வாரங்களுக்கு முன்னரும் கப்பலில் சுற்றுப்பயணம் செய்த ஏழு டெனிஸ்காரர்களை சோமாலியக் கடற் கொள்ளையர் கடத்திச் சென்றனர். இவர்களில் மூன்று பாடசாலைப் பிள்ளைகளும் இடம்பெறுகிறார்கள். சாதாரண படகில் சென்றவர்களையே இவ்வாறு கடத்திச் சென்றுள்ளனர். இவர்கள் தமது கடற்பயண நேரத்தைக் குறைத்து பயணம் செய்யலாம் என்று கருதி கொள்ளையர்கள் நடமாடும் பகுதியினூடாக சென்றதன் விளைவே இது. இராணுவ கொமாண்டோ படை, தாக்குதலால் மீட்க முடியாதவாறு கடத்திச் சென்றவர்களை பல்வேறு இடங்களில் பிரித்து வைத்துள்ளனர். கைதானவர்களை உடனடியாக மீட்க முடியாது. பல்வேறு படிமுறையான வேலைத் திட்டங்களை செய்தே அவர்களை மீட்க வேண்டும். அதற்கு அதிகமான காலம் எடுக்கும் என்று கருதப்படுகிறது. தற்போது நாட்டு அரசே இந்த விவகாரத்தை கையாள வேண்டும் என்ற கோணத்தில் இது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இனிமேல்தான் சிறைச்சாலைகளைக் கட்டி அவர்களைப் பிடித்து உள்ளே போடப் போகின்றார்களாம். அதேவேளை கடற் கொள்ளையரின் படகுகள் வரக்கூடிய எல்லையைத் தாண்டி, தூரமாக கப்பல்களை செலுத்தும்படி டெனிஸ் மாலுமிகள் சங்கம் கேட்டுள்ளது. விரைவாக ஓட முடியாத சரக்குக் கப்பல்களுக்கு விசேட கப்பல்படை, கப்பல்களின் கண்காணிப்பு உருவாக்கப்பட வேண்டும் என்றும் விதந்துரைக்கப்பட்டுள்ளதோடு மற்றைய கப்பல்களில் அதி நவீன கருவிகள் கொண்ட கொமாண்டோ படைப்பிரிவினர் பயணிக்க வேண்டுமெனவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

படையினர் காவலுக்குச் சென்றால் கடற் கொள்ளையர் மோட்டார் தாக்குதலை செய்யக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இந்த விவகாரத்தால் கரையோரத்தில் உள்ள ஏனைய நாடுகள் காலனித்துவத்தை ஏற்படுத்தியபோது பலமற்ற நாடுகளை கடற் கொள்ளையராக வந்து கொள்ளையிட்டதே காலனித்துவ வரலாறு.

இலங்கையில் 682 இறாத்தல் கறுவாவை வருடத்திற்கு ஒருவர் உரித்துக் கொடுக்காவிட்டால் மரண தண்டனை விதித்தது கொலன்ட் அரசு. இராஜகாரிய முறை என்ற முறையை ஏற்படுத்தி இலங்கை மக்களை சம்பளமில்லாமல் தமது நாட்டுக்கு உழைக்க வேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டுவந்து கொள்ளையடித்தனர். அந்த மக்கள் சம்பளமின்றி சிந்திய வியர்வையே இன்றைய பணக்கார நாடுகளின் மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும்.

இந்த வரலாற்று செய்திகளையும் இன்றைய சோமாலிய கடற்கொள்ளையரையும் ஒப்பிட்டு நோக்க வேண்டும். அதேபோல தமிழரின் பாரம்பரிய வரலாறும் கடற் கொள்ளையுடன் சம்மந்தப்பட்டதே என்று கூறினால் நம்புவீர்களா? உலகின் இரண்டு இனங்கள் அங்கு நிலையான ஆட்சி இல்லாமைக்கு வல்லரசு நாடுகள் அனைத்துமே வகை கூறக் கடமைப்பட்டவை.

எனவே தலையிடிக்கு மருந்தாகத் தலையணையை மாற்றுவதை விடுத்து மூலகாரணத்தைக் கண்டறிந்து அதற்கு மருந்து செய்ய வேண்டும். கடற்கொள்ளையருக்கு எதிராகப் பலப்பிரயோகம் செய்ய நினைக்கும் ஒவ்வொரு சக்தியும் இதுபற்றிச் சிந்தித்து சோமாலியாவில் மட்டுமல்ல உலகில் மோதல் நடைபெறும் அனைத்து இடங்களிலும் தமது போட்டா போட்டிகளையும் பூகோள நலன்களையும் முன்னிலைப்படுத்துவதைத் தவிர்த்து, நீதியான நிலைபேறான சமாதானம் ஏற்பட ஆக்கபூர்வமாகச் செயற்பட வேண்டும். அது செய்யப்படாத வரை இதுபோன்ற தலையிடிகள் தொடர்ந்த வண்ணமே இருக்கும்.



# காலநிலை மாற்றமும் அதிகரிக்கும் அழிவுகளும்

- அதிகன் -

இயற்கைக்கு மாறான செயல்களை காணும் மனிதன் எதிர்காலத்தைப் பற்றிய அச்ச உணர்வில் பதைபதைக்கின்றான். நாளாந்தம் எங்கோ ஓர் இடத்தில் விசித்திரங்களும் அதிசயங்களும் நிகழ்ந்த வண்ணம்தான் இருக்கின்றன. குறிப்பாக காலநிலையில் ஏற்படும் திடீர் மாற்றங்கள் இன்று உலகின் வல்லரசு நாடுகளையே ஆட்டிப் படைத்துக்கொண்டு இருக்கின்றன.

இன்று உலகளாவிய ரீதியில் தட்பவெப்ப நிலைகளில் திடீர் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. காலம் தவறிய மழை, ஓரிடத்தில் அதிக மழை, அதற்கு அருகே உள்ள பகுதியில் கடும் வெப்பம் என காலநிலையில் ஏற்படும் மாற்றங்கள் மக்களை வதைக்கிறது. வானிலையை கணிக்க முடியாமல் ஆராய்ச்சியாளர்களும் திணறுகின்றனர். கடலில் ஏற்படும் திடீர் மாற்றங்களே இவற்றிற்குக் காரணம் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

காலநிலை மாற்றங்களால் உலகம் முழுவதும் கடல் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. இலங்கையை பொறுத்தளவில் அண்மையில் மட்டக்களப்பு மற்றும் மலையக பிரதேசங்களில் என்றுமில்லாதவாறு வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு பெரும் அழிவை ஏற்படுத்தியது யாவரும் அறிந்ததே. அத்தோடு அண்மையில் ஜப்பானில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியைத் தொடர்ந்து சுனாமி ஏற்பட்டு பாரிய அழிவை ஏற்படுத்தியமை உலக நாடுகளை ஒருகணம் திரும்பிப் பார்க்க வைத்தது.

இவ்வாறு மனிதன் நாளாந்தம் தொடர் இன்னல்களுக்கு முகங்கொடுக்கின்றான். 2050 ஆம் ஆண்டில் இந்தியாவைச் சுற்றியுள்ள கடல்களின் நீர் மட்டம் 1 மீற்றர் உயரும் என்று ஐ.எப்.எம்.ஆர். என்ற ஆராய்ச்சி நிறுவனம் அறிவித்துள்ளதைத் தொடர்ந்து அதனைப் பற்றிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் இப்போதே ஆரம்பமாகிவிட்டன.

ஏறக்குறைய 18 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தற்போதுள்ள கடல் மட்டத்தைவிட 100 மீற்றர் தாழ்வாகவே கடல்மட்டம் இருந்துள்ளது என்றும், கடந்த 6 ஆயிரம் ஆண்டுகளில்தான் கடல் மட்டம் வேகமாக உயர்ந்துள்ளது என்றும் டைட்டஸ் என்ற விஞ்ஞானி ஆதாரபூர்வமாக நிரூபித்துள்ளார். 2100 ஆம் ஆண்டில் 10 செ.மீ. வரை கடல்நீர் மட்டம் உயரும் என்று ஹொப்மேன் என்ற விஞ்ஞானி தெரிவித்துள்ளார். ஒரு ஆண்டுக்கு 1 முதல் 2 மி.மீ. வரை கடல் மட்டம் உயர்கின்றது என்று வாரிக் மற்றும் ஓர்லமென்ட்ஸ் என்ற விஞ்ஞானிகள் கூட்டாக ஆராய்ச்சி நடத்தி நிரூபித்துள்ளனர்.

கடலில் ஆராய்ச்சி நடத்திய விஞ்ஞானிகள் அனைவருமே கடல் மட்டம் உயர்ந்து வருகின்றது என்றுதான் தெரிவித்துள்ளனர். இம்மாற்றங்கள் விஞ்ஞானிகளுக்கே பெரும் சவாலாக அமைந்துவிட்டன. சென்னையில் ஒரு மீற்றர் கடல் மட்டம் உயரும்போது மெரீனா கடற்கரை மூழ்கிவிடும் அபாயம் உள்ளது என்ற ஆராய்ச்சியாளர்களின் கருத்து இந்திய மக்களை கிலி கொள்ளவைத்துள்ளது. இது ஒரே நாளில் நடக்காது. ஆனால், சிறிது சிறிதாக கடலின் ஆதிக்கம் அதிகரித்து இது நடக்கும் என்றும் எதிர்வுகூறுகின்றனர்.

இது இப்படியிருக்க மறுபக்கத்தில் புவி வெப்பம் அடைவதால் ஓசோன் படலத்தில் ஏற்பட்டுள்ள துளையின் அளவு அதிகரித்துக்கொண்டே போகின்றது. இதனால் புற ஊதாக் கதிர்களின் தாக்கமும் அதிகரித்துள்ளது. நிலப் பகுதிகளை மட்டும்தான் புற ஊதாக் கதிர்கள் தாக்குகிறது என்று நினைத்திருந்த ஆராய்ச்சியாளர்கள் கடலிலும் புற ஊதாக் கதிர்களின் தாக்கம் மிக அதிகமாக இருப்பதைக் கண்டுபிடித்து அதிர்ச்சி அடைந்துள்ளனர். கடலின் மேற்பரப்பில் இருந்து 10 மீற்றர் ஆழம் வரை புற ஊதாக் கதிர்களின் தாக்கம் மிகமிக அதிகமாக உள்ளது என்று ஸ்மித் என்ற விஞ்ஞானியின் தலைமையில் நடந்த ஆராய்ச்சியில் கண்டுபிடித்துள்ளனர். இதனால் கடல்நீரின் வெப்பம் வேகமாக உயர்ந்து வருவதாகவும், இன்னும் 5 டிகிரி செல்சியஸ் அளவிற்கு வெப்பம் உயர்ந்தால் 80 சதவீதமான கடல்வாழ் உயிரினங்கள் இறந்துவிடும் என்றும் தெரிவித்துள்ளனர். இதனால் சுனாமி அலைகளும் பெரிய புயல் சின்னங்கள் உருவாகியும் நிலப்பகுதிகளை தாக்கும் அபாயம் இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

இவையனைத்தையும் வைத்து பார்க்கும்போது எதிர்காலத்தில் பாரிய ஒரு அனர்த்தத்தை உலக நாடுகள் எதிர்கொள்ள வேண்டி வரும். எனவே எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய பாதிப்பை உணர்ந்து கடலோரப் பகுதிகளில் முழுமையான பகுப்பாய்வுகள் நடத்தப்பட வேண்டும். கடலோர பகுதிகள் குறித்த மிக விரிவான மற்றும் உண்மையான தகவல்களை சேகரிக்க வேண்டும். கட லோர கட்டமைப்பு மேம்பாட்டு பணிகளில் தட்பவெப்ப மாற்றத் தகவல்களை ஒருங்கிணைப்பதோடு முன்னெச்சரிக்கை கருவிகளை முக்கிய இடங்களில் வைக்க வேண்டும். குறிப்பாக மண்ணரிப்பை தடுக்க ஆவன செய்யவேண்டும். இயற்கை அனர்த்தங்களை மனிதனால் பூரணமாக கட்டுப்படுத்தமுடியாது. என்றாலும் அதிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள முன்னாயத்தங்களை மேற்கொள்ள வேண்டியது எமது கைகளிலேயே தங்கியுள்ளது. அத்தோடு இயற்கையை பாதிக்காதவண்ணம் அதனைப் பாதுகாத்தால் ஏற்படப்போகும் அனர்த்தங்களின் தாக்கம் ஓரளவு குறைவடையலாம்.

## இராப்பொழுதின் இனிமை

கவிதையோடு ஒன்றித்துப் போன சூரியனின் 'நேற்றைய காற்று' நிகழ்ச்சியே என்னை மிகவும் கவர்ந்தது. இராப்பொழுதின் மெல்லிய தென்றலோடு உலாவரும் இந் நேற்றைய காற்றில் இளம் கவிஞர்களின் படைப்புக்கள் உள்வாங்கப்படுவதானது, அவர்களுக்கு புத்துணர்ச்சியூட்டுவதாகவும் அமைந்துள்ளது. இந்நிகழ்ச்சியை தொகுத்து வழங்கும் அறிவிப்பாளருக்கும் சூரியன் எவ்.எம். இற்கும் நன்றிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

- மா. மகேஸ்வரன், கொழும்பு.

## நேயர்களை கதிகலங்க வைக்கும் தொலைபேசிக் கட்டணம்

வானொலிகளில், குறிப்பாக தனியார் வானொலிகளில் நேயர் விருப்பம் நிகழ்ச்சிகளில் தொலைபேசியில் உரையாடும்போது குறித்த நேயரை தொடர்பில் வைத்துக்கொண்டு, நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிக் கொண்டிருப்பவர்கள் தமக்குள் விவாதிப்பதும், நகைச்சுவை என்று எதையோ தமக்குள் கூறிக்கொண்டிருப்பதும் நேயரை தர்மசங்கடத்தில் ஆழ்த்திவிடும். ஏனெனில் ஒரு நேயரை தொடர்பில் வைத்துக்கொண்டு தமக்குள் விவாதித்துக் கொண்டிருக்கும்போது குறித்த நேயர் தனது நேரம், தொலைபேசிக்கட்டணம் என்பன பற்றியே சிந்தித்துக்கொண்டிருப்பார். அதாவது இங்கு தொலை பேசிக் கட்டணமானது நேயர், தான் சொல்ல வந்த கருத்தைப் பாதிக்கும் காரணியாகிவிடுகின்றது. முதலில் நேயரின் கருத்தை உள்வாங்கிக்கொண்டு பின்னர் அதுபற்றி விவாதித்தால் இவ்வாறான நிலைமைகளை மாற்றிக்கொள்ளலாம்.

- இ.ஆர்த்தி, வெவர்சட் பிளேஸ், கொழும்பு - 06.

## நேரத்தை வீணடிக்க வேண்டாம்

வானொலிகளில் இப்போது ஒரு நிகழ்ச்சியைச் செவிமடுப்பதாயின் எங்கோ சந்தையில் நின்று கொண்டிருப்பதைப் போன்ற உணர்வுதான் ஏற்படுகின்றது. ஒரு விடயத்தைக் கூறவரும்போது அதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நேயரின் பெறுமதியை உணர்ந்து ஆக்கங்கள் படைக்கப்பட வேண்டும். ஆனால், நிகழ்ச்சியை வழங்கு பவர்களோ தமக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற தோற்றப்பாட்டில், நேரலையில் இருக்கின்றோம் என்பதை மறந்து தங்களுக்குள் விவாதித்துக் கொண்டிருப்பது நேரப்பெறுமதியை உணர்ந்துகொள்ளாத நிலையாகும். குறிப்பாக எமது தாய் மொழியை மறந்து 'தங்கிலிஸ்' பேசுவதும் வேடிக்கை. கடந்த காலங்களில் இக் குற்றச்சாட்டு பலவிதங்களில் எடுத்துக் கூறப்பட்டும் திருந்(த்)துவதாயில்லை.

- எம். பைருஸ், அட்டாளைச்சேனை.




'ஊடக மயக்கம்' என்ற இப்பகுதிக்கு இலத்திரனியல், அச்சு ஊடகங்களில் நீங்கள் கேட்ட, பார்த்த மற்றும் வாசித்தவற்றின் மீதான காத்திரமான விமர்சனங்களை எழுதி அனுப்பலாம். கருத்துச் சுதந்திரத்திற்கு மதிப்பளிப்போம்.

**'ஊடக மயக்கம்', 'இருக்கிறம்'**
**3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு 07,**
**மின்னஞ்சல்: irukiram@gmail.com**

## சொந்தப் பிரச்சினைக்குள் சிக்கித்தவிக்கும் வானொலி நிகழ்ச்சிகள்

ஊடகங்கள் எனும்போது அங்கு பக்கச்சார்புக்கு இடமிருக்கக்கூடாது. தம் உணர்வுகளை கொட்டுவதாகவும் இருக்கக்கூடாது. ஆனால் இது எல்லா ஊடகங்களிலும் கையாளப்படுகின்றதா என்றால் சந்தேகம்தான். அண்மையில் அன்னை வானொலியில் இராக தீபம் கேட்டேன். வழமையாக அன்போடும் பொறுமையோடும் கதைக்கும் குறித்த அறிவிப்பாளர், அன்று தொடர்பில் வந்த நேயர்களிடம் எரிந்து விழுந்தார். ஒரு நேயரை அழைப்பதற்கு இரண்டு மூன்று தடவை ஹலோ சொல்ல வேண்டி இருக்கின்றது என்று கடுகடுத்தார். வீட்டில் அவருக்கு என்ன பிரச்சினையோ தெரியவில்லை. நிகழ்ச்சி முடியும் வரை வானொலியில் அனல் பறந்துகொண்டிருந்தது. ஒரு நல்ல வானொலிக்கும் சரி அந்த அறிவிப்பாளர்களுக்கும் சரி இது அழகல்ல.

- ந. சின்னையா
தோப்பூர், திருகோணமலை

# வாசகர் கருத்து





மாதத்திற்கு இருமுறை வெளிவரும் 'இருக்கிறம்' சஞ்சிகையின் வாசகர்களில் நானும் ஒருவன் என நினைக்கும் பொழுது பெருமையாக இருக்கின்றது. கடந்த 64 ஆவது இதழில் "காற்றாய் வருவேன்" என்னும் பேய்க்கதை முடிவடைந்தது மிகத் துயரமாக உள்ளது. ஏனெனில், அக்கதை மிகவும் சுவாரஸ்யமாக என் மனதைக் கவர்ந்தது. இதேபோல் "தெய்வ நிந்தனையின் பெயரால் உருவாகும் மதத் தீவிரவாதம்" என்னும் கட்டுரை -ஒவ்வொரு மதத்தினருடைய மூட நம்பிக்கையை எடுத்துக்காட்டுகின்றது. அதேபோல் தகவல்கள் மற்றும் பல சமூகப் பிரச்சினைகளை சுட்டிக்காட்டுவது இப்போதைய நிலையில் மிகவும் துணிச்சலான விடயம்.

**- த. மயூரன்**
**42 ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தை.**

'இருக்கிறம்' சஞ்சிகையைத் தொடர்ந்து வாசித்து வருகின்றேன். தரமான சஞ்சிகை. இதுவரை இதைப்பற்றி எழுத எனக்கு நேரம் கிடைத்ததில்லை. திடீரென இருக்கிறத்தை கடைகளில் காணவில்லை. தொடர்ந்து வராமல் இருந்தமையால் விசாரித்துப் பார்த்தேன். நின்றுவிட்டது என்றார்கள். உண்மையா? தமிழ் பேசும் மக்களின் தனித்துவமான ஒரு சஞ்சிகைக்கு இந்த நிலைமை வரக்கூடாது. பலரது எதிர்பார்ப்புக்களுக்கு தீனி போட்ட ஒரே ஒரு சஞ்சிகை 'இருக்கிறம்' என்று அடித்துக் கூறுவேன். எப்படியாவது அது தொடர்ந்து வெளிவர வழி செய்யுங்கள்.

**- தே. வினோஜன், திருநாவற்குளம், வவுனியா.**

வேகமாக வளர்ச்சியடைந்து வரும் இந்த யுகத்தில் இதற்கு முற்பட்ட காலத்தில் நாம் அறிந்துகொள்ளாத பண்பாட்டுக் கோலங்களை, நிகழ்வுகளை 'இருக்கிறம்' சஞ்சிகை தொடர்ந்து எடுத்துக்காட்டி வருகின்றமை வரவேற்கத்தக்கது. இது காலத்தின் கட்டாய தேவைகளாக உணரப்பட்டுள்ளது. வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை சமூகத்திற்கு எடுத்துக்காட்டப்பட்டதன் மூலம் இங்குள்ளவர்கள் மட்டுமன்றி புலம்பெயர் நாடுகளில் உள்ளவர்களும் உதவ முன்வரவேண்டும் என்பதை வலியுறுத்தி நிற்கின்றது. 'இருக்கிறம்' தொடர்ந்து இருக்க எனது வாழ்த்துக்கள்.

**- அல்பேர்ட் றொமிஜோதினி**
**சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.**

சஞ்சிகைகள் என்றவுடன் இந்திய சஞ்சிகைகளையே நமது மக்கள் தேடிப்பிடித்து வாங்குகின்றனர். ஆனால் இவற்றில் மாற்றத்தை கொண்டு வந்த சஞ்சிகை 'இருக்கிறம்' தான். 'இருக்கிறம்' சஞ்சிகையின் ஆசிரியருக்கு என்னுடைய வாழ்த்துக்கள். எனினும் உங்கள் சஞ்சிகையில் இன்னும் மக்களின் சந்தேகங்களை தீர்க்கக்கூடிய வகையில் கேள்வி - பதில் பகுதி ஒன்றினை ஆரம்பிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கின்றேன். காரணம் அப்போதுதான் இன்னும் பல நேயர்கள் அதிகரிப்பார்கள்.

**- எஸ். வீணலோஜினி**
**ஜெம்பட்டா வீதி, கொழும்பு - 13.**

இருக்கிறமின் 64 ஆவது இதழ் வரை முழுமையாக வாசித்த நான் 65 ஆவது இருக்கிறமை எதிர்பார்க்கின்றேன். இருக்கிறமின் இருப்புப் பற்றி பல தகவல்கள் எனது காதுக்கு எட்டியது. அவற்றின் உண்மைத் தன்மையை என்னால் ஊகிக்கக்கூட முடியவில்லை. இலங்கையில் மிகத் தரமான ஒரு தமிழ் சஞ்சிகை என்றால் அது 'இருக்கிறம்' ஆகத்தான் இருக்கின்றது. பல இடர்கள் வந்து சூழ்ந்துள்ள நிலையிலும் என்னைப் போன்ற வாசகர்களின் ஆவல் உங்களுக்கு ஒரு உந்துதலை அளிக்கும் என்ற நம்பிக்கையிலேயே நான் இதை எழுதி அனுப்பி வைக்கின்றேன். இருக்கிறமின் தொடர் இருப்பை எதிர்பார்க்கும் வாசகன்.

- ரா. கார்த்திகேயன், கொட்டகல

'இருக்கிறம்' ஆசிரியருக்கு வணக்கம், இருக்கிறமின் வாசகர்களில் நானும் ஒருவன். பல ஆக்கங்களை புதுப்புது வடிவங்களில் வழங்கிக் கொண்டிருக்கும் இருக்கிறமின் பணிகள் தொடர என் வாழ்த்துக்கள். 64 ஆவது இதழை வாசித்தேன். 'காற்றாய் வருவேன்' திகில் தொடர் முற்றுப்பெற்றது கவலையாக இருந்தது. இது போன்ற திகில் சம்பவங்களை தொடர்கதைகளாக 'இருக்கிறம்' சஞ்சிகை வெளியிட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன். தரமான ஆக்கங்களை வெளியிடும் உன் தமிழ்ப்பணி தொடரட்டும்.

**- ம. புவிதரன், பெரியநீலாவணை.**

சென்ற 'இருக்கிறம்' பார்த்தேன். வழமையாக பத்திரிகைகளில் அவர்களது ஒரு படம் அல்லது ஒருவரது எண்ணம் பற்றியே பார்க்கக் கிடைக்கும். ஆனால் சூரியனின் முன்னணி அறிவிப்பாளர்களின் வண்ணப் புகைப்படங்களை பிரசுரித்ததோடு அவர்களது சுவாரஸ்யமான உரையாடலையும் தந்து அசத்திவிட்டீர்கள். வாழ்த்துக்கள்.

**- க. நீரஜா**
**அளுத்மாவத்தை, மோதர.**

## குடும்ப...

(24ஆம் பக்கத் தொடர்ச்சி...)

தனியார் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு கிட்டத்தட்ட இரண்டு வாரங்கள் பிளாஸ்டிக் சத்திரசிகிச்சையளிக்கப்பட்டதன் பின்னர் தற்பொழுது வீடு திரும்பியுள்ளார். தன் கணவனின் கொடுமைகளை இனியும் தாங்கிக் கொண்டிருக்க முடியாத நிலையில் கணவனிடமிருந்து விவாகரத்துப் பெறுவதற்கு அவர் தீர்மானித்திருந்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன.

குடும்ப வன்முறை என்கின்றபோது அது ஏதாவது ஒரு உறவுமுறையான ஆண் வர்க்கத்திடமிருந்து தினமும் ஒரு பெண் ஏதோ ஒரு வகையில் சித்திரவதைக்கும் பாலியல் ரீதியிலும் உள்ளாக்கப்படுகிறாள். என்றாலும் கணவன்-மனைவி என்ற உறவுப் பாலம்தான் அதிகளவில் சேதமடைகிறது. இணைந்த வேகத்தில் பிரிபவர்களும் உள்ளனர். வயது சென்று விவாகரத்து செய்பவர்களும் உண்டு.

கணவனால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுக்கொண்டதன் பின்னர் முதல் தடவையாக சுவர்ணமாலி பாராளுமன்றில் கடந்த வாரம் உரையாற்றினார். வீட்டு வன்முறைகளை இல்லாதொழிப்பதற்கு ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டிருந்தார். இலங்கைப் பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானது என தெரிவித்த அவர் சில ஊடகங்கள் தமக்கு அபகீர்த்தி ஏற்படும் வகையிலான செய்திகளை வெளியிட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

இதற்குச் சில நாட்களின் பின்னர் உபேக்ஷா சுவர்ணமாலி திவயின பத்திரிகைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் கணவனின் கொடுமைகள் தாங்க முடியாத காரணத்தால் சொந்த விருப்பத்தின் பேரில் விவாகரத்துச் செய்வதற்குக்கூட இந்த அரசாங்கம் இடமளிப்பதாக இல்லையென ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான அவர் குறைபட்டுக் கொண்டார்.

தன் கணவனிடமிருந்து விவாகரத்துப் பெறுவதைத் தடுப்பதற்கு பல அமைச்சர்களும் அரசாங்கத்தின் உயர்மட்ட முக்கியஸ்தர்களும் தன்மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதாக தெரிவித்துள்ளார். ஆயினும் "என் வீட்டில் நடக்கும் கொடுமைகளை நன்கறிந்தவள் என்ற ரீதியிலும் அவற்றுக்கு முகம் கொடுப்பது நான் தானே தவிர என்னைத் தடுக்க முயல்பவர்கள் அல்ல என்ற வகையிலும் என் முடிவிலிருந்து பின் வாங்க நான் தயாராக இல்லை. நான் தற்போது சட்டத்தரணிகளின் ஆலோசனைகளைப் பெற்றுள்ளேன். அதன் பின் மிக விரைவில் விவாகரத்து வழக்கைத் தாக்கல் செய்யவுள்ளேன்" என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

குடும்ப வாழ்க்கை என்பது நேற்று நடந்து, இன்று வாழ்ந்து, நாளை பிரிவதில்லை. ஆயினும் விஞ்ஞான தொழில்நுட்பம் எந்தளவுக்கு வளர்ச்சியடைந்து வியப்பூட்டும் அளவுக்கு முன்னேறியுள்ளதோ அதனை விடப் பலமடங்கு குடும்ப வன்முறையும் அட்டூழியமும் தலைவிரித்தாடுகின்றன. உடல்ரீதியிலான தாக்குதல், பாலியல் தொல்லை, வசைச் சொற்கள், உணர்வுரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் அச்சுறுத்தல் ஆகிய அனைத்தும் குடும்ப வன்முறை என்று குறிப்பிடப்படுகிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால் குடும்பத்தில் உள்ள பெண்களை அடித்தல், திட்டுதல், வேலைக்குச் செல்லவிடாமல் தடுத்தல், குடும்பத்தினருடனும் தோழிகளுடனும் பழகவிடாமல் தடுத்தல், மனைவியை உடலுறவுக்கு நிர்ப்பந்தித்தல், குடும்பத் தேவைக்கான தொகையைக் கொடுக்காமல் இருத்தல், மனைவியின் சம்பளத்தைப் பறித்தல் என்று பலவகையான செயல்கள் வன்செயல்கள் ஆகின்றன. இந்தக் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் இலங்கையின் குடும்ப வன்முறைத் தடைச் சட்டத்தின் கீழ் ஏழு ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனையும் குற்றத்தின் தன்மையைப் பொறுத்து தண்டப்பணமும் விதிக்கப்படும். ஆனால் குற்றவாளி தனக்கிருக்கும் அரசியல் போன்ற செல்வாக்குகளைப் பயன்படுத்தி வெளியில் வர நிறைய சந்தர்ப்பங்களுண்டு. அப்படிப்பட்ட வேலைகளில் தொடர்ந்து இவ்வாறான குற்றச்செயல்கள் அதிகரிக்க வாய்ப்பிருக்கின்றது. ஆகவே இலங்கையில் இதற்கான தண்டனைகள் கடுமையாக்கப்படவேண்டும்.

சட்டப்பூர்வமான மனைவி மட்டுமல்ல அவருடன் வசிக்கும் மண உறவுக்கு அப்பாற்பட்ட தொடர்புகளுக்கும் இது பொருந்தும். மகள், அம்மா, சகோதரி, ஆண் அல்லது பெண் குழந்தை என்று சம்பந்தப்பட்ட ஆணுடன் வசிக்கும் பிற உறவினர்களும் அந்த ஆணால் பாதிக்கப்பட்டால் புகார் அளிக்கலாம். இந்தப் புகாரைப் பாதிக்கப்பட்டவர் மட்டுமே அளிக்க வேண்டிய கட்டாயமும் இல்லை. அக்கம்பக்கம் வசிப்பவர்கள், சமூக ஊழியர்கள் மற்றும் மாதர் சங்க உறுப்பினர்கள்கூட தெரிவிக்கலாம். இது பெண்களுக்கு மட்டும்தான் என்பதல்ல. பாதிக்கப்பட்ட ஆண்களுக்கும் இச்சட்டம் புகலிடம் கொடுக்கின்றது. ஆனால், நூற்றுக்கு 90 சதவீதமாக பாதிக்கப்படுவது பெண்கள் என்ற படியாலேயே இங்கு பெண்கள் பற்றி கதைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அடக்கம், பயம் என்னும் உணர்வுகளினால் ஆட்கொள்ளப்பட்டு வளர்க்கப்படும் பெண்களுக்கு வலு இல்லை என்று அர்த்தமில்லை. தம்மைச் சுற்றியுள்ள சாதகமற்ற சூழ்நிலையிலிருந்து மீண்டெழ அவர்கள் முயற்சித்தார்களேயானால் அவர்களால் நிச்சயம் முடியும். அதற்கான தன்னம்பிக்கையும் மன உறுதியையும் கொண்டிருக்க வேண்டும். இவ்வகையான வன்முறைகளில் ஈடுபடும் ஆண்களே! உங்களைச் சுற்றியுள்ளவர்கள் கௌரவத்துடனும் கண்ணியமாகவும் நடத்தப்படும்போது அந்த உறவுகளினால் உங்கள் வாழ்க்கையில் ஏற்படக்கூடிய சந்தோசத்தினை சற்று எண்ணிப்பாருங்கள். மொத்தத்தில் இந்த குடும்ப வன்முறை அடியோடு இல்லாதொழிக்கப்படவேண்டும். அது இரு தரப்பினரது கைகளில்தான் தங்கியுள்ளது.

# குடும்ப வன்முறைக்கு ஆளாகிய பாராளுமன்ற உறுப்பினர்

**கணவனால் மிகக்கோரமாகத் தாக்கப்பட்டு கனவுகள் சிதைக்கப்பட்ட நிலையில் இன்று விவாகரத்தை நாடியிருக்கும் பிரபல நடிகையும் பாராளுமன்ற உறுப்பினருமான உபேக்ஷா சுவர்ணமாலி**

பிரபல சிங்கள சினிமா நடிகையும் கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான 'பபா' என்றழைக்கப்படும் உபேக்ஷா சுவர்ணமாலி கடந்த பொதுத்தேர்தலில் ஐ.தே.கட்சியில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிட்டதைத் தொடர்ந்து மிகப் பிரபல்யமானதோர் கதாபாத்திரமாக சமூகத்தில் அறியப்பட்டார். இவர் அதிகப்படியான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டு பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவானார். ஆனால், 18ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின்போது திடீரென அரசின் பக்கம் தாவி தனது ஆதரவைத் தெரிவித்தார். அரசுடன் இணைந்ததைத் தொடர்ந்து அரசியல் அரங்கில் அவர் பற்றிய பல்வேறு கதையாடல்கள் ஏற்பட்டதால் பிரபலமான கதாபாத்திரமாக மாறினார். கடந்த பெப்ரவரி மாதம் உபேக்ஷா சுவர்ணமாலி கணவரால் கொடூரமான முறையில் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட செய்திகளை நீங்கள் பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள். இதெல்லாம் பழைய கதைகள். சரி, இனி விடயத்திற்கு வருவோம்.

வாழ்க்கை என்ற நூலகத்தின் முக்கியமான பகுதிதான் திருமணம் என்ற குடும்ப வாழ்க்கை. திருமணத்தின் மூலம் வாழ்க்கை எவ்வளவு முழுமையடைகிறதோ அல்லது எத்தனை சதவீதம் வெற்றியடைகின்றதோ தெரியாது. ஆனால், குடும்ப வாழ்க்கைக்குத் தலைமை வகிக்கின்ற கணவனின் துன்புறுத்தலுக்கு ஆளாகி உடல், உளரீதியாகப் பெரும்பாலான பெண்கள் பாதிக்கப்பட்டு நிம்மதியை இழக்கின்றார்களென்பதே உண்மை. இந்தக் குடும்ப வன்முறை, அட்டூழியம் என்பன எமது நாட்டு பெண்களுக்கு மட்டுமல்ல, உலகப் பெண்களுக்கே மாறாத விதியாகிவிட்டது.

பிரபல நடிகையும் நாடாளுமன்ற உறுப்பினருமான உபேக்ஷா சுவர்ணமாலி மீதான இத்தாக்குதலின் சம்பந்தப்பட்ட இவ்விசாரணை சிறுவர்கள் மற்றும் பெண்கள் பிரிவில் கொடுக்கப்பட்டதன் காரணம் என்ன என்று சிலர் யோசிக்கக்கூடும்.

இவர் தாக்கப்பட்டதன் பின்னணியில் அவர்களது குடும்பப் பிரச்சினையே இருந்துள்ளது என்பதாலேயே, இவ்விசாரணை



வெளிப்பாடாக வாகனத்தினுள் வைத்து அவர் கணவரால் தாக்கப்பட்டார். அப்போது அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் வாகனத்தினுள் இருந்தது குறிப்பிடத்தக்க விடயமாகும். அத்தாக்குதலைத் தடுப்பதற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு அவ-



காரணகர்த்தாவாக இருந்தவர் அவரது கணவரான மகேஷ் சமிந்த வலவேகம. இவர் உபேக்ஷாவை பலமாகத் தாக்கி முகத்தில் கோரமான காயங்களை ஏற்படுத்தியிருந்தார். இதனால் உபேக்ஷா பொலிஸில் முறையிட, மகேஷ் தலைமறைவாகியிருந்தார். சம்பவம் நடந்த இரண்டு வாரங்களுக்கு பின்னரேயே அவர் பொலிஸில் சரணடைந்தார். இது தொடர்பாக

## நாகாமத்தான்

பல்வேறுபட்ட தகவல்கள் கசிந்த நிலையில் கொழும்பு மாவட்ட பொலிஸ் உயர் அத்தியட்சகர் தயா சமரவீர மற்றும் நுகேகொட வலயப் பொலிஸ் பொறுப்பதிகாரி தேசபந்து தென்னக்கோன் ஆகியோரின் மேற்பார்வையில் மீரிஹன பொலிஸின் குழந்தை மற்றும் பெண்கள் பிரிவினூடாக இத்தாக்குதல் தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவின் அத்தியட்சகர் சிசில் த சில்வாவின் ஆலோசனைகளின் பெயரிலேயே இவ்விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது.

உபேக்ஷா சுவர்ணமாலி சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் நடந்த அன்றிரவு உபேக்ஷா 119 பொலிஸ் பிரிவிலேயே முறையிட்டுள்ளார். அவரின் இடதுபக்கக் கண்ணின் அருகாமையில் வீக்கமும் முகத்தில் ஓர் இரத்தக் காயத்துடனும் உடம்பில் பல இடங்களில் கீறல்களுடனும் ஜயவர்த்தனபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. உபேக்ஷா சுவர்ணமாலியை அவருக்காக நியமிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு அதிகாரிகளே வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். உபேக்ஷா சுவர்ணமாலி மற்றும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் விசாரணைகளைத் தொடர்ந்து கிடைத்த தகவல்களின் அடிப்படையில் பிலியந்தலையில் அமைந்துள்ள கணவனின் வீட்டிற்குச்சென்று மீண்டும் தலபத்பிட்டியவில் அமைந்துள்ள அவர்களின் வீட்டிற்கு இரவில் திரும்பிவரும்போதே இப்பிரச்சினை ஆரம்பித்ததாகவும் கணவனின் வீட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலையே இப்பிரச்சினைக்கு மூலகாரணம் எனவும் தெரியவந்துள்ளது. அதீத கோபத்தின் காசம் இருந்தபோதிலும் அவர்களின் குடும்பப் பிரச்சினையில் தலையிடுவது பற்றி இருமுறை சிந்திக்க வேண்டியிருந்தது. இத்தாக்குதல் அவர்களின் தலபத்பிட்டிய வீட்டை அடையும்வரை தொடர்ந்ததாகவும் வாகனம் வீட்டின் முற்றத்தில் வந்து நின்றதைத் தொடர்ந்து அவரின் கணவர் அவரை இழுத்துச்சென்று தொடர்ந்து தாக்கியதாகவும் கூறப்படுகின்றது. கணவரின் தாக்குதலிலிருந்து தப்பிப்பதற்காக பக்கத்து அறையினுள் நுழைந்து கதவைத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டபோதிலும் கதவையும் உடைத்து மீண்டும் அவரைத் தாக்கத் தொடங்கினார்.

அச்சந்தர்ப் பத்திலேயே உபேக்ஷாவின் வேண்டுதலின் பேரில் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்கள் அவரைக் கணவரிடம் இருந்து பாதுகாத்து ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். சில தினங்கள் அவர் வைத்தியசாலையில் தங்கி விசேட வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் முகத்தில் ஏற்பட்ட காயத்துக்காக பிளாஸ்டிக் சத்திரசிகிச்சை செய்து கொள்வதற்காக லங்கா ஹொஸ்பிட்டல் (அப்பலோ)

(23 ஆம் பக்கம் பார்க்க...)

இச் சஞ்சிகை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் (சிலோன்) லிமிட்டெட்டாரால் கொழும்பு - 14, கிராண்ட்பாஸ் வீதி, 185ஆம் இலக்கத்தில் 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 04ஆம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.